
பொற்கோயில்
பாலமித்ரா☆தொடர்
படக்கதை பகிர்வுகள்



# பொற்கோயில்

## 1

நள்ளிரவு நேரம். அந்த நகரம் ஆழ்ந்த உறக்கத்தில் களைத்துக் கிடந்தது. நகருக்கு வெளியே இருந்த அந்தச் சுடுகாட்டில் ஆங்காங்கே பிணங்கள் எரிந்து கொண்டிருந்தன. அவற்றில் இருந்து கிளம்பிய புகை, சுற்றுப் புறங்களில் கருமையாகப் பரவி ஓடிக் கொண்டு இருந்தது.

அன்று அந்தச் சுடுகாட்டுக்கு வந்த பிணங்கள் அதிகம். அதனால் சுடுகாட்டுக் காவல்காரனுக்கு வேலையும் அதிகம். ஆகவே அவன் அதிகமாகக் களைப்பு அடைந்து அங்கு இருந்த ஒரு கொட்டகையில் உறங்கிக் கொண்டிருந்தான்.

பி.ஆர்.வரதராஜுலு



அந்த நேரத்தில் அங்கு வேகமாகப் பாய்ந்து வந்து நின்ற ஒரு இளைஞன், சுற்று முற்றும் பார்த்தான். அந்த மை இருட்டில் கண்களுக்கு ஒன்றும் தெரியவில்லை. மெதுவாக நடந்தான். மண்டை ஓடுகளும், எலும்புகளும் அவன் கால்களில் இடறின. அவன் அவற்றைக் கால்களால் தள்ளிக் கொண்டே மேலே நடந்தான்.

போய்க் கொண்டிருந்த அவனை, மேடாக இருந்த ஒரு மண் குவியல் தடுத்து நிறுத்தியது. நின்றான். குனிந்தான். மண் குவியலைத் தடவிப் பார்த்தான். அது ஒரு புதை குழி. அதில் போடப்பட்டு இருந்த மண், 'பொல பொல' என்று உதிரியாய் இருந்தது. அன்று தான் அதில் ஒரு பிணம் புதைக்கப் பட்டிருக்க வேண்டும் என்ற முடிவுக்கு வந்த அவன், இடுப்பில் இருந்த ஒரு இரும்புக் கருவியை எடுத்து, 'பர பர' என்று மண்ணைத் தோண்டினன். குழிக்குள் ஒரு சவப் பெட்டி இருந்தது. அதன் மூடியைத் திறந்தான்.

'அப்பா! நீங்கள் இங்கேதான் புதைக்கப்பட்டீர்களா? இருட்டில் உங்கள் முகம் தெரியவில்லையே! என்னை அன்புடன் தடவிக் கொடுப்பீர்களே! அந்தக் கையை என்னால் பார்க்க முடிய வில்லையே அப்பா! நெஞ்சு நிறையக் கோபம் இருந்தாலும் அதை அணைத்துக்கொண்டு குளிர்ந்த பார்வையால் பார்ப்பீர்களே! அந்தக் கண்களை என்னால் பார்க்க முடியவில்லையே!'' என்று கண்ணீர் விட்டான். 'வெளிச்சத்திற்கு என்ன செய்வது?' என்ற சிந்தனையுடன் சுற்றுமுற்றும் பார்த்தான்.

பிறகு எழுந்து சென்று சுடுகாட்டுக் காவல்காரனின் அருகே எரிந்து கொண்டிருந்த திவட்டியை எடுத்து வந்தான். பெட்டிக்குள் வைக்கப் பட்டு இருந்த பிணத்தைப் பார்த்தான். கண்ணீர் பொங்கி வர, "அப்பா! மரணம் உங்களை இயற்கையாகத் தழுவவில்லை. நீங்கள் கொல்லப்பட்டு விட்டீர்கள். நான் ஊருக்குப் போய் விட்டுத் திரும்பு

வதற்குள் நீங்கள் எம லோகம் போய் விட்டீர்களே அப்பா!" என்று புலம்பினான். "அப்பா! உங்களுக்குச் செய்ய வேண்டிய இறுதிச் சடங்குகளைக் கூட என்னைச் செய்ய விடாமல், அவசரம் அவசரமாகப் புதைத்து விட்டார்கள் நயவஞ்சகர்கள். அதற்கு என்ன காரணம்?" என்று தனக்குத் தானே கேட்டுக் கொண்டு பிணத்தைப் பார்த்தான்.

பிணத்தின் உடல் நீலமாக இருந்தது. அது மட்டும் அல்ல. உடல் முழுதும் வரி வரியாகக் காயங்கள் இருந்தன. "எனக்கு விஷயம் புரிந்து விட்டது அப்பா! உங்களைச் சவுக்கால் அடித்து இருக்கிறார்கள். அப்பொழுதும் நீங்கள் சாகவில்லை. அதனால் உங்களை விஷம் கொடுத்துக் கொன்று விட்டார்கள். அரசாங்க வைத்தியரான உங்களுக்கு இந்த அநியாய முடிவு ஏன்? நீங்கள் உயிரோடு இருந்தது யாருக்குத் தீமை? மன்னருக்கா? மந்திரிக்கா?" என்று ஆத்திரமாக எழும்பிய அவன் குரல், காற்றை ஆவேசமாகக் கிழித்தது.

"எனக்குத்தான் தீமை!" என்று பதிலாக வந்த குரலைக் கேட்டுத் திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்தான் அவன்.

எதிரே மந்திரி மகேந்திரனும், ஏராளமான படை வீரர்களும் நின்று கொண்டு இருந்தார்கள்.

அவன் மந்திரியைக் கனல் தெறிக்கப் பார்த்தான். "மந்திரியாரே!



என் தந்தை மாரடைப்பால் மரணம் அடைந்ததாக நீங்கள் சொன்னீர்கள். உங்கள் பேச்சை நம்பாத நான், இங்கு வந்து குழியைத் தோண்டிப் பார்த்தேன். என் சந்தேகம் சரியாகி விட்டது. என் தந்தை இயற்கையாகச் சாகவில்லை. அவர் அடித்துக் கொல்லப்பட்டு இருக்கிறார். அவரைக் கொன்ற கொடுமைக்காரன் யார்?" என்று கொதிப்புடன் கேட்டான்.

"மகுடபதி! உன் கேள்விக்குப் பதில் சொல்ல நான் இங்கு வரவில்லை. நான் சொன்னதை நம்பாமல் நீ இங்கு வந்து பிணத்தைத் தோண்டிப் பார்ப்பாய் என்பது



எனக்குத் தெரியும் அதனால்தான் நான் உன்னைப் பின் தொடர்ந்து வந்தேன்!" என்ற மந்திரி, "காவலர்களே! இந்தப் புரட்சிக்காரனை இழுத்துக் கொண்டு போய்ச் சிறையில் அடையுங்கள். நாளைக் காலையில் நம் காட்டு தர்பாரில் இவனைக் கொண்டு வந்து நிறுத்துங்கள். இவனை நான் அனுப்ப வேண்டிய இடத்திற்கு அனுப்பி வைக்கிறேன். அந்தப் பிணத்தைச் சரியாகப் புதைத்து விட்டுச் செல்லுங்கள்" என்று ஆணை இட்டு விட்டு அந்த இடத்தை விட்டுக் கிளம்பினான் மந்திரி.

சிலர் பிணத்தைப் புதைக்கும் வேலையில் ஈடுபட்டனர் இன்னும் சிலர் மருடபதியைக் கயிற்றால் கட்டி, குதிரையில் ஏற்றிக்கொண்டு சென்றார்கள்.

• • •

சரியாக அதே நேரம். மணிப்பூர் நாட்டின் தலை நகரம். ராஜ வீதியில் உள்ள ஒரு பெரிய மாளிகை. அதன் வாசலில் பத்துப் பேர்களுக்கும் அதிகமான முரடர்கள் வந்து நின்றார்கள். அவர்களுக்கு நடுவே 'ஜாஸ்மின்' என்ற மந்திரிக்கு வேண்டிய உயரமான பெண் ஒருத்தியும் காணப்பட்டாள். முரடர்களில் ஒருவன் கள்ளச் சாவியைக் கொண்டு வாசல் கதவைத் திறந்தான்.

அந்தப் பெண் மாளிகைக்குள் பூனையைப் போல நுழைந்தாள்.

அவளைத் தொடர்ந்து முரடர்களும் சென்றார்கள். அவள் ஒரு ஜன்னல் ஓரமாக வந்து நின்று கொண்டு ஒரு அறைக்குள் பார்வையை ஓட்டினாள். அறைக்குள் இரு இளைஞர்களும், ஒரு பெண்ணும் கவலையோடு பேசிக் கொண்டு இருந்தார்கள். அவர்கள் பேசுவதை அவள் காது கொடுத்துக் கேட்டாள்.

அறைக்குள் இருநதவர்களுள் ஒருவனான கேசரி, "என் சந்தேகம் உண்மையாகி விட்டது. மந்திரி ஒரு விஷப் பாம்பு. அவன் அரசவை வைத்தியர் அமரேசரை விஷம் தந்து கொன்று விட்டு, அவர் மாரடைப்பால் மரணம் அடைந்தார் என்று பொய்யை அவிழ்த்து விட்டு விட்டான். எல்லோரும் அதை நம்பி விட்டாலும் நான் நம்பத் தயாராக இல்லை. ஆனால் இதை நான் வெளியே சொன்னால் மந்திரி என்னை உயிரோடு விட மாட்டான். அதனால்தான் நான் இந்த இரவு நேரத்தில் வந்து உங்களிடம் உண்மையைச் சொல்கிறேன்!" என்றான்.

"மந்திரியின் அட்டகாசம் அளவுக்கு அதிகமாகப் போய்க் கொண்டிருக்கிறது கேசரி! குள்ள நரி போன்ற மந்திரியின் பிடியிலிருந்து நம் நாட்டையும். மன்னரையும் நாம் காப்பாற்றியே தீர வேண்டும்" என்று உணர்ச்சி தெறிக்கப் பேசினான் ராஜசேகர்.

"கொல்லப்பட்ட அரசாங்க வைத்தியரின் மகன் மகுடபதி நாளைக்கு



வந்து விடுவார். அவரையும் நம் புரட்சி அணியில் இணைத்துக் கொள்வோம். மந்திரியின் சூழ்ச் சிக்கு ஒரு முடிவு கட்டுவோம்" என்றாள் அவர்கள் நடுவே நின்ற 'நித்யா' என்ற பெண்.

அவர்கள் பேசியதை எல்லாம் கவனமாகக் கேட்டுக் கொண்டு இருந்த ஜாஸ்மின், ஆவேசமடைந் தாள். அறைக் கதவைத் திறந்து கொண்டு உள்ளே நுழைந்தாள்.

அவளைக் கண்டதும் அவர்கள் அதிர்ச்சி அடைந்தார்கள்.

"மந்திரிக்கு எதிராகப் புரட்சி செய்யத் துடிக்கும் உங்களைப் பற் றிய தகவல் கிடைத்தது. 'அது உண்மையா?' என்று அறிய வந் தேன். நீங்கள் புரட்சிக்காரர்கள் மட்டும் அல்ல; பூண்டோடு ஒழிக்கப் படவும் வேண்டியவர்கள்" என்ற ஜாஸ்மின், கைகளைத் தட்டினாள்.

உடனே முரடர்கள் அங்கே வந்து மொய்த்துக் கொண்டார்கள்.

ஜாஸ்மின் அவர்களைப் பார்த்து, "இவர்களைக் கொண்டு போய்ப் பாதாளச் சிறையில் அடைத்து வையுங்கள். நாளைக் காலையில் இவர்களைக் காட்டு தர்பாருக்கு இழுத்து வாருங்கள். மந்திரி இவர் களுக்குத் தக்க தண்டனையை அளிப் பார்" என்று கூறி முடிப்பதற்குள், அவர்களைக் கட்டி இழுத்துக் கொண்டு நடந்தார்கள் அவளுடன் வந்த முரடர்கள்.

• • •

மறு நாள் காலை. மணிப்பூர் நகரை ஒட்டிய காட்டில், மகுடபதி யும், கேசரியும், ராஜசேகரும், நித்யாவும் கயிற்றால் கட்டி நிறுத்தி வைக்கப்பட்டிருந்தனர். அவர்களுக் குப் பின்னால் வீரர்கள் வரிசையாக நின்று கொண்டு இருந்தார்கள். அவர்களுக்கு முன்னால் மந்திரி மகேந்திரனும், அவனுடைய வலது கையான ஜாஸ்மினும் நின்று கொண்டு இருந்தார்கள்.

மந்திரி செருக்குடன் அவர்களை நோக்கிச் சென்றான். "நீங்கள் நால் வரும் என்னைப் பற்றிய உண்மை களைத் தெரிந்து வைத்திருக்கிறீர் கள். அரசரை நடைப் பிணமாக்கி விட்டு, நான் அவர் பெயரில் ஆணை யைப் பிறப்பித்து ஆட்சி நடத்து கிறேன். என்னை யாரும் சந்தேகிக்க வில்லை. ஆனால் நீங்கள் சந்தேகிக் கிறீர்கள். இனி உங்களை நான் உயி ரோடு விடப் போவதில்லை. கொல் லப் போகிறேன்" என்றான்.

"நாங்கள் சாகப் போவது நிச்ச யம். அதற்கு முன்னால் உன் ஜாத கத்தை அறிந்து கொள்ள விரும்பு கிறோம். மன்னரை நீ என்ன செய் தாய்?" என்று கோபமாகக் கேட் டான் மகுடபதி.

"சாகப் போகிற உங்களிடம் உண்மையைச் சொல்ல என்ன பயம்? நான் ஒரு துறவியிடம் ஒரு மந்திரக் குளிகையை வாங்கி, அதை மன்னருக்குத் தந்து சாப்பிட வைத் தேன். அந்தக் குளிகை மன்னரின்



வயிற்றில் இருக்கும் வரை எனக்கு அவர் அடிமை. நான் அவரை அடிமையாக்கி, அவர் பெயரில் ஆணைகளைப் பிறப்பித்து, நானே மன்னனாக அரசாள்கிறேன்" என்றான் மந்திரி.

"தந்திரமாகத்தான் நீ எல்லாவற்றையும் செய்து இருக்கிறாய். மன்னரை புத்தி குழம்பிய நிலையில் கொண்டு போய் நிறுத்தி விட்டு, அது மற்றவர்களுக்குத் தெரியாதபடி நீ நாட்டை ஆள்கிறாய்" என்று எரிச்சலுடன் கூறினான் கேசரி.

"அந்தப் பயங்கரத்தில் இருந்து மன்னரைக் காப்பாற்றமுடியாதா?" என்று கவலையுடன் கேட்டான் ராஜசேகர்.

"முடியும். பொற்கோயிலிலுள்ள மந்திர புஷ்பத்தைக் கொண்டுவந்து அதை மன்னரிடம் தந்து முகர்ந்து பார்க்கச் சொன்னால், அவர் பழைய நிலையை அடைவார்" என்றான் மந்திரி.

"மகேந்திரா! உனக்கு என்ன பைத்தியமா? நம் எதிரிகளான இவர்களிடம் போய் உண்மையைச் சொல்லலாமா?" என்று கோபத்துடன் சீறினாள் ஜாஸ்மின்.

"சொன்னால் என்ன ஜாஸ்மின்! இவர்கள்தான் சாகப் போகிறார்களே! இவர்களுக்கு நான் வழங்கப் போகும் பயங்கரத் தண்டனை என்ன என்பதைக் கூறுகிறேன். கேளுங்கள்" என்று அதைப் பற்றிக் கூறத் தொடங்கினான் மந்திரி.

சாவின் எல்லையிலே நிறுத்தி வைக்கப்பட்டு இருந்த அந்த நால்வரும், அவன் கூறியதை அமைதியாகக் கேட்டுக் கொண்டு இருந்தார்கள்.

மந்திரியின் ஆட்கள் எதைச் செய்யவும் தயாராக இருந்தார்கள்.

அப்பொழுது அது எதிர்பாராத விதமாக நடந்தது.

(தொடரும்)




பொற்கோயில்
2 .
முன் கதை: மணிப்பூர் நாட்டின் மந்திரி மகேந்திரன், மன்னனுக்கு ஒரு மந்திரக் குளிகையைத் தந்து அவனை அடிமையாக்கிக் கொண்டு, அவனுக்குப் பதிலாக நாடாள்கிறான். மன்னனுக்கு வேண்டிய வைத்தியர் அமரேசரைக் கொல்கிறான். அவனுக்கு எதிராகப் புரட்சி செய்த அமரேசரின் மகன் மகுடபதி, கேசரி, ராஜசேகர், நித்யா ஆகிய நால்வரையும், ஜாஸ்மின் என்ற பெண்ணின் துணையோடு கைது செய்து, அவர்களைக் கொல்வதற்காகக் காட்டில் கொண்டு போய் நிறுத்துகிறான். இனி....
பி.ஆர்.வரதராஜுலு



ஜாஸ்மின் ஒரு கட்டாரியை எடுத்து அவர்களை நோக்கி வீச முயன்றாள். மந்திரி மகேந்திரன் அவளிடம் இருந்த கட்டாரியைப் பறித்துக் கொண்டு, "அவர்களைச் சாக வைப்பதற்கு நீ ஏன் அவசரப்படுகிறாய்? அவர்களுக்கு நான் விநோதமான தண்டனையைக் கொடுக்க விரும்புகிறேன்" என்று கூறி, தன் வீரர்களைப் பார்த்தான். "வீரர்களே! கட்டுகளை அவிழ்த்து அவர்களை விடுதலை செய்து, காட்டில் விரட்டி விடுங்கள். அதிர்ஷ்டம் இருந்தால் அவர்கள் உயிர் பிழைக்கட்டும். இல்லாவிட்டால் செத்து ஒழியட்டும்" என்றான்.

"மகேந்திரா! உனக்கு என்ன பைத்தியமா? அந்தப் புரட்சிக்காரர்களை ஏன் விடுதலை செய்யச் சொல்கிறாய்?" என்று கோபமாகக் கேட்டாள் ஜாஸ்மின்.

"நீ மிகவும் அவசரப்படுகிறாய் ஜாஸ்மின்! பொறுமையாகக் கேள். அவர்களை விடுதலை செய்த சிறிது நேரத்திற்குப் பிறகு நமது பத்து வீரர்கள் அவர்களை வேட்டையாடுவதற்குப் புறப்பட்டுச் செல்வார்கள். வீரர்களைத் தொடர்ந்து நீ வில் அம்புகளுடன் அவர்களைக் கொன்று குவிக்கப் போவாய். அதன் பிறகு நமது மனித அரக்கன் அவர்களை இரையாக்குவதற்குப் புறப்படுவான். கடைசியாக நான் தேரில் ஏறி அவர்களை யம லோகம் அனுப்பப் புறப்படுவேன். இத்தனை பேர்களையும் தாண்டி அவர்கள் உயிரோடு காட்டை விட்டுப் போக முடியுமா? நாம் அவர்களை விட்டாலும், இங்குள்ள பயங்கர மிருகங்கள் அவர்களை உயிரோடு விடுமா?" என்று கேட்டான் மகேந்திரன்.

ஜாஸ்மின் பலமாகக் கை தட்டிக் கொண்டே, "பலே மகேந்திரா! அவர்களை ஒரேயடியாகக் கொல்லாமல், பயத்தால் கலங்க வைத்துக் கொஞ்சம் கொஞ்சமாகக் கொல்ல நினைக்கிறாய். பிரமாதம்!" என்றாள்.

"வீரர்களே! முதலில் நித்யாவை விடுதலை செய்து ஒரு பக்கமாக அனுப்புங்கள். பிறகு ஒவ்வொருவராக விடுதலை செய்து வெவ்வேறு

பக்கங்களில் அனுப்புங்கள். நால் வரையும் ஒரே பக்கமாக மட்டும் அனுப்பி விடாதீர்கள்" என்று ஆணை பிறப்பித்தான் மகேந்திரன்.

வீரர்கள் முதலில் நித்யாவின் கட்டுகளை அவிழ்த்து விடுதலை செய்தார்கள். அவள் அச்சத்துடன் முன் நோக்கி நடந்த போது மகுடபதியின் பக்கமாகக் கலக்கத்துடன் திரும்பிப் பார்த்தாள்.

"கலங்காமல் போ நித்யா! நான் சமயத்தில் வந்து உன்னைக் காப்பாற்றுவேன்" என்று ஆறுதல் கூறினான் மகுடபதி.

பிறகு மகுடபதியும், ராஜசேகரும், கேசரியும் தனித் தனியாக விடுதலை செய்யப்பட்டு, வெவ்வேறு திசைகளில் நிதானமாக அனுப்பப் பட்டார்கள்.



மகேந்திரன் மொத்த வீரர்களில் பத்து வீரர்களைத் தேர்ந்து எடுத்து, "வீரர்களே! அந்த நான்கு பேர்களையும் கொல்லாமல் நீங்கள் நாடு திரும்பக் கூடாது" என்று எச்சரித்து, அவர்களை அனுப்பி வைத்தான்.

அதற்குள் ஜாஸ்மின குதிரையில் தாவி ஏறிக் கொண்டு, "மகேந்திரா! நமது வீரர்களிடம் இருந்து தப்பினாலும், என்னுடைய அம்பிலிருந்து அவர்கள் தப்ப முடியாது. வருகிறேன்" என்று கூறிவிட்டு, குதிரையைத் தட்டிப் பறக்க விட்டாள்.

அவள் செல்வதையே கொஞ்ச நேரம் பார்த்துக் கொண்டு இருந்த மகேந்திரன், "அரக்கா!" என்று குரல் கொடுத்தான்.

அடுத்த கணம் மாமிச மலையைப் போன்ற தோற்றத்துடன் அவன் எதிரே வந்து நின்றான் ஒரு மனித அரக்கன். அவன் தோற்றமே விசித்திரமாக இருந்தது. அவன் தலையின் நடுப் பாகத்தில் முள்ளம் பன்றி முடி. இரண்டு கண்களில் ஒன்று பச்சை நிறம். அதிலிருந்து திரவம் போல ஏதோ ஒன்று எப்பொழுதும் வழிந்து கொண்டே இருந்தது. கழுதைக் காதும், மூஞ்சூறு மூக்குமாய் காணப்பட்ட அந்த மனித அரக்கனைப் பார்த்து, "அரக்கா! உனக்கு நீண்ட நாட்களுக்குப் பிறகு மனித



வேட்டை கிடைத்து இருக்கிறது. அந்த நால்வரையும் நீ வேட்டையாடிப் புசி. ஆனால் நம் வீரர்களைப் பலகாரம் செய்து விடாதே!" என்றான் மகேந்திரன்.

'குர், உர்' என்று கத்திக்கொண்டு காட்டில் பாய்ந்து போனான் மனித அரக்கன்.

மகேந்திரன் மிச்சமாக இருந்த வீரர்களைப் பார்த்து, "வீரர்களே! நீங்கள் நாட்டிற்குச் செல்லுங்கள். நம் மன்னனை மற்றவர்கள் நெருங்காதபடி விழிப்பாகக் கண்காணியுங்கள். நான் வேலை முடிந்ததும் வருகிறேன்" என்று கூறி விட்டு, தேரில் ஏறிக் காற்று வேகத்தில் பறந்தான்.

வீரர்கள் நாட்டை நோக்கிச் சென்றார்கள்.

• • •

'எங்கே போகிறோம்?' என்று தெரியாமல், காட்டிற்குள் நடந்து போய்க் கொண்டு இருந்த நித்யா, பயங்கரமான உறுமலைக் கேட்டு ஏறிட்டுப் பார்த்தாள். மரத்தின் மீது இருந்த ஒரு சிறுத்தைப் புலி, அவளை நோக்கிப் பாய்ந்தது. அவள் மரண பயத்துடன் அலறினாள். அப்பொழுது எங்கு இருந்தோ காற்றைக் கிழித்துக்கொண்டு வந்த ஒரு அம்பு, சிறுத்தைப் புலியின் நடு வயிற்றில் ஊடுருவிப் பாய்ந்தது. மறு கணம் அது அலறித் துடித்துக் கொண்டே கீழே விழுந்து இறந்தது.

இந்த ஆபத்தான நேரத்தில் ஆண்டவனைப் போல வந்து தன்னை காப்பாற்றியது யார்? அவள் கேள்விக் குறியுடன் திரும்பிப் பார்த்தாள். அவளுக்காக அங்கே ஒரு ஆச்சரியம் காத்திருந்தது.

• •

ராஜசேகர் தன் அண்ணன் கேசரியையும், தங்கை நித்யாவையும், நண்பன் முகுடபதியையும் தேடிக் கண்டுபிடிக்கும் பரபரப்போடு காட்டுக்குள் போய்க் கொண்டு இருந்தான். அப்பொழுது மகேந்திரன் அனுப்பிய பத்து வீரர்களின் பேச்சுக் குரல் கேட்டது. அவன் சட்டென்று ஒரு அடர்ந்த புதருக்குள் ஓடிப் போய் ஒளிந்து கொண்டான்.

அதைப் பார்த்து விட்ட வீரன் ஒருவன், அங்கு ஓடி வந்து புதருக்குள் ஈட்டியைச் செலுத்திக் குத்தினான். புதருக்குள் இருந்த ராஜசேகர், அந்த ஈட்டியைப் பிடித்துப் பலமாக உள்ளே இழுத்தான். அந்த வேகத்தில் அந்த வீரன் புதருக்குள் வந்து விழுந்தான். அவன் கழுத்தைப் பிடித்துக் கொண்ட ராஜசேகர், தன் கட்டாரியை எடுத்து அவன் நெஞ்சில் ஓங்கிக் குத்தினான். வீரன் ஒலியை எழுப்பாமலே உயிரை விட்டான்.

நீண்ட நேரம் ஆகியும், போனவன் திரும்பி வராததால், மற்றொரு வீரன் அங்கு வந்து ராஜசேகர் இருந்த புதருக்குள் ஈட்டியைப்



பாய்ச்சினான். அவனையும் தீர்த்துக் கட்டினான் ராஜசேகர்.

இரண்டு வீரர்கள் வராமல் போகவே, சந்தேகப்பட்ட எட்டு வீரர்களும் ஒட்டு மொத்தமாய் ராஜசேகர் பதுங்கி இருந்த புதரை நோக்கிப் பாய்ந்து வந்து, ஈட்டிகளை உள்ளே செலுத்தினார்கள். 'இனி உள்ளே இருந்தால் ஆபத்து' என்று கருதிய ராஜசேகர், புதரை விட்டு வெளியே வந்து, ஒருவன் கையில் இருந்த ஈட்டியைப் பறித்து, மின்னல் வேகத்தில் எட்டு வீரர்களையும் குத்திக் கீழே சாய்த்தான். அதற்குப் பிறகு அவர்கள் எழுந்திருக்கவே இல்லை.

மகேந்திரனின் வீரர் படையைப் பூண்டோடு ஒழித்த பிறகு, ராஜசேகர் தன் நண்பனையும், சகோதரர்களையும் தேடி நடந்தான். நீண்ட தூரம் சென்ற பிறகும் யாரும் அவன் கண்களில் தென்படவில்லை. ஒரு மரத்தின் மீது ஏறி, பார்வையைச் சுற்று முற்றும் ஓட்டினான். சிறிது தூரத்தில் கேசரி போய்க் கொண்டு இருந்தான். அவனைப் பார்த்ததும், "கேசரி...." என்று குரல் கொடுத்தான் ராஜசேகர்.

அவனுடைய குரல் கேசரிக்குக் கேட்கவில்லை. அவன் பாட்டுக்குப் போய்க் கொண்டே இருந்தான். ராஜசேகர் வேகமாக மரத்தைவிட்டு இறங்கி, கேசரி போய்க் கொண்டு இருந்த திசையை நோக்கி நடந்தான்.

அப்பொழுது ஒரு வலுவான இரும்புக் கரம் அவன் கழுத்தைச் சுற்றி வளைத்தது. அதனால் விழி பிதுங்கிய ராஜசேகர், தலையைத் திருப்பிப் பார்த்தான். மகேந்திரன் அனுப்பிய மனித அரக்கனின் பிடிக்குள் தன் கழுத்து சிக்கி இருப்பதை அறிந்தான்.

அதற்காக ராஜசேகர் அஞ்சவோ, அயரவோ இல்லை. தன் கட்டாரியை எடுத்து அந்த மனித அரக்கனின் கையில் ஓங்கிக் குத்தினான். அரக்கனுடைய பிடி தளர்ந்தது.

ராஜசேகர் அந்த நேரத்தைப் பயன் படுத்திக் கொண்டு, மனித அரக்கனின் கைகளை விலக்கிக் கொண்டு வேகமாக ஓடினான். மனித அரக்கன் வெறியுடன் கத்திக் கொண்டு அவனைத் தொடர்ந்து ஓடினான்.

'அவனிடம் பிடிபட்டு விடக் கூடாது' என்ற எண்ணத்தில் ஓடிக் கொண்டு இருந்த ராஜசேகர், 'மனித அரக்கன் எவ்வளவு தூரத்தில் வருகிறான்?' என்று பார்ப்பதற்காகத் திரும்பினான். அதனால் அவன் முன்னால் இருந்த ஒரு பெரிய பள்ளத்தைக் கவனிக்கவில்லை. கால் தடுமாறிப் பள்ளத்திற்குள் விழுந்தான்.

அது ஆழமான பள்ளம். எதையும் பிடித்துக் கொண்டு மேலே ஏறி வர முடியாதபடி வழுவழுப்பாக இருந்தது பள்ளம். அவன் 'இனி என்ன செய்வது?' என்ற திகைப்புடன் மேலே ஏறிட்டுப்



பார்த்தான். பள்ளத்தின் மேல் விளிம்பில் மனித அரக்கன் நின்று கொண்டு இருந்தான்.

'நாம் தொலைந்தோம்' என்று ராஜசேகர் எண்ணிய அதே சமயத்தில், அந்த மனித அரக்கன் அவனைப் பார்த்து வெறியுடன் சிரித்துக் கொண்டே பள்ளத்தில் குதிப்பதற்காகக் காலைத் தூக்கினான்.

அப்பொழுது அவன் கால்களை நோக்கிச் சுழன்று அடித்தது ஒரு சவுக்கு. "ஆ...." என்று அலறிக் கொண்டே மண்ணில் மலை போல் சாய்ந்தான் மனித அரக்கன்.

* * *

மகுடபதி தன் நண்பர்களைத் தேடித் தேடிக் களைத்துப் போனான். முகத்தில் ஆறாகப் பெருகிய வியர்வையைத் துடைத்துக் கொண்டான்.

அப்பொழுது, "ஐயோ!...." என்ற அலறலைக் கேட்டுத் திடுக்கிட்ட மகுடபதி, அலறல் வந்த திசைப் பக்கமாகப் பார்வையைச் செலுத்தினான்.

கேசரி ஒரு மரத்தில் கட்டப்பட்டு இருந்தான். அவன் எதிரே கையில் சவுக்குடன் நின்று கொண்டிருந்த மந்திரி மகேந்திரன், கேசரியைப் பார்த்து, "கேசரி! என்னை ஒழித்துக் கட்டுவதற்காக நீயும் உன் நண்பர்களும் திட்டமா தீட்டுகிறீர்கள்? நடக்குமா உங்கள் சூழ்ச்சி? உன்னைத் தேடிப் பிடித்த நான், கத்தியால் குத்திக் கொல்லப் போவது இல்லை. இந்தச் சவுக்கால் அடித்தே உன்னைக் கொல்லப் போகிறேன்" என்று கூறிச் சவுக்கைச் சுழற்றினான். அது கேசரியின் உடலில் மூர்க்கமாக விளையாடி, இரத்தத்தை ஓட வைத்தது.

கேசரியின் மரண ஓலம், ஒரு குன்றின் மறைவில் நின்று கொண்டிருந்த மகுடபதியின் காதுகளைத் துளைத்தது.

(தொடரும்)





# பொற்கோயில்

## 3

**முன் கதை:** மணிப்பூர் நாட்டின் மந்திரி மகேந்திரன், தந்திரமாக ஆட்சியைக் கைப்பற்றிக் கொண்டான். அவனை எதிர்த்த மகுடபதி, கேசரி, ராஜசேகர், நித்யா என்ற நால்வரையும் காட்டுக்குக் கொண்டு வந்து பல ஆபத்துகளை அவர்கள் மீது ஏவி விடுகிறான். அச்சமயம் மகேந்திரன் கேசரியை ஒரு மரத்தில் கட்டிச் சவுக்கால் அடிக்கிறான். அந்தக் காட்சியைப் பார்த்துக் குமுறுகிறான் மகுடபதி. அவனை மகேந்திரன் பார்க்கவில்லை. இனி....

பி.ஆர்.வரதராஜுலு



"கேசரி! உன் ஆட்கள் எங்கே இருக்கிறார்கள்? உண்மையைச் சொல். இல்லாவிட்டால் நான் உன் கண்களைத் தோண்டி எடுப்பேன்" என்று நரி போல ஊளை இட்டான் மந்திரி மகேந்திரன்.

"சாக்காட்டில் சாம்ராஜ்யத்தை நடத்துகிற நயவஞ்சகா! உன்னைப் போல உயிருக்கு அஞ்சும் குழி முயல் அல்ல நான். பயமுறுத்தலுக்குப் பணியாத பாறையடா நான்!" என்று கர்ஜனை செய்தான் கேசரி.

"நீ பாறை அல்ல; பஞ்சு. உன் உயிரை உதறி எடுக்கிறேன் பார்!" என்று வெறியோடு கத்திய மகேந்திரன், அவன் மீது வேகமாகச் சாட்டையைச் சொடுக்கினான்.

"ஐயோ!" என்ற கேசரியின் கதறல், ஒரு பாறையின் மறைவில் நின்று கொண்டிருந்த மகுடபதியை உலுக்கியது. 'புலி' எனச் சீறிப் பாய்ந்தோடி மகேந்திரன் மீது மலை போல் மோதினான். அதனால் தடுமாறிக் கீழே விழுந்த மகேந்திரனின் கையில் இருந்த சவுக்கைப் பறித்து, அவன் மீது நெருப்பைப் போலச் சுழற்றினான். அடியைப் பொறுக்க முடியாமல் கத்திக் கதறிய மகேந்திரனை எட்டி உதைத்த மகுடபதி, "எழுந்துபோ. கேசரியை அவிழ்த்து விடு" என்று உறுமினான்.

பூனையைப் போல மிரள மிரள விழித்த மகேந்திரன், எழுந்து போய் கேசரியின் கட்டுகளை அவிழ்த்து விட்டான்.

"கேசரி! அவனைப் பிடித்து மரத்தில் கட்டு" என்று பற்களைக் கடித்தான் மகுடபதி.

"வேண்டாம் மகுடபதி! என்னை விட்டு விடு" என்று பரிதாபமாகக் கெஞ்சினான் மகேந்திரன்.

"பாதகனே! உன்னை விட்டால் உண்மைக்கும், நாட்டுக்கும் ஆபத்து. கேசரி! உன் வேலையைச் செய்" என்றான் மகுடபதி.

மகேந்திரனை மரத்தில் நன்றாக இறுக்கிக் கட்டி விட்டுத் தலை நிமிர்ந்தான் கேசரி.

"கேசரி! இனி இவன் உயிரைக் காட்டு மிருகங்கள் கவனித்துக்

கொள்ளும். வா, போகலாம்!" என்ருன் மகுடபதி.

"மகுடபதி! பாம்பை விடக் கொடியவனை இவனை உயிரோடு விட்டுப் போகக் கூடாது. கொன்று விட்டுப் போவோம்" என்று கூறிக் கொண்டே கத்தியை ஓங்கியவாறு அவனைநோக்கிப் பாய்ந்தான் கேசரி.

"வேண்டாம். இவனை உடனே கொன்று விட்டால் கஷ்டம் இவனுக்குத் தெரியாது. 'இனி என்ன நடக்குமோ?' என்று பயத்தால் நடுங்கிச் சாகட்டும். நமக்கு வேறு வேலை இருக்கிறது. நாம் ராஜசேகரையும், நித்யாவையும் கண்டு பிடிக்க வேண்டும். வா, போகலாம்!" என்று கூறி, கேசரியின் கையைப் பற்றி அழைத்துக் கொண்டு நடந்தான் மகுடபதி.



சிறிது தூரம் போனதும் மகுடபதி சட்டென்று நின்ருன். "கேசரி! அங்கே பார்! மனித அரக்கன் அதோ அந்தப் பள்ளத்தில் ஆக்ரோஷத்தோடு குதித்துக் கொண்டு இருக்கிருன். அங்கு என்னவோ ஒரு ஆபத்து நடக்கப் போகிறது. வா, அங்கே போய்ப் பார்க்கலாம்!" என்று கூறி விட்டு, மகேந்திரனிடம் கைப்பற்றிய சாட்டையுடன் வேகமாக நடந்தான்.

கேசரி பின் தொடர்ந்தான்.

அவர்கள் அந்தப் பள்ளத்தை நெருங்கிப் பார்த்தபோது, அந்தப் பள்ளத்திற்குள் ராஜசேகர் குப்புற விழுந்து கிடந்தான். அவன் மீது பாய்ந்து கொண்டு இருந்தான் மனித அரக்கன்.

பள்ளத்திற்கு வெளியே நின்று கொண்டு இருந்த மகுடபதி, மனித அரக்கன் மீது சாட்டையை வீசிஞன். மழை போல அடிகள் விழ, அலறிக் கதறிய மனித அரக்கன் மலை போலச் சாய்ந்து மயங்கிப் போஞன்.

தன்னைக் காப்பாற்றிய மகுடபதியையும், கேசரியையும் பார்த்து ஆனந்தம் அடைந்த ராஜசேகர், கைகளை அசைத்தான்.

"நீ மகிழ்ச்சியைப் பிறகு காட்டலாம். முதலில் இந்தச் சவுக்கைப் பிடித்துக் கொண்டு பள்ளத்தை



விட்டு மேலே வா" என்று கூறிய மகுடபதி, அவனை நோக்கி சவுக்கை வீசினான்.

ராஜசேகர் சவுக்கின் நுனியைப் பற்றிக் கொள்ள, மேலே இருந்து மகுடபதியும், கேசரியும் பிடித்து இழுக்க, ராஜசேகர் மேலே வந்து இருவரையும் கட்டித் தழுவிக் கொண்டான்.

"வீணாக நேரத்தைக் கடத்தாதே ராஜசேகர்! நித்யா எங்கே சென்றாளோ? அவளுக்கு என்ன நேர்ந்ததோ? முதலில் அவளைக் கண்டு பிடித்தாக வேண்டும். வாருங்கள்" என்று கூறி, அவர்களை அழைத்துக் கொண்டு காட்டின் இன்னொரு பகுதியை நோக்கி வேகமாக நடந்தான் மகுடபதி.

நீண்ட தூரம் சென்ற பிறகு ஒரு பெண்ணின் அலறலைக் கேட்டு அவர்கள் திடுக்கிட்டு நின்றார்கள். அலறல் வந்த திசைப் பக்கம் ஓசைப்படாமல் சென்றார்கள்.

அங்கே நித்யா கண்கள் நிறையக் கண்ணீரோடும், முகம் நிறையப் பயத்தோடும் எதிரே குதிரையில் அமர்ந்து இருந்த ஜாஸ்மினைப் பார்த்துக் கொண்டு இருந்தாள்.

"நித்யா! உன்னைக் கொல்லக் குறி வைத்து அலையும் நான், ஏன் உன்னைப் புலியிடம் இருந்து காப்பாற்றினேன் தெரியுமா? புலி உன்னைக் கொன்று விட்டால் பிறகு எனக்கு என்ன புகழ் இருக்கிறது? உன்னை என் கையால் கொல்ல

வேண்டும் என்பதற்காகத் தான் புலியிடம் இருந்து காப்பாற்றினேன். ஆமாம். நான்தான் உன்னை அம்பு எய்து கொல்லப் போகிறேன். அதனால் மகேந்திரனுடைய பாராட்டையும் நான் பெறப் போகிறேன். அதற்கு நீ உதவ வேண்டும் நித்யா! அழகுச் சிலையான உன்னை ஒரே அம்பால் கொன்று விடுகிறேன். எங்கே, உன் நெஞ்சைக் காட்டிக் கொண்டு நிமிர்ந்து நில்!" என்று கூறிய ஜாஸ்மின், வில்லில் அம்பை பொருத்தி, நித்யாவை நோக்கிக் குறி வைத்தாள்.

அதைக் கண்டு பயந்து அலறி ஓடினாள் நித்யா. அதனால் ஜாஸ்மினின் குறி தவறியது. அவள் எய்த அம்போ எங்கேயோ போய் விழுந்தது.

அதனால் ஆத்திரம் அடைந்த ஜாஸ்மின், "என்னுடைய குறிக்கு நீ தப்ப முடியாது" என்று இன்னொரு அம்பை வில்லில் தொடுத்துக் குறி வைத்தாள்.

சரியாக அதே நேரத்தில் அவளை நோக்கி மின்னல் வேகத்தில் பாய்ந்து சென்ற மகுடபதி, அவள் கையில் இருந்த வில்லைப் பறித்துக் கொண்டான். பிறகு அவளைக் குதிரையில் இருந்து இழுத்துக் கீழே தள்ளினான். அவள் கன்னங்களில் மாறி மாறி அறைந்தான். "பெண்ணாகப் பிறந்த நீ ஏன் இப்படிப் பேயாக அலைகிறாய்? உன்னைக் கொன்று குழி தோண்டிப்



புதைக்க வேண்டும். ஆனால் நீ பெண் உருவத்தில் இருக்கிறாயே! ஆகவே உன்னை உயிரோடு விடு கிறேன். ஓடிப் போ!" என்று ஜாஸ் மினின் கழுத்தைப் பிடித்துத் தள்ளினான்.

அழுகையாலும், அவமானத்தா லும் துடிதுடித்துப் போன ஜாஸ் மின், இறக்கைஇழந்த பறவையைப் போல எதுவும் செய்ய இயலாத வளாக, ஆனால் மனம் கொள்ளாத பழி உணர்ச்சி நிறைந்தவளாக அந்த இடத்தை விட்டு நடந்தாள்.

"நீங்கள் ஆபத்தான நேரத்தில் வந்து ஆண்டவனைப் போல என் னைக் காப்பாற்றினீர்கள்" என்று நன்றியால் நாத் தழுதழுக்கக் கூறி னாள் நித்யா.

"நன்றியை இப்பொழுதே முழுது மாகச் செலவழித்து விடாதே நித்யா! இன்னும் நாம் எத்தனையோ ஆபத்துகளைச் சந்திக்கப் போகி ரோம். அப்பொழுது நீ தவணை முறையில் நன்றியைக் கூறலாம்" என்று சிரித்துக் கொண்டே நடந் தான் மகுடபதி.

மற்றவர்கள் அவனை நிழல் போலத் தொடர்ந்தார்கள்.

• • •

வேதனையோடு போய்க் கொண் டிருந்த ஜாஸ்மின், பள்ளத்தில் விழுந்து கிடந்த மனித அரக்கனைப் பார்த்தாள். "அரக்கா! நீ இங்கேயே இரு. உன்னை மேலே கொண்டு வர எதையாவது தேடிக் கொண்டு வரு கிறேன்" என்று கூறிவிட்டுச் சிறிது தூரம் சென்றாள். ஒரு மரத்தில் மகேந்திரன் கட்டப்பட்டு இருப்ப தைப் பார்த்தாள். "மகேந்திரா! அந்தக் கும்பல் உன்னை விட வில்லையா? உன்னை மட்டும் என்ன? அந்தக் கும்பல் நம்மில் யாரையுமே விடவில்லை" என்றாள்.

"பேசிக் கொண்டு நிற்காதே ஜாஸ்மின்! முதலில் என்னை அவிழ்த்து விடு" என்றான் மகேந் திரன்.

ஜாஸ்மின் அவனை அவிழ்த்து விட்டு, மனித அரக்கனைப் பற்றி அவனிடம் கூறி, அவனைக் கட்டி இருந்த கயிற்றை எடுத்துக் கொண்டு போய் விட்டு வீசி மனித அரக்கனைப் பள்ளத்தில் இருந்து மேலே வரச் செய்தார்கள்.

"ஜாஸ்மின்! தனித் தனியாகப் புறப்பட்ட நாம் மீண்டும் ஒன்று சேர்ந்தோம். நம்மைப் போலவே நம் எதிரிகளும் ஒன்று சேர்ந்து விட்டார்கள். நாம் இனி ஒரு கணத் தைக் கூட வீணாக்காமல் அவர் களைத் தேடிப் பிடித்துக் கொல்ல வேண்டும்" என்று முஷ்டியை உயர்த்திக் கொண்டு வெறியுடன் கத்தினான் மகேந்திரன்.

நள்ளிரவு. ஒரு மரத்தடியில் மகுடபதி, கேசரி, ராஜசேகர், நித்யா ஆகிய நால்வரும் ஆழ்ந்து உறங்கிக் கொண்டிருந்தார்கள். திடீரென்று நித்யா 'ஓ' என்று அலறிக்கொண்டு எழுந்து உட்கார்ந்தாள்.



அவள் அலறலைக் கேட்ட கேசரி, திடுக்கிட்டு எழுந்து உட்கார்ந்து, "என்ன நித்யா?" என்று கேட்டான்.

"நான் ஒரு கனவு கண்டேன் அண்ணா! மகேந்திரனும், மனித அரக்கனும், ஜாஸ்மினும் ஒன்றாகச் சேர்ந்து உன்னைக் கொல்கிறார்கள்...."

"கனவில்தானே?" என்று சிரித்தான் கேசரி.

"அண்ணா! என் கனவுகள் எல்லாம் உண்மையாகப் பலித்து வருகின்றன. அதைப் போல உனக்கும் ஏதாவது ஆபத்து நேர்ந்தால்...." என்று நடுக்கத்துடன் கூறிய நித்யா, "எனக்குத் தொண்டை அடைக்கிறது...." என்றாள்.

"இரு, தண்ணீர் கொண்டு வருகிறேன்!" என்று கூறிவிட்டுக் கிளம்பிய கேசரி, அந்த இரவில் தண்ணீர் இருக்கும் இடம் தெரியாமல் எங்கெங்கோ தேடி அலைந்தான்.

அப்பொழுது அவன் எதிரே பேய்கள் போல மகேந்திரனும், ஜாஸ்மினும், மனித அரக்கனும் வந்து நின்றார்கள்.

"வாடா கேசரி! வகையாகச் சிக்கிக் கொண்டாயா? எங்கே உன் கும்பல்?" என்று நரியைப் போல ஊளை இட்ட மகேந்திரன், அதட்டலாகக் கேட்டான்.

"சொல்ல மாட்டேன்."

"கேசரி! சொல்லா விட்டால் உன் உயிர் போகும்"

"போகட்டும்."

அடுத்த கணம் மகேந்திரன் கேசரியின் வயிற்றில் குத்த, ஜாஸ்மின் அவன் கண்களில் அம்பால் குத்த, மனித அரக்கன் அவன் உடலை உள்ளங்கைகளில் வைத்துப் பிசைய—

கேசரியின் உயிர் பறந்தது.

அவனுடைய தங்கை நித்யாவின் கனவு பலித்தே விட்டது!

(தொடரும்)





# பொற்கோயில்

**4**

முன் கதை : மகேந்திரன் குழுவில் இருந்து தப்பிய மகுடபதியும், கேசரியும், ராஜசேகரும், நித்யாவும் அன்றிரவு மரத்தடி ஒன்றில் களைப்புடன் உறங்க, அப்பொழுது கண் விழித்துக் கொண்ட நித்யா, கேசரியிடம் தாகத்திற்குத் தண்ணீர் வேண்டும் என்று கேட்க, கேசரி தண்ணீர் கொண்டு வருவதற்காக எழுந்து செல்ல, அவன் மகேந்திரன் குழுவால் கொல்லப்படுகிறான். இனி....

பி.ஆர்.வரதராஜுலு



தண்ணீர் கொண்டு வரச் சென்ற கேசரி நீண்ட நேரமாகியும் வரவில்லை. அதனால் நித்யாவுக்குச் சந்தேகம்; கவலை. ராஜசேகரையும், மகுடபதியையும் எழுப்பிச் செய்தியைக் கூறினாள்.

அவர்கள் திடுக்கிட்டார்கள். நித்யாவை அழைத்துக் கொண்டு கேசரியைத் தேடிப் புறப்பட்டார்கள். அவர்களின் பின்னால் வந்து கொண்டு இருந்த நித்யாவின் தலையில் ஏதோ மோத, அவள் பயத்துடன் அலறினாள். முன்னால் போய்க் கொண்டிருந்த ராஜசேகரும், மகுடபதியும் அவள் அலறலைக் கேட்டு அவளிடம் ஓடி வந்தனர்.

நித்யாவின் தலையில் மோதியது மரக்கிளையில் கட்டித் தொங்கவிடப் பட்ட ஒரு பிணம். அது கேசரியின் பிணம்!

"அண்ணா! உனக்கா இந்தக் கதி?" என்று அழுதாள் நித்யா.

மகுடபதியும், ராஜசேகரும் மௌனமாக அழுது கொண்டே மரத்தின் மீது ஏறி, கேசரியின் பிணத்தைக் கீழே கொண்டு வந்தார்கள். ஒரு குழியை வெட்டிச் சவத்தை அடக்கம் செய்தார்கள். பிறகு மூவரும் கண்ணீர் அஞ்சலி செலுத்தினார்கள்.

"கேசரி! நாட்டிற்காக உயிரைத் தியாகம் செய்த உத்தமா! உன் சமாதியின் முன்னால் நாங்கள் சபதம் ஏற்கிறோம். நாட்டுத் துரோகிகளைப் பூண்டோடு ஒழித்து, மன்னரைக் காப்பாற்றுவோம். இது சத்தியம்" என்று அவர்கள் உணர்வு பொங்க உறுதி மொழி எடுத்துக் கொண்டு, அங்கிருந்து கிளம்பினார்கள்.

"மகுடபதி! அடுத்து நம் திட்டம் என்ன!" என்று கேட்டான் ராஜசேகர்.

"நமக்கு இருப்பது ஒரேயொரு திட்டம்தான்! 'மன்னரைக் காப்பாற்ற வேண்டும்' என்பதுதான் அந்தத் திட்டம். அதற்காக நாம் பொற்கோயிலுக்குப் போக வேண்டும். ஆனால் பொற்கோயில் எங்கே இருக்கிறது என்பது நமக்குத் தெரியாது. அதற்காக நாம் தயங்கோம்.

அஞ்சோம். பொற்கோயிலுக்குப் போயே தீர்வோம்!" என்று குமுறி வெடித்த எரிமலையைப் போலக் கூறிக் கொண்டே நடந்தான் மகுடபதி.

அவர்கள் சிறிது தூரம் சென்றதும், சில குடிசைகள் தென்பட்டன. எல்லாக் குடிசைகளுமே இருளில் மூழ்கிக் கிடந்தன. ஆனால் பெரிதாக இருந்த ஒரு குடிசையில் மட்டும் விளக்கு எரிந்து கொண்டு இருந்தது. உள்ளே பலர் நின்று பேசுவது, வெளியே நன்றாகக் கேட்டது. அவர்கள் அந்தக் குடிசையின் வாசலை நோக்கி ஓசைப் படாமல் சென்றார்கள். மகுடபதி கதவை லேசாகத் திறந்து உள்ளே பார்வையைச் செலுத்தினான். அங்கே பல காட்டுவாசிகளும், அவர்கள் நடுவில் ஜாஸ்மினும், மனித அரக்கனும் நின்று கொண்டு இருந்தார்கள்.

"தலைவா! நான்கு பயங்கரவாதிகள் சிறையில் இருந்து தப்பித்து இந்தக் காட்டுக்கு வந்து இருக்கிறார்கள். அவர்களில் ஒருவனை நாங்கள் கொன்று விட்டோம். மற்ற மூவரையும் நீ தேடிப் பிடித்துக் கொல்ல வேண்டும்" என்றாள் ஜாஸ்மின்.

"அம்மா! நாங்கள் எங்கள் எதிரிகளைத்தான் கொல்வோமே தவிர, மற்றவர்களைக் கொல்வது இல்லை" என்றான் தலைவன்.

"நீ அவர்களைப் பிடித்துக் கொடு. நாங்கள் அவர்களைக் கொல்கிறோம்" என்றாள் ஜாஸ்மின்.



"அப்படியானால் சரி. அவர்கள் எப்படி இருப்பார்கள்?"

"அவர்கள் பெரிய இடத்துப் பிள்ளைகளைப் போலக் காணப்படுவார்கள். மூவரில் ஒருத்தி பெண்" என்றாள் ஜாஸ்மின்.

"இவ்வளவு போதும். நீங்கள் இருவரும் இந்தக் குடிசைக்குள் ஓய்வு எடுத்துக் கொண்டு தங்குங்கள். நான் என் ஆட்களுடன் கிளம்பிச் சென்று பொழுது விடிவதற்குள் அவர்களைத் தேடிப் பிடித்துக் கொண்டு வந்து உங்கள் எதிரே நிறுத்துகிறேன்" என்று சொன்ன தலைவன், குடிசையை விட்டு வெளியே வந்தான்.



அவனைப் பார்த்ததும் மகுடபதி ஆச்சரியம் அடைந்தான். "பாபா! என்னைத் தெரிகிறதா?" என்று கேட்டான்.

"மகுடபதி!.... நீயா?.... நலமாக இருக்கிறாயா? இந்த நள்ளிரவில் நீ என்னைத் தேடி வரக் காரணம் என்ன?" என்று கேட்டான் தலைவன்.

"பாபா! நான் உன்னைத் தேடி வரவில்லை. நீதான் என்னைத் தேடிப் போகிறாய்!" என்று சிரித்தான் மகுடபதி.

"நீ என்ன சொல்கிறாய்?" என்று குழப்பத்துடன் கேட்டான் தலைவன்.

"கொஞ்ச நேரத்திற்கு முன்னால் குடிசைக்குள் ஜாஸ்மின் கூறிய பயங்கரவாதிகள் நாங்கள்தான்! எங்களைப் பிடிக்கத்தான் நீ புறப்பட்டு வந்து கொண்டு இருக்கிறாய்" என்றான் மகுடபதி.

"அப்படியா? என் உயிர் நண்பனை உன்னைக் கொல்லவா அந்த வஞ்சகி என் உதவியை நாடி வந்திருக்கிறாள்? அவளையும், அவளோடு வந்திருப்பவனையும் யமலோகத்துக்கு அனுப்பி வைக்கிறேன். நீயும், உன் நண்பர்களும் அதோ அந்தக் குடிசையில் இரவுப் பொழுதைக் கழியுங்கள்...." என்று தலைவன் கூறிக் கொண்டு இருந்த பொழுது—

அவர்கள் எதிரே எகிறிப்பாய்ந்து வந்து நின்றாள் ஜாஸ்மின். அவளுடைய கண்களில் கோபக் கனல் வீசியது. "தலைவா! எனக்கு உதவு

வதாக வாக்களித்து விட்டு, இப்பொழுது எங்கள் எதிரிகளான இவர்கள் பக்கம் சேர்ந்து விட்டாய். வஞ்சகா! இனி உன்னை நான் உயிரோடு விட மாட்டேன்" என்று சீறிக்கொண்டே, வில்லில் அம்பைத் தொடுத்தாள்.

"பார்க்கலாம்" என்ற தலைவன், கைகளைத் தட்டினன்.

"தலைவா! கை தட்டி அழைக்கிருயா உன் ஆட்களை? அவர்கள் வர மாட்டார்கள். ஏனென்ருல் அவர்களால் வர முடியாது. எங்களுடைய மனித அரக்கன், அவர்களை அப்பொழுதே சிறைப் படுத்தி விட்டான். இனி உனக்கு உதவ யாரும் இல்லை. முதலில் என் அம்புக்கு நீ. பிறகு அவர்கள்...."

"சும்மா பூச்சி காட்டாதே! அந்த நால்வரைத் தவிர என் ஆணைப்படி நடக்க இங்கே நாற்பது காட்டுவாசிகள் இருக்கிருர்கள். உன்னை என்ன செய்கிறேன், பார்!" என்று தலைவன் முடிப்பதற்குள்—

ஜாஸ்மின் தொடுத்த அம்பு, தலைவனை நோக்கிச் சீறிக் கொண்டு பறந்து வந்தது. அவன் சட்டென்று குனிந்து கொள்ள, ஜாஸ்மின் எய்த அம்பு இலக்கு மாறி எங்கேயோ போய் விழுந்தது. அந்த நேரம் பார்த்து அவள் கால்களைப் பிடித்து இழுத்தான் தலைவன்.

ஜாஸ்மின் கீழே மரம் போலச் சாய்ந்தாள். அவளிடமிருந்த வில்லைப் பறித்து எறிந்தான் தலைவன்.



அதே நேரத்தில் குடிசைக்குள் இருந்து கூச்சலிட்டுக் கொண்டே அங்கு ஓடி வந்த மனித அரக்கன், தலைவன் மீது பாய்ந்தான். தலைவன் அந்தத் தாக்குதலால் தடுமாறிக் கீழே விழுந்தான். அவனுக்கு நல்ல அடி. அவன் தரையோடு தரையாகக் கிடந்தான்.

அரக்கன் அடுத்த பாய்ச்சலுக்குத் தயாரானன். அதற்குள் முந்திக் கொண்ட மகுடபதி, அரக்கனைக் காலால் எட்டி உதைத்தான். அதனால் நிலை தடுமாறிக் கீழே விழுந்த அரக்கன், அடுத்தக் கணமே சமாளித்துக் கொண்டு எழுந்தான். வெறியுடன் மகுடபதியின் வயிற்றில் ஒரு குத்து விட்டான்.

தரையில் சுருண்டு விழுந்த மகுடபதி, வலியால் துடித்தான். அவனால் எழுந்திருக்கவே முடியவில்லை.

அடுத்து, மனித அரக்கனின் குறி தலைவன் பக்கமாகத் திரும்பியது. அவனை நோக்கிப் பாய்ந்தான். அப்பொழுது ராஜசேகர் அவன் இடுப்பில் பலமாக உதைத்தான். சினம் கொண்ட அரக்கன், அவனைத் தன் இரண்டு கைகளுக்கும் நடுவே மார்போடு சேர்த்து வைத்துக்கொண்டு நொறுக்கப் போனன். அச்சமயம் ராஜசேகர் தன் கட்டாரியை எடுத்து அவன் கண்ணில் ஓங்கிக் குத்தினன். இரத்தம் புனலாய்ப் பெருக, வலி உயிரைப் பிடித்து உலுக்க, மண்ணில் மலை போலச் சாய்ந்தான் மனித அரக்கன். சிறிது நேரத்தில் அவனுடைய துடிப்பு அடங்கியது; உயிர் பிரிந்தது. கட்டையைப்போல விறைத்துக் கொண்டது அவன் உடல்.

"ஒழிந்தான் மனித அரக்கன்!" என்று கூறிக் கொண்டே, பார்வையைச் சுற்றுமுற்றும் ஓட விட்டான் ராஜசேகர். ஜாஸ்மினைக் காணவில்லை. எங்கேயோ ஓடி மறைந்து விட்டாள் அந்தக் கோழை.

பிறகு ராஜசேகர் குடிசைக்குள் சென்று, அங்கு கட்டிப் போடப்பட்டு இருந்த நான்கு காட்டுவாசிகளையும் விடுவித்து, வாசலுக்கு அழைத்து வந்தான். அங்கு இன்னும் எழ மாட்டாமல் கிடந்த தலைவனையும், மகுடபதியையும் குடிசைக்குள் தூக்கிக் கொண்டு சென்றன். காட்டுவாசிகள் மூலம் பச்சிலை மூலிகைகளைச் சேகரித்து, அவர்களுக்கு முதல் உதவி செய்தான்.

இரவு நகர்ந்தது. பொழுது விடிந்தது.

மூலிகைகளின் உதவியால், தலைவனும், மகுடபதியும் நலமாகிக் கண் விழித்து எழுந்தார்கள்.

"நண்பா! நலமா?" என்று அன்புடன் கேட்டுக் கொண்டே மகுடபதியின் அருகே வந்தான் தலைவன்.

"பாபா! உடல் நலம் கெட்டால் மருந்தால் நலம் அடையலாம். மன நலம் கெட்டால், அதற்கு மருந்து ஏது? நீ ஜாஸ்மின் போன்ற தீயவர்களுடன் ஏன் சேர்ந்தாய்?" என்று கேட்டான் மகுடபதி.



"நானு சேர்ந்தேன்? அவளாகவே வந்து சேர்ந்து கொண்டாள். காட்டு வாசிகளான நாங்கள் முரடர்கள் தான். ஆனுல் மோசகாரர்கள் அல்ல. அவள் உங்களே எல்லாம் 'சிறையில் இருந்து தப்பி ஓடி வந்த பயங்கரவாதிகள்' என்றதும், நான் அப்படியே நம்பி விட்டேன். அதனுல் என்ன? அவளுடைய மோசடி உன் வருகையால் உடனே வெளிச்சமாகி விட்டது. அது இருக்கட்டும். நீயும், உன் நண்பர்களும் இந்தக் காட்டுக்கு வரக் காரணம் என்ன?" என்று கேட்டான் தலேவன்.

மகுடபதி எல்லாவற்றையும் விவரமாகக் கூறிவிட்டு, "நாங்கள் பொற்கோயிலுக்குச் செல்ல வேண்டும். அதற்கு வழி என்ன?" என்று கேட்டான்.

"எனக்குத் தெரியாது. ஆனுல் அந்த முனிவருக்குப் பொற்கோயிலுக்குப் போகும் வழி தெரிந்திருக்க வேண்டும்" என்ருன் தலேவன்.

"அந்த முனிவர் என்ருல் எந்த முனிவர்?"

"அவரா? பிசாசுப் பள்ளத்தில் இருக்கும் முனிவர். பிசாசுப் பள்ளத்தில் பேய்களும், பயங்கர மிருகங்களும் நிறைய இருக்கின்றனவாம். நாங்கள் அங்கே இது வரை போனது இல்லே. இனி மேலும் போக மாட்டோம். பிசாசுப் பள்ளத்தில் இருக்கும் முனிவரைச் சந்தித்தால், அவர் பொற்கோயிலுக்குப் போகும் வழியைச் சொல்லலாம்" என்ருன் தலேவன்.

"நாங்கள் இப்பொழுதே பிசாசுப் பள்ளத்திற்குப் புறப்படுகிருேம். அதற்கு எந்த வழியாகச் செல்ல வேண்டும்" என்ருன் மகுடபதி.

"நான் சிறிது தூரம் வரையில் உங்களுடன் வந்து பிசாசுப் பள்ளத்திற்கு வழி காட்டி விட்டு வருகிறேன்" என்று கூறிய தலேவன், அவர்களே அழைத்துக் கொண்டு கிளம்பினுன். (தொடரும்)





# பொற்கோயில்

5

முன் கதை: மகேந்திரனும், ஜாஸ்மினும் கேசரியைக் கொன்று மரத்தில் தொங்க விட்டுவிட்டுப் போனார்கள். மகுடபதியும், ராஜசேகரும், நித்யாவும் ஜாஸ்மின் கொடுத்த தொல்லைகள் பலவற்றில் இருந்து தப்பித்து, காட்டுத் தலைவனான பாபாவைச் சந்தித்து, பிசாசுப் பள்ளத்திற்கு வழி கேட்க, அவன் அவர்களை அழைத்துக் கொண்டு செல்கிறான். இனி....

பி.ஆர்.வரதராஜுலு



மகுடபதியையும், ராஜசேகரையும், நித்யாவையும் அழைத்துக் கொண்டு கிளம்பிய காட்டுத் தலைவன் பாபா, சிறிது தூரம் சென்றதும் நின்றான். "மகுடபதி! நான் இந்த எல்லையைத் தாண்டி வந்தால் எங்கள் காட்டுத் தேவதை என்னைச் சபித்து விடும். ஆகவே நான் இதோடு நின்று கொள்கிறேன். அதோ தெரிகிறதே, அது தான் பிசாசுப் பள்ளம். சென்று வாருங்கள். உங்களுக்கு வெற்றி கிடைக்க என் வாழ்த்துகள்" என்று வாழ்த்தி விடை பெற்றுக் கொண்டான்.

மகுடபதியும், மற்றவர்களும் பிசாசுப் பள்ளம் நோக்கி நடக்க ஆரம்பித்தார்கள். சிறிது தூரம் சென்றதும் குளம் ஒன்று தென்பட்டது.

நித்யா அதைப் பார்த்ததும், ராஜசேகரை நோக்கி, "அண்ணா! நீ அந்தக் குளத்தில் இறங்க வேண்டாம்" என்று பயத்தோடு கூறினாள்.

மகுடபதி அவள் தோற்றத்தையும், பேச்சையும் கேட்டு ஆச்சரியம் அடைந்தான். "நித்யா! நீ திடீரென்று இப்படிச் சொல்வதற்குக் காரணம் என்ன?" என்று கேட்டான்.

"அண்ணா ராஜசேகர் இந்தக் குளத்தில் இறங்குவது போலவும், அப்பொழுது ஜாஸ்மின் மறைந்திருந்து அண்ணாவின் மீது குறி வைத்து அம்பை விடுவது போலவும் என் நெஞ்சில் ஒரு காட்சி தோன்றியது" என்றாள் நித்யா.

"மகுடபதி! நித்யாவுக்கு இப்படி மனதில் தோன்றும் காட்சி, பிறகு அப்படியே நடந்து விடுகிறது. அவள் ஜாஸ்மின் கேசரியைக் கொன்று மரத்தில் தொங்க விடுவதாகக் கனவு கண்டு சொன்னாள். அதன்படியே நடந்தது. இப்பொழுதும் நித்யா சொல்வது நடக்கும். நம் எதிரி ஜாஸ்மின் நம்மைத் தொடர்ந்து வந்து இங்கே எங்கேயாவது மறைந்து இருப்பாள்" என்றான் ராஜசேகர்.

"அப்படியானால் ஜாஸ்மினைக் கண்டு பிடிப்பதற்கு, நித்யா கூறிய

வித்தத்தில் ஒரு முயற்சியைச் செய்ய வோம். நீ குளத்தில் இறங்கிக் குளி. நானும், நித்யாவும் ஒரு புதரில் மறைந்து கொள்கிறோம். ஜாஸ்மின் உன்னை நோக்கி அம்பை விட்டால், அவள் இருக்கும் இடம் தெரியும். அதன் மூலம் ஜாஸ்மினை மடக்கிப் பிடித்து விடலாம்" என்றான் மகுட பதி.

"நல்ல யோசனை!" என்று கூறிக் கொண்டே குளத்தில் இறங்கினான் ராஜசேகர்.

மகுடபதியும், நித்யாவும் ஒரு புதரில் மறைந்து கொண்டு, 'எந்தப் பக்கம் இருந்தாவது அம்பு பறந்து வருகிறதா?' என்று கவனமாகப் பார்த்தார்கள்.

அப்பொழுது குளத்தில் இறங்கி நின்று கொண்டு இருந்த ராஜ சேகரை நோக்கி ஒரு அம்பு பறந்து வந்தது. அதைக் கவனித்த ராஜ சேகர், 'லபக்' என்று நீரில் மூழ்கித் தப்பித்துக் கொண்டான்.

• அம்பு பாய்ந்து வந்த திசையின் மூலம் ஜாஸ்மின் இருந்த இடத் தைப் புரிந்து கொண்ட மகுடபதி, அந்த இடத்தை நோக்கிப் பறந்து சென்று, அம்பை விட்ட ஜாஸ்மினை கோழிக் குஞ்சைப் பிடிப்பது போல் பிடித்துக் கொண்டான்.

அதற்குள் அந்த இடத்திற்கு ராஜசேகரும், நித்யாவும் வந்து சேர்ந்தார்கள். மகுடபதி ஜாஸ்மினி டம் இருந்த வில்லைப் பறித்து எறிந்தான்.



"மகுடபதி! மகேந்திரனை விடப் பொல்லாதவள் இந்த ஜாஸ்மின். நாம் நேற்று இவளை உயிரோடு விட்டது தவறு. அந்தத் தவறை இனி நாம் செய்யக் கூடாது. கேசரி யைக் கொன்ற இந்தக் கொலைகாரி யைத் துடிக்கத் துடிக்கக் கொல்ல வேண்டும்" என்று படபடத்தான் ராஜசேகர்,

"ஆம். இவளை இனி உயிருடன் விடக் கூடாது" என்று மகுடபதி சொல்லிக் கொண்டு இருந்த பொழுது—

"அதற்கு நான் சந்தர்ப்பம் தர மாட்டேன்" என்ற ஜாஸ்மின், ஒரு விஷ அம்பை எடுத்துத் தன் நெஞ்



யில் ஆழமாகப் பாய்ச்சிக் கொண்டாள். அவள் அடுத்த சில கணங்களில் உடலில் விஷம் பரவக் கீழே விழுந்து இறந்தாள்.

"நம்மை முடிக்க நினைத்த ஜாஸ்மின், கடைசியில் தனக்கே முடிவு தேடிக் கொண்டாள். இனி மகேந்திரன் ஒருவன்தான் பாக்கி. பிறகு அவனைக் கவனிப்போம். இப்பொழுது பிசாசுப் பள்ளத்திற்குச் செல்லலாம். வாருங்கள்!" என்று கூறிக் கொண்டே நடந்தான் மகுடபதி.

ராஜசேகரும், நித்யாவும் அவனைத் தொடர்ந்தார்கள்.

சிறிது தூரம் சென்றதும் ஒரு ஆசிரமம் தெரிந்தது. அதன் வாசலில் ஒரு பெரிய மரம் இருந்தது. அதன் அடியில் ஒரு முனிவர் கண்களை மூடிக் கொண்டு தியானத்தில் இருந்தார். 'காட்டுத் தலைவன் பாபா சந்திக்கச் சொன்ன முனிவர் இவராகத்தான் இருக்க வேண்டும்' என்று நினைத்த மகுடபதியும், மற்றவர்களும் முனிவரின் எதிரே சென்றார்கள். 'அவர் எப்பொழுது கண் திறப்பார்?' என்று ஆவலோடு காத்துக் கொண்டு இருந்தார்கள்.

முனிவர் நீண்ட நேரத்திற்குப் பிறகு கண்களைத் திறந்தார். 'தன் எதிரே நின்று வணங்கிய அந்தப் புதியவர்களை வியப்புடன் பார்த்தார். "யார் நீங்கள்? ஆள் நடமாட்டமே இல்லாத இந்த இடத்திற்கு ஏன் வந்தீர்கள்!" என்று கேட்டார்.

"நாங்கள் எங்கள் மன்னரைக் காப்பாற்றுவதற்காகப் பொற் கோயிலில் உள்ள மந்திர புஷ்பத் தைக் கொண்டு வரும் இலட்சியத் தோடு ஊரை விட்டுப் புறப்பட்டு வந்திருக்கிறோம். பொற்கோயிலுக் குச் செல்லும் வழியைப் பற்றி உங்களிடம் கேட்டால் தெரியும் என்று கேள்விப்பட்டு உங்களிடம் வந்தோம். அருள் கூர்ந்து அதற்கு வழியைக் கூற வேண்டும்" என்று பணிவுடன் வேண்டினன் மகுடபதி.

"பொற்கோயிலுக்குச் செல்லும் வழியைப் பற்றி எனக்குத் தெரி யாது. ஆனால் எனக்கு மிகவும் வேண்டியவனான 'ஈஸ்வரய்யா' என்பவனுக்குத் தெரியும்!" என்றார் முனிவர்.

"ஈஸ்வரய்யா எங்கே இருக் கிறார்?" என்று ஆவலுடன் கேட் டான் மகுடபதி.

"அவன் மச்சத் தீவில் இருக் கிறான். நான் அங்கே செல்லும் வழியைக் கூறுகிறேன்; கேளுங்கள். இங்கிருந்து மேற்கே சென்றால் கடற்கரை காணப்படும். கடற்கரை யில் பழைய படகுகள் நிறைய இருக்கும். நீங்கள் அவற்றில் ஒரு படகை எடுத்துக் கொண்டு வடக் குப் பக்கமாகக் கடலில் ஒரு நாள் பயணம் செய்தால், மச்சத் தீவை அடையலாம். அங்கே ஒரு பாழ டைந்த காளி கோயில் இருக்கும். அதில் 'ஈஸ்வரய்யா' என்பவன் இருப்பான். அவனிடம் நான் உங்



களை அனுப்பியதாகக் கூறினால், அவன் பொற்கோயிலுக்குச் செல்லும் வழியைக் கூறுவான்" என்றார் முனிவர்.

மகுடபதியும், மற்றவர்களும் முனிவருக்கு நன்றியும், வணக்கமும் தெரிவித்து விட்டு, மேற்குத் திசையில் இருந்த கடற்கரையை அடைந்தார்கள். அங்கு முனிவர் கூறியதைப் போலவே ஏராளமான பழைய படகுகள் இருந்தன. அவர்கள் அவற்றில் ஒன்றை எடுத்து, அதில் அமர்ந்து கடலில் பிரயாணம் செய்தார்கள்.

படகு மச்சத் தீவை நெருங்கிக் கொண்டு இருந்த பொழுதுதான் அந்தப் பயங்கரம் நிகழ்ந்தது. பளிச்சென்று இருந்த வானத்தில் கரு மேகங்கள் சூழ்ந்தன. சீராக இருந்த காற்று சீற்றம் கொண்டு பலமாக வீசியது. கடல் அலைகள் குமுறி வெடித்து ஆள் உயரத்துக்குக் கொந்தளித்தன.

அவர்களுடைய சிறிய படகு, அலைகளில் திக்கு முக்காடியது. அவர்கள் படகுக்குள் தடுமாறித் தத்தளித்தார்கள்.

அலைகளில் பம்பரம் போல் சுழன்ற படகு, கவிழ்ந்து விட்டது. அதில் இருந்த மூவரும் மூன்று திசைகளில் போய் விழுந்தனர்.

கடல் அலைகளில் தள்ளப்பட்டு, மோதப்பட்டு உயிரோடு போராடிய நித்யா அலறினாள். அதிர்ஷ்டவசமாகக் கடல்அலைகளோடு போராடிக் கொண்டிருந்த மகுடபதி, அவளைப் பார்த்து விட்டு, அவளை நோக்கி வேகமாக வந்தான். மயங்கிய நிலையில் அலையில் மிதந்த நித்யாவைத் தூக்கித் தோளில் போட்டுக் கொண்டு ராஜசேகரைத் தேடினான். அவனைக் காணவில்லை.

பிறகு ராஜசேகர் தான் எங்கே? 'நீச்சல் தெரியாத நித்யா கடலுக்குள் மூழ்கி இருப்பாள்,' என்று நினைத்த ராஜசேகர், கடலுக்குள் மூழ்கி அவளைத் தேடினான். அவளைக் கண்டு பிடிக்க முடியவில்லை. அவன் ஏமாற்றத்தோடு நீருக்கு மேலே வந்த பொழுது, யாரோ அவன் காலைப் பிடித்து உள்ளே இழுத்தார்கள். அவனைப் பிடித்து இழுப்பது யார்? மனிதர்களா? சுறாக்களா? அதை யோசித்துக் கொண்டு இருக்கும் பொழுதே அவன் மயக்கம் அடைந்தான்.

ராஜசேகரைக் காணாமல் குழம்பிய மகுடபதி, 'ராஜசேகர் நன்றாக நீச்சல் தெரிந்தவன். எப்படியும் கரைக்கு வந்து சேர்ந்து விடுவான். முதலில் நித்யாவைக் கரைக்குக் கொண்டு போய் மூர்ச்சையைத் தெளிவிக்க வேண்டும்' என்ற முடிவுக்கு வந்தான். நித்யாவைத் தோளில் போட்டுக் கொண்டு நீந்திக் கரைக்கு வந்து சேர்ந்தான். அந்த நேரம் பார்த்து மழை நின்றது. வானம் வெளி வாங்கியது.

'இதுதான் மச்சத் தீவாக இருக்க வேண்டும்' என்று நினைத்துக்



கொண்டு அசையாமல் கிடந்த நித்யாவைக் கவலையுடன் பார்த்தான் மகுடபதி. நேரம் ஓடிக் கொண்டே இருந்தது.

நித்யா கடற்காற்றைச் சுவாசித்து மயக்கம் தெளிந்து எழுந்தாள். மகுடபதியைப் பார்த்தாள். "மகுடபதி! நாம் இருவரும் உயிரோடு இருப்பது தெரிகிறது. ராஜசேகர் அண்ணாவைக் காணவில்லையே! அவர் எங்கே? உயிரோடு இல்லையா?" என்று கண்ணீருடன் கேட்டாள்.

"ஏன் அப்படிக் கேட்கிறாய் நித்யா? ராஜசேகர் நிச்சயமாக உயிரோடு இருப்பான். அவன் எப்படியும் கரைக்கு வந்து சேருவான். நாம் அதற்குள் தீவுக்குள் சென்று காளி கோயிலைக் கண்டுபிடித்து ஈஸ்வரய்யாவைச் சந்தித்து விட்டு வருவோம்" என்றான் மகுடபதி.

"நான் அண்ணாவைப் பார்க்காமல் எங்கும் வர மாட்டேன். நான் ஏற்கெனவே கேசரி அண்ணாவை இழந்தேன். இப்பொழுது ராஜசேகர் அண்ணாவையும் இழந்து விடுவேனோ என்று எனக்குப் பயமாக இருக்கிறது. நீங்கள் போய் உங்கள் காரியத்தைக் கவனியுங்கள். நான் இங்கேயே உட்கார்ந்து என் அண்ணா வருகிறாரா என்று கவனிக்கிறேன்" என்று பிடிவாதமாகக் கூறி விட்டாள் நித்யா.

மகுடபதி வேறு வழி இல்லாமல், "நித்யா! இது புதிய இடம். ஜாக்கிரதையாக இரு. நான் போய் வருகிறேன்" என்று கூறி விட்டு, தீவுக்குள் நடந்தான்.

சிறிது தொலைவு சென்றதும், எதிரே ஒரு ஆள் வருவதைப் பார்த்தான் மகுடபதி. அவனை நெருங்கி, "இது மச்சத் தீவுதானே!" என்று கேட்டான்.

அந்த ஆள் மகுடபதியை பார்த்துக் கலவரம் அடைந்தான்.

(தொடரும்)





# பொற்கோயில்

**6**

முன் கதை: பொற்கோயிலுக்குச் செல்லும் வழியை அறிவதற்காக மகுடபதியும், ராஜசேகரும், நித்யாவும் மச்சத் தீவை நோக்கிக் கடல் பயணம் செய்கிருர்கள். அப்போது எழுந்த புயல் காற்றில் அவர்கள் சென்ற படகு கவிழ்கிறது. படகில் இருந்து தூக்கி எறியப்பட்ட ராஜசேகர், நீருக்குள் யாராலோ இழுக்கப்பட்டு மயங்கிப் போகிருன். மச்சத்தீவின் கரைக்குத் தப்பி வந்த மகுடபதி, நித்யாவைக் கரையில் விட்டு விட்டு காளி கோயிலைத் தேடிப் புறப்பட, வழியில் ஒருவனைச் சந்திக்கிருன். இனி....

**பி.ஆர்.வரதராஜுலு**



கலவரம் அடைந்த அந்த ஆளைப் பார்த்து எரிச்சல் அடைந்தான் மகுடபதி. "நான் கேட்பது உன் காதில் விழவில்லையா? இது மச்சத் தீவுதானே?" என்று அதட்டினான்.

"ஆம்" என்றான் அந்த ஆள்.

"இங்கே காளி கோயில் எங்கே இருக்கிறது?"

"எதற்காகக் கேட்கிறாய்? காளி கோயிலில் இருக்கும் புதையலை எடுக்க வந்தாயா? அந்தப் புதையலை எடுக்கப் போனவன் எவனும் இது வரையில் உயிரோடு திரும்பியது இல்லை. உனக்கு உன் உயிர் மீது ஆசை இல்லையா?" என்று கேட்டான் அந்த ஆள்.

"எனக்கு காளி கோயிலில் இருக்கும் புதையல் தேவை இல்லை. அங்கு இருக்கும் ஈஸ்வரய்யாவை நான் பார்க்க வேண்டும்" என்றான் மகுடபதி.

"காளி கோயில் பக்கம் நாங்கள் யாரும் போக மாட்டோம். ஏனென்றால் அது மிகவும் பயங்கரமான இடம். நான் ஈஸ்வரய்யாவைப் பல வருடங்களுக்கு முன்னால் பார்த்தேன். இப்பொழுது அவன் உயிரோடு இருக்கிறானா இல்லையா என்பது தெரியவில்லை. சிறிது காலத்திற்கு முன்னால் பொற்கோயிலுக்குச் செல்லும் வழியை ஈஸ்வரய்யாவிடம் கேட்டுத் தெரிந்து கொள்வதற்காக இருவர் காளி கோயிலுக்குச் சென்றார்கள். பிறகு அவர்கள் திரும்பி வரவே இல்லை. இப்போது நீ வந்து இருக்கிறாய். நீயும் எங்கே உயிரோடு திரும்பி வரப் போகிறாய்?" என்று கூறி, காளி கோயிலுக்குச் செல்லும் வழியைக் காட்டினான்.

மகுடபதி சிரித்துக் கொண்டே பாழடைந்த கோயிலை நோக்கி நடந்தான். வழி எல்லாம் கல்; முள். அவன் எதையும் இலட்சியம் செய்யாமல் காளி கோயில் வாசலின் எதிரே வந்து நின்றான். வாசல் கதவைத் தட்டினான். கதவு திறக்கப் படவில்லை. பலமாகத் தட்டி



கதவு திறந்து கொள்ளவில்லை.

இனி என்ன செய்வது? அவ கதவில் சாய்ந்தபடி சோர்ந்து நின் பொழுது கதவு தன்னாலேயே திறந்து கொண்டது. அது திறந் வேகத்தில் அவன் கோயிலுக்கு போய் விழுந்தான். உடனே கத தானாகவே மூடிக் கொண்டது.

மகுடபதி எழுந்தான். சுற்றுமு றும் பார்த்தான். எதுவும் தெரிய வில்லை. ஒரே இருட்டாக இருந்தது எங்கிருந்தோ புகை வந்தது. அ னால் அவன் கண்களில் எரிச்ச எடுத்தது. அதைத் தவிர அங்கே ஓசை ஏதும் இல்லை. ஒரே மயான அமைதி நிலவியது.

"ஈஸ்வரய்யா! நீங்கள் எங்கே இருக்கிறீர்கள்?" என்று பலமாக கத்தினான் மகுடபதி.

பதில் வரவில்லை. இருட்டுக்குள் தட்டித் தடுமாறிக் கொண்டே முன் நோக்கி நடந்தான் மகுடபதி. அப் போது யாரோ பின்னால் நடந்து வரும் காலடி ஓசை கேட்டது. "பின்னால் வருவது யார்?" என்று அதட்டலாகக் கேட்டான்.

"நானா? பேய்!" என்று கூறி விட்டுப் பயங்கரமாகச் சிரித்தது ஒரு உருவம்.

மகுடபதி கலவரம் அடைந்தான். ஆனாலும் சமாளித்துக் கொண்டு, "பேயே! நான் உன்னைப் பார்க்க வரவில்லை; ஈஸ்வரய்யாவைப் பார்க்க வந்திருக்கிறேன். எங்கே அவர்?" என்று பலத்த குரலில் கேட்டான்.

"நான்தான் ஈஸ்வரய்யா! எதற் காக என்னைத் தேடி வந்தாய்? விஷயத்தைச் சொல்" என்றது உருவம்.

'பேயிடம் என்ன பேசுவது? ஈஸ்வரய்யா ஏன் பேய் ஆனான்?' என்று மகுடபதி திகைத்து நின்ற பொழுது, பயங்கரமான சத்தங்கள் எழுந்தன. வர வர அவை பெரிது ஆயின. அதனால் அவன் காதுகள் அடைத்தன. தலை பாரமாகக் கனத்



தது. "ஈஸ்வரய்யா!...." என்று பலமாகக் கத்தினான்.

அந்தக் கணமே எல்லாச் சத்தங்களும் ஓய்ந்தன. திடீரென்று ஒரு தீபம் எரிந்தது. அதன் அருகே இருந்து, "இளைஞனே! பொற்கோயிலுக்குப் போக என்னிடம் நீ வழி கேட்கத்தானே வந்தாய்? பரிதாபத்துக்கு உரியவனே! உயிரைப் போக்கிக்கொள்ள நீ ஏன் இவ்வளவு தூரம் வந்து இருக்கிறாய்? இப்பொழுதும் உனக்கு ஒரு சந்தர்ப்பம் இருக்கிறது. பொற்கோயிலுக்குப் போகும் ஆசையை விட்டு விட்டுத் திரும்பிப் போ. கதவு தன்னாலேயே திறந்து கொண்டு உனக்கு வழி விடும். நீ இங்கே இன்னும் சில கணங்கள் இருந்தால், சிலைகள் எல்லாம் உயிர் பெற்று உன்னைத் தீர்த்துக் கட்டி விடும்" என்று ஒரு குரல் அவனை எச்சரித்தது.

"நான் சுயநல நோக்கோடு பொற்கோயிலுக்குச் செல்ல வரவில்லை. எங்கள் மன்னரின் உயிரைக் காப்பாற்றுவதற்காக நான் பொற்கோயிலுக்குச் செல்லப் புறப்பட்டு வந்திருக்கிறேன். பொற்கோயிலுக்குச் செல்லும் வழி ஒரு காலத்தில் ஈஸ்வரய்யாவாகவும், இப்பொழுது பேயாகவும் உள்ள உனக்குத்தான் தெரியும். பொற்கோயிலுக்குச் செல்லும் வழியைக் கூறு. போய் விடுகிறேன். அதுவரை நான் இந்த இடத்தை விட்டுப் போக மாட்

டேன்" என்று உறுதியான குரலில் கூறினான் மகுடபதி.

"அப்படியா? உன் தலை விதி மோசமானது. நீ கஷ்டத்தை அனுபவிக்க வந்திருக்கிறாய். அதை யாரால் தடுக்க முடியும்?" என்று அந்தக் குரல் எரிச்சலோடு கேட்டது.

உடனே எரிந்து கொண்டிருந்த தீபம் அணைந்தது. எங்கும் இருள் சூழ்ந்தது. யாரோ கைகளைத் தட்டுவது போலவும், சிரிப்பது போலவும், ஏதேதோ மேலே இருந்து விழுவது போலவும் ஒரே இரைச்சலாகக் கேட்டது. அந்த இரைச்சலால் மகுடபதியின் காதுகளின் ஜவ்வு கிழிந்து விடும் போல ஆகியது. அவனுடைய இருதயம் வேகமாக அடித்துக்கொண்டது. அவன் மயங்கிக் கீழே விழுந்தான்.

அடுத்த கணமே ஆலயத்திலுள்ள அத்தனை தீபங்களும் எரிந்தன!

• • •

ராஜசேகர் மயக்கம் தெளிந்து கண்களைத் திறந்து பார்த்தான். ஒரு பெரிய மாளிகையின் அழகிய அறையில், பஞ்சணையில் தான் படுத்து இருப்பதைக்கண்டு திகைத்தான்.

அப்பொழுது அழகே உருவான ஒரு பெண் அங்கே வந்து நின்று கொண்டு 'கல கல' என்று சிரித்தாள்.

"சிரிக்காதே! நீ யார்? என்னை இங்கே கொண்டு வந்தது யார்?"



என்று அவளிடம் எரிச்சலுடன் கேட்டான்.

"அழகிய இளைஞனே! கோபப் படாதே. நீ கேட்ட கேள்விகளுக்கு எல்லாம் நான் பதில் சொல்கிறேன். நான் கடல் மன்னரான மச்ச ராஜ னின் மகள். என் பெயர் மோகினி. நீ கடலில் விழுந்ததும் உன்னை ஒரு பெரிய மீன் பிடித்து இழுத்து விழுங்க இருந்தது. அதைப் பார்த்த நான், உன்னை அதனிடம் இருந்து மீட்டு எங்களுடைய மாளிகைக்குக் கொண்டு வந்து என் பஞ்சணையில் படுக்க வைத்தேன். உன்னுடைய மயக்கம் எப்பொழுது தெளியும் என்று கவலையுடன் இருந்தேன். நல்ல வேளையாக நீ மயக்கம் தெளிந்து எழுந்து விட்டாய்!" என்று மகிழ்ச்சியான குரலில் கூறி னாள் மோகினி.

"கடலில் என்னுடன் விழுந்த என் தங்கை நித்யாவும், நண்பன் மகுட பதியும் என்ன ஆனார்களோ தெரிய வில்லை. நான் முதலில் அவர்களைத் தேடிக் கண்டு பிடிக்க வேண்டும். போய் வருகிறேன்" என்று கூறிக் கொண்டே பஞ்சணையை விட்டு வேகமாக எழுந்தான் ராஜசேகர்.

"இளைஞனே! மானிடர்கள் நன்றி நிறைந்தவர்கள் என்று நான் கேள் விப்பட்டு இருக்கிறேன். ஆனால் நீயோ கொஞ்சம் கூட நன்றி இல்லாமல் 'போய் வருகிறேன்' என்கிறாயே!" என்று முத்துப் பல் காட்டி மோகனப் புன்னகை செய் தாள் மோகினி.

"நன்றியைக் காட்ட நான் என்ன செய்ய வேண்டும்?" என்று கேட் டான் ராஜசேகர்.

"என்னைக் கல்யாணம் செய்து கொள்ள வேண்டும்! கல்யாணம் ஆனவுடன் நானும் உன்னோடு புறப்பட்டு வந்து விடுகிறேன்" என்றாள் மோகினி.

"அது நடக்காது. நாங்கள் பொற் கோயிலுக்குச் செல்லப் புறப்பட்டு வந்தோம். எங்கள் பயணத்தைத் தொடர வேண்டும். அதற்கு முன் னர் என் தங்கையையும், என் நண்பனையும் கண்டு பிடிக்க வேண் டும். இந்த நிலையில் எனக்குக் கல்யாணமா? என்னால் நினைத்துக் கூடப் பார்க்க முடியவில்லை" என் றான் ராஜசேகர்.

"நம் திருமணம் எதற்கும் தடை யாக இருக்காது. உன்னுடன் நான் இருந்து எல்லா வகைகளிலும் உதவி செய்வேன். நானும் உன்னு டன் இப்போதே புறப்படுகிறேன். 'சரி' என்று சொல்" என்று கெஞ்சி னாள் மோகினி.

அப்பொழுது சேவகர்கள் பின் தொடர அங்கு நுழைந்த மச்ச ராஜன், "அடே மானிடப் பதரே! என் மகளின் அந்தப்புர அறைக் குள் நீ எப்படி நுழைந்தாய்? உன்னை உயிருடன் விடக் கூடாது. இவனைப் பிடித்துச் சிறையில் அடையுங்



கள்...." என்று கோபத்துடன் ஆணை இட்டான்.

அதைக் கேட்டுப் பதறிய மோகினி, "அவராக இங்கே வர வில்லை தந்தையே! நான்தான்...." என்று கூறியதைக் காதில் போட்டுக் கொள்ளாமல் அங்கிருந்து வேகமாகச் சென்று விட்டான் மச்சராஜன்.

சேவகர்கள் ராஜசேகரை பிடித்து இழுத்துக் கொண்டு நடந்தார்கள்.

• • •

நித்யா கடலையே வெறித்துப் பார்த்துக் கொண்டு இருந்தாள்.

அப்பொழுது கடற்கரை ஓரமாக வந்து நின்ற ஒரு படகில் இருந்து இறங்கிய சில கடல் கொள்ளைக் காரர்கள் நித்யாவை நோக்கி வந்தார்கள். "இந்த அழகிய கிளியைப் பிடித்துக் கொண்டு போய் நம் தலைவரிடம் கொடுத்தால் நமக்குப் பரிசு அளிப்பார்?" என்று கூறி விட்டு, நித்யாவைப் பார்த்து, "வா, போகலாம்" என்றான் ஒரு ஒற்றைக் கண்ணன்.

"எங்கே அழைக்கிறாய்?" என்று பயத்துடன் கேட்டாள் நித்யா.

"எங்கள் தலைவரிடம் அழைக்கிறேன். அவர் உன்னை ஆசைக் கிளியாக்கிக் கொள்வார்" என்றான் ஒருவன்.

நித்யா பயந்து அலறிக்கொண்டே அந்த இடத்தை விட்டு ஓடினாள். கொள்ளைக்காரர்கள் அவளைத் துரத்திக் கொண்டு சென்றார்கள்.

அந்த நேரத்தில் அவர்கள் வழியை மறிப்பதைப்போல எதிரே வந்து நின்ற ஒருவன், "எதற்காக அந்தப் பெண்ணை விரட்டுகிறீர்கள்?" என்று அதட்டினான்.

"அதைக் கேட்க நீ யார்?" என்று கோபத்துடன் கத்திய ஒற்றைக் கண்ணன், அவன் கன்னத்தில் ஓங்கி அறைந்தான். (தொடரும்)




பொற்கோயில்
7
முன் கதை : பொற்கோயிலை நோக்கிப் புறப்பட்ட மகுடபதியும், ராஜசேகரும், நித்யாவும் மூன்று திசைகளில் பிரிந்து சென்று ஆபத்தான நிலையில் இருக்கின்றனர். மகுடபதி ஒரு காளி கோயிலில் கிடக்கிறான். கடல் மன்னனின் மகள் மோகினியால் காப்பாற்றப் பட்ட ராஜசேகரைச் சிறையில் அடைத்துப் போட்டு விடுகிறான் கடல் மன்னன். கடற்கரையில் மகுடபதிக்காகக் காத்து இருந்த நித்யாவை கடல் கொள்ளைக்காரர்கள் சூழ்ந்துகொண்டு விடுகிறார்கள். இனி என்ன? மேலே படியுங்கள்!
பி.ஆர்.வரதராஜுலு



நித்யாவுக்கு உதவ வந்த ஆள், ஒற்றைக் கண்ணன் அறைந்த அறையில் கீழே சுருண்டு விழுந்தான்.

திருடர்களால் சூழப்பட்ட நித்யா வலையில் அகப்பட்ட மானைப் போல் கலங்கினாள். அப்பொழுது ஒரு திருடன் அவளைப் பிடித்துக் கொள்ள, மற்றொரு திருடன் அவள் மூக்கில் ஒரு வேரைக் காட்டினான். அந்த வேரின் வாசனையை நுகர்ந்த நித்யா, மயங்கிச் சாய்ந்தாள். மற்ற திருடர்கள் அவளைக் கீழே விழுந்து விடாதபடி தாங்கிக் கொள்ள, எல்லோரும் சேர்ந்து அவளைத் தூக்கிக் கொண்டு போய்த் தங்களுடைய படகில் ஏற்றினார்கள்.

சிறிது நேரத்தில் கடல் அலைகளை கீறிக் கொண்டு புறப்பட்ட திருடர்களின் படகு, அன்று மாலையில் கன்னித் தீவின் கரை ஓரமாக வந்து நின்றது. படகில் இருந்த திருட்டுப் பொருட்களையும், மயங்கிக் கிடந்த நித்யாவையும் தூக்கிக் கொண்டு வந்து கரையில் இறக்கினார்கள் திருடர்கள்.

அதை எல்லாம் கரையில் நின்றபடி கவனித்துக் கொண்டு இருந்த திருடர்களின் தலைவனான முடவன் கங்கு, "என்னடா, இன்று உயிர் உள்ள பொருள் ஒன்றையும் கொண்டு வந்திருக்கிறீர்கள்?" என்று கேட்டான்

"தலைவா! உங்களுக்குப் பரிசு அளிப்பதற்காக இந்தப் பளிங்குச் சிலையைக் கொண்டு வந்திருக்கிறோம். பெண் எப்படி இருக்கிறாள்?" என்று கேட்டான் ஒற்றைக் கண்ணன்.

"மிக அழகாக இருக்கிறாள். நொண்டியான என்னை அவள் விரும்புவாளா? முதலில் அது தெரிய வேண்டுமே!" என்றான் தலைவன் கங்கு.

"அவளை மயங்க வைத்துத் தூக்கிக் கொண்டு வந்தோம். நாம் யாரையும் சம்மதம் கேட்டா திருடுகிறோம்? இல்லையே! அதைப்போல இந்தக் கொய்யாக் கனியை உங்

கள் விருப்பம் போலக் கொத்தித் தின்னலாம்!'' என்றான் திருடர்களில் ஒருவன்.

"நான் அப்படி எல்லாம் செய்ய மாட்டேன் என்பது உனக்குத் தெரியாதா?'' என்று அவனை அதட்டிய கங்கு, "இவனைத் தூக்கிக் கொண்டு போய்க் கடைசிக் குடிசையில் வைத்துக் கவனமாகப் பார்த்துக் கொள்ளுங்கள்'' என்று ஆணையிட்டான்.

திருடர்கள் அவனைத் தூக்கிக் கொண்டு கடைசிக் குடிசையை நோக்கி நடந்தார்கள். அப்பொழுது மயக்கம் தெளிந்து கண் விழித்த நித்யா, அவர்கள் பிடியில் இருந்து நழுவிக் கீழே குதித்தாள். 'திருடர்கள் தன்னை எங்கேயோ கடத்திக் கொண்டு வந்து இருக்கிறார்கள்' என்பதைப் புரிந்து கொண்ட நித்யா, திடுக்கிட்டாள்.

"அழகு மானே! நீயாக அந்தக் குடிசைக்குள் போகிறாயா? அல்லது நாங்களே உன்னைத் தூக்கிக் கொண்டு போய் விடட்டுமா?'' என்று கேட்டான் ஒரு திருடன்.

நித்யா பதில் சொல்லாமல் அந்தக் கடைசிக் குடிசைக்குள் ஓடினாள்.

பகல் மறைந்து இரவு துரத்திக் கொண்டு வந்தது. உண்பதற்காகப் பழங்களையும், தேன் ஊற்றிப் பிசைந்த தினை மாவையும் கொண்டு வந்து வைத்தார்கள்.



நித்யா எதையும் தொடவில்லை. மச்சத் தீவுக் கடற்கரையில் திருடர்களில் ஒருவன், 'எங்கள் தலைவரிடம் உன்னை அழைத்துப் போகப் போகிறோம். அவர் உன்னை ஆசைக் கிளியாக்கிக் கொள்வார்' என்று கூறியது, இப்பொழுது அவள் நினைவுக்கு வந்தது. 'அந்தத் திருடர்கள் சொன்னபடியே என்னை அவர்களின் தலைவனிடம் பலியிடக் கொண்டு வந்து இருக்கிறார்கள். இனி நான் அந்தத் தலைவனின் ஆசைக்குப் பலியாக வேண்டியது தானா? இப்பொழுது என்னைக் காப்பற்ற அண்ணா ராஜசேகரும்



இல்லை; மாவீரர் மகுடபதியும் இல்லை' என்று ஏதேதோ எண்ணி, அவள் கண்ணீர் விட்டுக் கொண்டு இருந்த பொழுது குடிசையின் வாசலுக்குள் நுழைந்தான் ஒரு திருடன். குடிவெறியால் தள்ளாடிக் கொண்டே நித்யாவின் எதிரே வந்துநின்ற அவன், "பழக்குலையே! பளிங்குச் சிலையே! எங்கள் தலைவன் பால் நிலாவான உன்னைப் பருகாமல் படுத்து உறங்கிக் கொண்டு இருக்கிறான். வா, உன்னை நான் சொர்க்கத்திற்கு அழைத்துச் செல்கிறேன்" என்று உளறிக் கொண்டே நித்யாவை நெருங்கி வந்தான்.

பயத்தால் வெடவெடத்த நித்யா, 'வீல்' என்று அலறினாள்.

அடுத்த கணம் அவனை நோக்கிப் பறந்து வந்த ஒரு விஷக் கத்தி, குறி தவறாமல் அவன் மார்பில் பாய்ந்தது. அவன் சிறிது நேரத்துக்குள் இறந்து கீழே சாய்ந்தான். 'தன்னைச் சமயத்தில் வந்து தெய்வம் போல் காப்பற்றியவர் யார்?' என்பதைத் தெரிந்துக் கொள்வதற்காக வாசல் பக்கம் நோக்கினாள் நித்யா.

• • •

மூர்ச்சை தெளிந்த மகுடபதி, தன் எதிரே ஒருவன் நிற்பதைப் பார்த்தான். "யார் நீங்கள்?" என்று கேட்டுக் கொண்டே எழுந்தான்.

"நான்தான் நீ பார்க்க விரும்பிய ஈஸ்வரய்யா!" என்றான் அவன்.

"நீங்கள் சாகவில்லையா? பேயாகவில்லையா?" என்று வியப்புடன் கேட்டான் மகுடபதி.

"இல்லை. இங்குள்ள பேய்கள் என் பெயரைச் சொல்லி நாடகம் ஆடும். கடைசியில் அவை கொன்றுவிடும். உன் நல்ல காலம் நான் வந்து சேர்ந்தேன். நீ எதற்காக என்னைத் தேடி வந்திருக்கிறாய்?" என்று அவனைப் பார்த்துக் கேட்டான் ஈஸ்வரய்யா.

"நான் பொற்கோயிலுக்குச் செல்ல வழி கேட்டு உங்களிடம் வந்திருக்கிறேன். எங்கள் மன்னரின் உயிரைக் காப்பாற்றுவதற்குப் பொற்கோயிலில் உள்ள மந்திர புஷ்பத்தைக் கொண்டு வர வேண்டும். அதற்கு நீங்கள் வழி காட்ட வேண்டும்" என்று வேண்டினான் மகுடபதி.

"உன் ராஜ பக்தியைப் பாராட்டுகிறேன். ஆனால் நான் உனக்கு முழுதும் உதவ முடியுமா என்பது சந்தேகமாக இருக்கிறது. ஏனென்றால் நான் இதுவரை பொற்கோயிலுக்குச் சென்றது இல்லை. ஒரு பேய் மாளிகையில் ஒரு புலிப் பொம்மை இருப்பதாகவும், அதன் வாயில் வைக்கப்பட்டு இருக்கும் ஒரு பெட்டியில் பொற்கோயிலுக்குச் செல்லும் வழி எழுதி வைக்கப்பட்டு இருப்பதாகவும் கேள்விப்பட்டு இருக்கிறேன். ஆனால் பேய் மாளிகைக்குச் சென்றவர்கள் உயிருடன் தப்பி, பொற்கோயிலுக்குப்



போனார்களா என்ற விவரம் தெரிய வில்லை!" என்றான் ஈஸ்வரய்யா.

"அந்தப் பேய் மாளிகை எங்கே இருக்கிறது?" என்று கேட்டான் மகுடபதி.

"காட்டுகிறேன், வா!" என்று கூறி, அவனை அழைத்துக் கொண்டு கிளம்பினான் ஈஸ்வரய்யா.

சிறிது தொலைவில் பேய்மாளிகை தெரிந்தது.

ஈஸ்வரய்யா அதைச் சுட்டிக் காட்டி, "அதோ அந்த மாளிகையில் வாசல் வழியாக உள்ளே போனால் திரும்பி வர முடியாது. பின் வழி யாக வெளியே வர வேண்டும். மாளிகைக்குள் பேய்கள் அதிகமாக நடமாடும். அவற்றைக் கண்டு பயப் படாமல், புலிப் பொம்மையின் வாயில் இருக்கும் பெட்டியை எடுத்து, அதற்குள் இருக்கும் பொற்கோயிலுக்குச் செல்லும் வழி யைக் கூறும் சுவடியை எடுத்துப் படித்து விட்டு, பின் வழியாக வெளியே வர வேண்டும். ஆனால் சுவடியை எடுத்து வர முயன்றால் பேய்கள் கொன்று விடும். போய் வா! வெற்றி உன் பக்கம் இருக்கட் டும்" என்று வாழ்த்தி விடை பெற்றுச் சென்றான் ஈஸ்வரய்யா.

பயத்தையே அறியாத மாவீரன் மகுடபதி, பேய் மாளிகைக்குள் நுழைந்தான். எங்கும் இருட்டு. அவன் தடுமாறிக் கொண்டே நடந் தான். சிறிது தூரத்தில் மெல்லிய வெளிச்சம் தெரிந்தது. அவன் அதை நோக்கி நடந்தான். எதிரே ஒரு பிணம் நடனம் ஆடியது. நாலைந்து எலும்புக் கூடுகள் அவனை வழி மறித்துக் கொண்டு பயங்கர மாகக் கத்தின. அவன் எதற்கும் அஞ்சாமல் நடந்தான்.

திடீரென்று எங்கிருந்தோ வந்த ஏராளமான பாம்புகள் அவன் கை, கால்களைச் சுற்றிக் கொண்டன. தேள்கள் படை எடுத்து வந்தன. மகுடபதி பாம்புகளோடு போராடி தன்னை விடுவித்துக் கொண்டு, தேள்களிடம் இருந்து தப்பித்து, வெளிச்சம் வந்த பகுதியை நோக்கி வேகமாக நடந்தான்.

அந்த வெளிச்சம் ஒரு அறையில் இருந்து வந்தது. அது சிவப்பு நிற மாக இருந்தது. மகுடபதி அங்கு சென்றான். அறைக்குள் ஒரு பொம் மைப் புலி வாயைத் திறந்து கொண்டு இருந்தது. 'நம்முடைய முயற்சி வீண் போகவில்லை. பொற் கோயிலுக்குப் போகும் வழியைத் தெரிவிக்கும் சுவடி அந்தப் பெட்டி யில் இருக்கிறது' என்று எண்ணிக் கொண்டே பொம்மைப் புலியின் வாயில் கை வைக்கப் போனான். அப்பொழுது அந்தப் பொம்மைப் புலி உயிர்பெற்று எழுந்து அவனை நோக்கிப் பாய்ந்தது!

இரவு நேரம்.



ராஜசேகர் கடல் மன்னனின் சிறையில் அடைபட்டுக் கிடந் தான். அவனுக்குத் தப்பிக்க வழி தெரியவில்லை. தங்கை நித்யாவை யும், நண்பன் மகுடபதியையும் பற்றிய எண்ணங்கள் நெஞ்சத்தை வாட்ட, 'குர்' என்று உட்கார்ந்து இருந்தான் அவன்.

அப்பொழுது சிறைக் கதவுகளைத் திறந்து கொண்டு உள்ளே நுழைந் தாள் மோகினி.

மோகினி அவன் எதிரே வந்து நின்று கொண்டு, "மானிடனே! உனக்கு நாளை மரண தண்டனை அளிக்கப் போகிறார்கள். அதற்குள் உன்னை விடுதலை செய்து அனுப்பு வதற்காக நான் வந்திருக்கிறேன். நான் உன்னைத் திருமணம் செய்து [illegible] ஆனந்தமாக வாழ நினைத் [illegible] றை விதிவிடவில்லை. என் தந்தையின் கட்டளையை மீறி உன் னைத் திருமணம் செய்து கொண் டால் உன் தலை வெடித்து விடும். என்றால் நீ மரணம் அடையக் கூடாது. நீ வாழ வேண்டும். இனி நீ எங்கு வேண்டுமானாலும் செல்ல லாம். எல்லோரும் உறங்கிக் கொண்டு இருக்கும் இந்த நேரத் தில் நீ போய் விடு" என்றாள்.

ராஜசேகர் அவளைப் பார்த்து, "மோகினி! உன் அன்பு, நெஞ்சைத் த[illegible]ழுக்க வைக்கிறது. ஆனால் [illegible]ம என்னை அழைக்கிறது. [illegible]தப் பிறவியில் உன்னைத் திரு [illegible]ணம் செய்து கொள்ள முடியா [illegible]டாலும், அடுத்த பிறவியில் உன்னைத் திருமணம் செய்து கொள்ளத் தவம் செய்வேன்" என்றான்.

(தொடரும்)




பொற்கோயில்
8
முன் கதை : பொற்கோயிலை நோக்கி ஒன்ருகப் புறப்பட்ட மகுட பதியும், ராஜசேகரும், நித்யாவும் மூன்று திசைகளில் பிரிகிருர்கள். பேய் மாளிகையில் நுழைந்த மகுட பதியை நோக்கி ஒரு சிறுத்தைப் புலி பாய்கிறது. திருடர்கள் கூட் டத்தில் சிக்கிக் கொண்ட நித்யாவை ஒரு திருடன் பலவந்தம் செய்ய முயல, அப்பொழுது அவன் மீது ஒரு கத்தி பாய்கிறது. ராஜ சேகரை கடல் நாட்டு இளவரசி வழி அனுப்பிக் கொண்டிருக்கிருள். இனி....
பி.ஆர்.வரதராஜுலு



கடல் நாட்டு இளவரசி மோகினி, ராஜசேகரைக் கடற்கரைக்கு அழைத்துக் கொண்டு வந்தாள்.

“என் இனிய இளைஞனே! உனக்கு என் நினைவாக இதை அணிவிக்கிறேன்” என்ற மோகினி, ராஜசேகரின் விரலில் ஒரு நீல மோதிரத்தை அணிவித்தாள். பிறகு “இந்த நீல மோதிரத்தை நீ அணிந்திருப்பதால், உனக்கு விஷப் பாம்புகளால் தீங்கு நேராது. பாம்பு தீண்டியவர்களின் கை விரலில் இதை அணிவித்தால், இறந்தவர்கள் கூடப் பிழைத்துக் கொள்வார்கள். மிகவும் சக்தி வாய்ந்த இந்த மோதிரத்தை உனக்கு நான் காணிக்கையாகக் கொடுத்து இருக்கிறேன்” என்று கூறி, அவனுக்கு விடை கொடுத்தாள்.

ராஜசேகர் ஒரு படகில் ஏறிக் கொண்டு கடலைக் கடந்து மச்சத் தீவை அடைந்தான். கடற்கரையில் இரத்தக் காயங்களுடன் ஒருவன் விழுந்து கிடப்பதைப் பார்த்தான். அவனிடம் சென்றான். “யார் நீ? யார் இப்படி அடித்துப் போட்டார்கள்?” என்று கேட்டான்.

அந்த ஆள் தடுமாறிக் கொண்டே எழுந்தான். “நான் இந்தத் தீவைச் சேர்ந்தவன். இந்தத் தீவுக்கு வந்த ஒரு இளம் பெண்ணைச் சில திருடர்கள் பலவந்தமாக இழுத்துக் கொண்டு போனார்கள். அவர்களை நான் தடுத்தேன். அவர்கள் என்னை அடித்துப் போட்டு விட்டு அந்த இளம் பெண்ணைப் படகில் கடத்திக் கொண்டு போய் விட்டார்கள்” என்றான்.

‘அந்த இளம் பெண் நித்யாவாகத்தான் இருக்க வேண்டும்’ என்று முடிவு செய்த ராஜசேகர், “அந்தப் பெண்ணுடன் ஒரு இளைஞனும் இருக்க வேண்டுமே! அவனை நீ பார்த்தாயா?” என்று கேட்டான்.

“பார்த்தேன். அந்த இளைஞன் பொற்கோயிலுக்குச் செல்லும் வழியைக் கேட்டு அறிவதற்காக ஈஸ்வரய்யாவைப் பார்ப்பதற்காகச் சென்றான். பிறகு நான் அவனைப் பார்க்கவில்லை” என்றான் அந்த ஆள்.

ராஜசேகரின் முன்னால் இப்பொழுது இரண்டு பிரச்னைகள் இருந்தன. முதல் பிரச்னை, மகுடபதியைக் கண்டு பிடிப்பது. இரண்டாவது பிரச்னை, மகுடபதியின் துணையைக் கொண்டு திருடர்களிடம் இருந்து நித்யாவை மீட்பது.

• • •



நித்யாவின் எதிரே கள்வர்களின் நொண்டித் தலைவன் நின்று கொண்டிருந்தான். அவன் அவளைப் பார்த்துப் புன்னகைத்துக் கொண்டே, "பெண்ணே! பயப்படாதே! நான் உன் கற்பைக் காப்பாற்றுவதற்காக என் கூட்டத்தைச் சேர்ந்த அந்தக் கயவனைக் கொன்றேன். நான் ஒரு முறை உன்னைப்போன்ற ஒரு அழகிய பெண்ணிடம் தவறாக நடந்து கொள்ள முயன்றேன். அப்பொழுது என்னுடைய ஒரு காலை இழந்தேன். அதில் இருந்து நான் பெண்களைக் கண்களாக நினைத்து வாழ்ந்து வருகிறேன்" என்று கூறினான். அதைக் கேட்டதும் நித்யா நிம்மதியாக மூச்சு விட்டாள்.

தலைவன், "பெண்ணே! உன்னை இங்கு பிடித்து வந்தது எனக்குக் கொஞ்சம் கூடப் பிடிக்கவில்லை. உன்னை நான் அந்த நேரத்தில் விடுதலை செய்து இருந்தால், என்னுடைய ஆட்கள் உன்னை நாசப்படுத்தி இருப்பார்கள். அதனால்தான் நான் உன்னை இந்தக் குடிசையில் அடைத்து வைக்கும்படி சொன்னேன். நல்ல சமயத்தில் வந்து நான் உன்னைக் காப்பாற்றினேன். இப்பொழுது என்னுடைய ஆட்கள் யாரும் இங்கே இல்லை. நீ இங்கிருந்து போவதற்கு இதுதான் நல்ல சமயம். என்னுடன் வா!" என்று கூறி, நித்யாவை அழைத்துக் கொண்டு கடற்கரைக்கு வந்தான். அங்கு நின்று கொண்டு இருந்த ஒரு படகைக் கடலில் இறக்கினான். துடுப்பை அவள் கையில் தந்து, "போய் வா, மகளே! கடவுள் உன்னைக் காப்பாற்றுவார்" என்றான்.

கடலில் படகைச் செலுத்திக் கொண்டே திருடர் தலைவனை நன்றியுடன் நோக்கினாள் நித்யா.

• • •



தன் மீது பாய்ந்த சிறுத்தைப் புலியைப் பார்த்துத் திகைத்து நின்று விட்ட மகுடபதி, மறு கணம் சமாளித்துக் கொண்டு விலகி நின்றான். பாய்ந்து வந்த வேகத்தில் சிறுத்தைப் புலி கீழே விழுந்தது.

"ஈஸ்வரய்யா, 'இங்கே பொம்மைப் புலி இருக்கும்' என்றான். ஆனால் இங்கோ உண்மையான சிறுத்தைப் புலி இருக்கிறதே!" என்று அவன் சிந்தித்துக் கொண்டு இருந்த பொழுது, சிறுத்தைப் புலி அவன் கழுத்தை நோக்கிப் பாய்ந்தது. அதன் வாலைப் பற்றி, காலைப் பிடித்துத் தூக்கி ஓங்கித் தரையில் அறைந்தான் மகுடபதி. அது உடல் சிதறிச் செத்தது.

மகுடபதி அதன் வாயில் கை விட்டுப் பார்த்தான். அதில் பொற்கோயிலுக்குப் போகும் வழியைக் குறிக்கும் துணி இல்லை. ஏமாற்றத்துடன் மாளிகைக்குள் நடந்தான்.

சிறிது தூரத்தில் ஒரு மரப் பெட்டி இருப்பதைப் பார்த்த மகுடபதி, அங்கு வேகமாகச் சென்றான். ஆவலுடன் பெட்டியைத் திறந்து, அதில் இருந்த ஒரு துணிச் சீலையை எடுத்துப் பிரித்துப் பார்த்தான். அதில் 'பொற்கோயிலுக்குச் செல்லும் வழி' என்ற தலைப்பில், அங்கு போகும் வழிகளைப் பற்றி வரை படங்களாலும், வார்த்தைகளாலும் எழுதப்பட்டு இருந்தன.

மகுடபதி பொற்கோயிலுக்குச் செல்லும் வழிகளையும், வரை படங்

களையும் நன்ருக நினைவில் பதித்துக் கொண்டு மீண்டும் அந்தத் துணிச் சிலையைப் பெட்டியில் வைத்து மூடி விட்டு, பின்புற வழியாகப் பேய் மாளிகையை விட்டு வெளியே வந்தான். 'பொற்கோயிலுக்குப் போகும் வழி தெரிந்து விட்டது. . இனி நித்யாவையும், ராஜசேகரையும் தேடிக் கண்டு பிடிக்க வேண்டும்' என்று நினைத்துக் கொண்டே மச்சத் தீவின் கடற்கரையை நோக்கிச் சென்ருன்.

கடற்கரையில் கவலையுடன் நின்று கொண்டு இருந்த ராஜசேகரைப் பார்த்ததும், "ராஜசேகரா!" என்று பரபரப்போடு கத்திஞன் மகுடபதி.

ராஜசேகர் ஓடி வந்து மகுடபதியைத் தழுவிக் கொண்டான்.

"ராஜசேகரா! நீ இங்கு எப்படி வந்தாய்? இத்தனை நாட்களாக நீ எங்கு இருந்தாய்? உனக்காக இங்கே காத்துக் கொண்டு இருந்த நித்யாவை எங்கே காணவில்லை?" என்று கேட்டான் மகுடபதி.

ராஜசேகர் அவனுக்கு எல்லாவற்றையும் விவரமாகக் கூறிஞன்.

"திருடர்களிடம் சிக்கிக் கொண்ட நித்யாவைக் காப்பாற்ற வேண்டும். புறப்படு" என்ற மகுடபதி, ராஜசேகரை அழைத்துக் கொண்டு சென்று படகில் ஏறிஞன்.

கடலில் அவர்களுடைய படகு சிறிது தூரம் சென்ற பொழுது, எதிரே நித்யாவின் படகு வந்து



கொண்டு இருந்தது. மகிழ்ச்சி ஆர வாரத்துடன் அவளைத் தங்கள் படகில் ஏற்றிக் கொண்டு, "நித்யா! நீ எப்படித் திருடர்களிடம் இருந்து தப்பி வந்தாய்?" என்று கேட்டார்கள்.

நித்யா நடந்ததை எல்லாம் விவரமாகக் கூறினாள். பிறகு மகுடபதி, தான் பேய் மாளிகைக்குச் சென்று பொற் கோயிலுக்குச் செல்லும் வழியை அறிந்து வந்த செய்தியைக் கூறினான்.

அதைக் கவனமாகக் கேட்ட ராஜசேகர், "மகுடபதி! பொற்கோயிலுக்குச் செல்லும் வழியை நன்றாக நினைவு வைத்துக் கொண்டு இருக்கிறாய் அல்லவா? நாம் இப்போது போய்க் கொண்டு இருக்கும் வழி சரியானதுதானா?" என்று கேட்டான்.

"சரியானதுதான். நாம் இந்தக் கடல் வழியாக இரண்டு நாட்கள் பயணம் செய்த பிறகு, சிவப்பு நிறத்தில் ஒரு மலை தென்படுமாம். நாம் அங்கே இறங்க வேண்டும். பிறகு அந்த மலையின் நடுவே உள்ள கூர்மையான பாதையில் நடந்து செல்ல வேண்டுமாம். 'பிந்தியா' என்ற ஒரு காடு குறுக்கிடுமாம். அந்தக் காட்டில் பயங்கர மிருகங்கள் நடமாடுமாம். அவற்றிற்கு இரை ஆகாமல் சென்றால், 'மூசா' என்ற பாலைவனம் எதிர்ப்படுமாம். அங்கே மனிதர்களைத் தின்னும் ராட்சச ஒட்டகங்கள் இருக்குமாம். அவற்றுக்குப் பலி ஆகாமல் தப்பித்து இரண்டு நாட்கள் பயணம் செய்தால் பொற்கோயிலைக் காணலாமாம். 'கஷ்டங்கள்' என்றால் நமக்குச் சர்க்கரைப் பொங்கல் மாதிரி தானே? கஷ்டங்களை விழுப்புண்களாக ஏற்றுக் கொண்டு பொற்கோயிலுக்குச் சென்று மந்திர புஷ்பத்தைக் கொண்டு வந்து, நம் மன்னரின் உயிரைக் காப்பாற்ற வேண்டும்" என்றான் மகுடபதி.

அவர்களின் படகு கடல் நீரைக் கிழித்துக் கொண்டு சென்றது. அவர்கள் தலைக்கு மேலே ராட்சசப் பறவைகள் பறந்து கொண்டு இருந்தன.

* * *

மணிப்பூரில் மந்திரி மகேந்திரன் மிகுந்த கவலையுடன் இருந்தான். மகுடபதியின் குழுவினரைக் கொல்வதற்காக அனுப்பப்பட்ட ஜாஸ்மினும், அரக்கனும் நீண்ட நாட்களாகியும் கூடத் திரும்பி வரவில்லை. அதனால், 'அவர்கள் கொல்லப்பட்டு விட்டார்கள்' என்பதைப் புரிந்து கொண்ட மகேந்திரன், இன்னொன்றையும் புரிந்து கொண்டான். மகுடபதியும் மற்றவர்களும் எப்படியோ தப்பித்துக் கொண்டு பொற்கோயிலுக்குப் போய் விட்டார்கள்.

'அவர்களைப் பொற்கோயிலுக்குப் போக விடாமல் தடுக்க வேண்டும். மகுடபதி பொற்கோயிலில் உள்ள மந்திர புஷ்பத்தைக் கொண்டு வந்து மன்னரைப்



பிழைக்க வைத்து விட்டால், என் ஆட்டம் அவ்வளவுதான். அதை நடக்க விடாமல் செய்ய வேண்டும்' என்று தீர்மானித்த மகேந்திரன், மன்னருக்குத் தீராத வியாதியைத் தோற்றுவித்த மந்திரக் குளிகைகளைக் கொடுத்த ஒரு யோகியிடம், மேலும் ஆலோசனைகள் பெறுவதற்காகச் சென்றான்.

"மறுபடியும் நீ எங்கே வந்தாய்? மன்னரைக் கொல்வதற்கு மருந்து வாங்கிச் செல்லவா? இம்முறை நடக்காது உன் நயவஞ்சகம்" என்று கோபத்துடன் கூறினார் யோகி.

மகேந்திரன் நல்லவன் போல் நடித்து, "யோகியாரே! என்னை மன்னியுங்கள். நான் என் தவறை உணர்ந்து விட்டேன். நான் செய்த தவறுக்குப் பிராயச் சித்தமாக நானே பொற்கோயிலுக்குச்சென்று மந்திர புஷ்பத்தைக் கொண்டுவந்து மன்னரைக் காப்பாற்ற எண்ணி இருக்கிறேன்" என்றான்.

அவன் பேச்சை அப்படியே நம்பிய யோகி, "அப்படியானால்' நான் உனக்கு மந்திரப் பாத ரட்சைகளைக் கொடுக்கிறேன். அதை அணிந்து கொண்டு நீ பறந்து சென்று பிந்தியாக் காடுவரை போகலாம். பிறகு இது பயன் படாது. பொற் கோயிலுக்கு நீ உன் சொந்த முயற்சியால் மூசா பாலை வனத்தின் வழியாகச் செல்ல வேண்டும்!" என்று கூறி, அவனிடம் மந்திரப் பாத ரட்சைகளைக் கொடுத்தார்.

மகேந்திரன் அவற்றை அணிந்து கொண்டு, "பிந்தியாக் காட்டுக்குப் போ" என்று கட்டளை இட்டான்.

அடுத்த கணம் மகேந்திரன் குதிரையுடன் வானத்தை நோக்கிப் பறந்தான். அப்பொழுது அவன் மனம், 'மகுடபதி! நான் உன்னை ஒழித்துக் கட்ட இதோ புறப்பட்டு வந்து கொண்டு இருக்கிறேன்' என்று கூச்சலிட்டது.

(தொடரும்)





# பொற்கோயில்

## 9

முன் கதை: பொற்கோயிலை நோக்கிப் புறப்பட்ட மகுடபதியும், ராஜசேகரும், நித்யாவும் மூன்று திசைகளில் பிரிந்து சென்று பல ஆபத்துக்களைச் சந்தித்த பிறகு மீண்டும் ஒன்று சேர்கிறார்கள். மகுடபதி பேய் மாளிகையில் பொற்கோயிலுக்குச் செல்லும் வழியைத் தெரிந்து கொண்ட பிரகாரம் அவர்கள் பயணத்தை அமைத்துக் கொண்டு புறப்படுகிறார்கள். அவர்கள் முதலில் இரத்தம் போலச் சிவந்த மலைப் பிரதேசத்தை அடைய வேண்டும். அவர்கள் ஆவலும், பரபரப்புமாகக் கடலில் பயணம் செய்கிறார்கள். இனி என்ன?

பி.ஆர்.வரதராஜுலு



மகுடபதியும், ராஜசேகரும் நித்யாவும் இரண்டு நாட்கள் தொடர்ந்து பிரயாணம் செய்த பிறகு, அந்த இரத்தச் சிவப்பு நிறம் உள்ள மலைப் பிரதேசம் அவர்கள் கண்களுக்கு தெரிகிறது.

அவர்கள் ஆரவாரத்துடன் படகை விட்டு இறங்கி, அந்த மலைப் பிரதேசத்தை நோக்கி நடந்தார்கள். எங்கும் கண்ணுக்கு எட்டிய தூரம் வரையில் ஒரு மரமோ, பசுமையான செடியோ இல்லை. அங்கே காணப்பட்ட மலை மட்டும் அல்ல; மண்ணும் கூட இரத்தச் சிவப்புடன் காணப்பட்டது.

அவர்கள் அந்த மலையை நோக்கி ஒரு வேகத்துடன் நடந்தார்கள். அவர்கள் நடக்க நடக்க, மலை பின்னால் போவது போலத் தெரிந்தது. ஆனாலும் அதை அடைய வேண்டும் என்ற இலட்சிய வெறியுடன் அவர்கள் நடந்து போய்க் கொண்டு இருந்தார்கள்.

அந்தச் சிவப்பு மலையில் ஒரு அரக்கன் வாழ்ந்து வந்தான். அந்த வறண்ட பகுதியில் மிருகங்கள் வசிப்பது இல்லை. அதனால் அந்தத் தரித்திரம் பிடித்த அரக்கன், நீண்ட நாட்களாக உணவு இல்லாமல் பசியால் துடித்துக் கொண்டு இருந்தான். தலையில் கொம்பும், வாய்க்கு வெளியே நீட்டிக் கொண்டு இருக்கும் கோரைப் பற்களும், வானத்தை நோக்கும் பெரிய காதுகளும், கழுத்தில் வழியும் நீண்ட பின்புறக் குடுமியும் உள்ள அவனுக்கு, மந்திர தந்திரங்களும், மாயா ஜாலங்களும் தெரியும்.

அன்று அவன் மலையில் நின்று கொண்டு ஆகாரத்தைத் தேடி கீழே பார்வையைச் செலுத்தினான். தொலைவில் மகுடபதியும், ராஜசேகரும், நித்யாவும் வந்து கொண்டு இருப்பதைப் பார்த்தான். "ஆ! நீண்ட நாட்களுக்குப் பிறகு எனக்கு நர மாமிசம் கிடைக்கப் போகிறது! அவர்களைக் கொன்று தின்பதற்கு என் மாயா ஜாலத்தை உபயோகிக்க வேண்டும்" என்று கூறிக்

கொண்டே, ஒரு அழகிய பெண் உருவத்தை எடுத்தான். மலையை விட்டுக் கீழே இறங்கி வந்தான்.

மகுடபதியும், மற்றவர்களும் மிகவும் கஷ்டப்பட்டு மலை அடிவாரத்திற்கு வந்து சேர்வதற்கும், பெண் உருவம் எடுத்த அரக்கன் அவர்களிடம் வந்து சேர்வதற்கும் சரியாக இருந்தது.

அந்த இடத்தில் அந்தப் பெண்ணைப் பார்த்துத் திகைத்த மகுடபதி, "பெண்ணே! நீ யார்? இந்தப் பயங்கர மலை பிரதேசத்தில் நீ தனியாக வருவதற்கு என்ன காரணம்?" என்று கேட்டான்.

"சொல்கிறேன் என் சோதனைக் கதையை! என் பெயர் மஞ்சரி. என்னை ஒரு அரக்கன் இங்கே பலவந்தமாகத் தூக்கிக் கொண்டு வந்தான். அந்த அரக்கன் திடீரென்று இறந்து விட்டான். நாட்டிற்குத் திரும்பிப் போக எனக்கு வழி தெரியவில்லை. அதனால் இங்கேயே இருந்து, கிடைக்கும் பழங்களைத் தின்று, சுனை நீரைக் குடித்துக் காலம் தள்ளிக் கொண்டு வருகிறேன்!" என்றான் பெண்ணாக வந்த அரக்கன்.

மாயப் பெண்ணின் பேச்சு, மகுடபதிக்கு நம்பிக்கை அளிக்கவில்லை. 'இந்தப் பகுதியில் மரமோ, செடிகளோ இல்லை. பிறகு இவளுக்குத் தின்பதற்கு எப்படிப் பழங்கள் கிடைத்தன? பொய் சொல்



கிறாள். இவளிடம் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும்' என்று அவன் தீர்மானித்துக் கொண்டான்.

"புதியவர்களான உங்களைக் கண்டதில் எனக்கு மிகவும் மகிழ்ச்சி. நீங்கள் களைப்புடன் வந்திருக்கிறீர்கள். வாருங்கள். ஓய்வு எடுத்துக் கொள்ளலாம்" என்றான் மஞ்சரியாக நடித்த அரக்கன்.

பின்னால் நடக்கப் போகும் பல விஷயங்களைப் பற்றி முன்னாலேயே தெரிந்து கொள்ளக் கூடிய சக்தி படைத்தவள் நித்யா. அப்பொழுதும் அவளுக்கு ஏதோ தோன்றியது. அவள் ராஜசேகரிடம்,



"அண்ணா! இந்த மலையில் ஒரு அரக்கன் இருப்பது போலவும், அவன் நம்மைக் கொல்லப் போவது போலவும் எனக்குத் தோன்றுகிறது. நாம் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும்" என்றாள்.

அருகில் நின்ற மகுடபதி, "நித்யா! எனக்குக் கூட அப்படித்தான் தோன்றுகிறது. முதலில் இவளுடன் செல்வோம். அப்புறம் நடப்பதைப் பார்க்கலாம்" என்றான்.

மூவரும் மஞ்சரியுடன் சென்றனர். சிறிது தூரம் சென்றதும் மலைக்குள் ஒரு வழி தெரிவதைப் பார்த்தான் மகுடபதி. 'இதன் வழியாகச் சென்றால் பொற்கோயிலுக்குப் போய்ச் சேரலாம்' என்று எண்ணிக் கொண்டான்.

மஞ்சரி அவர்களை ஒரு குகைக்கு அழைத்துச் சென்றாள். அங்கு ஒரே குளிராக இருந்தது. அவர்களின் உடல் வெடவெடத்தது. ஒரு மூலையில் நெருப்பு எரிந்து கொண்டு இருந்தது. மகுடபதியும், மற்றவர்களும் அந்த நெருப்பைச் சுற்றி உட்கார்ந்து குளிர் காய்ந்தனர்.

அப்பொழுது மஞ்சரியின் வடிவில் இருந்த அரக்கன், 'இவர்களில் யாரை முதலில் தின்பது?' என்று சிந்தித்துக் கொண்டு இருந்தான்.

"மஞ்சரி! எனக்குப் பசி உயிர் போகிறது. 'இங்கு பழங்கள் கிடைக்கின்றன' என்று சொன்னாயே, எங்கு பழங்கள் கிடைக்கின்றன?" என்று கேட்டான் மகுடபதி.

அதைக் கேட்டதும் மஞ்சரி திடுக்கிட்டாள். ஆனால் சட்டென்று சமாளித்துக் கொண்டு, "பழங்கள் தானே? மலைக்கு அப்பால் உள்ள பகுதியில் நிறையப் பழ மரங்கள் இருக்கின்றன. வாருங்கள், பழங்களைப் பறித்து வரலாம்!" என்று கூறி விட்டுப் புறப்பட்டாள். "நீங்கள் இருவரும் இங்கேயே இருங்கள். நான் பழங்களைக் கொண்டு வருகிறேன்" என்று கூறி விட்டு, மஞ்சரியுடன் புதிரான புன்னகையுடன் கிளம்பினான் மகுடபதி.

இருவரும் இருண்ட குகைக்குள் நீண்ட தூரம் நடந்தார்கள். அவர்கள் முன்னால் திடீரென்று ஒரு விசித்திர மிருகம் வந்து நின்றது. அது பாம்புத் தலையுடனும், நாய் வடிவில் பெரிய உடலுடனும் காணப்பட்டது. மகுடபதி அதைப் பார்த்துத் திகைத்து நின்ற பொழுது, மஞ்சரியாக இருந்த அரக்கன், உண்மையான வடிவம் எடுத்து நின்று பயங்கரமாகச் சிரித்தான்.

"ஏ மானிடா! எனக்கு விருந்தாக நீங்கள் மூவரும் கிடைத்து இருக்கிறீர்கள். ஒரு நாளைக்கு ஒருவராக உங்கள் மூவரையும் தின்னப் போகிறேன். இன்று அந்தப் பெண். நாளைக்கு உன் நண்பன். நாளை மறு நாள் நீ...." என்று அரக்கன் கூறியதைக் கேட்ட மகுடபதி, கோபத்துடன் அவனை நோக்கிப் பாய்ந்தான்.



"நாக பைரவா! இவன் சாகத் துடிக்கிறன் இவனைக் கொன்று இவன் ஆசையை நிறைவேற்று" என்று அரக்கன் ஆணை இட்டதும், அந்த விசித்ர மிருகம் விஷம் நிரம்பிய நெருப்பைக் கக்கிக் கொண்டே மகுடபதியை நோக்கிப் பாய்ந்தது. அதனிடம் இருந்து தப்பிப்பதற்காக மகுடபதி, அங்குமிங்கும் ஓடினன். ஆனலும் விசித்திர மிருகம் அவனை விடவில்லை. அவனைக் கீழே தள்ளி அவன் கையில் பலமாகக் கொத்தியது. வேகமாக உடலில் விஷம் பரவ, சில கணங்களுக்குள் இறந்து விழுந்தான் மகுடபதி.

குகையில் நெருப்பின் அருகில் அமர்ந்து இருந்த ராஜசேகர், "நித்யா! மகுடபதி நீண்ட நேரமாகியும் திரும்பி வரவில்லை. எனக்குச் சந்தேகமாக இருக்கிறது. வா, போய்ப் பார்க்கலாம்!" என்று கூறி, நித்யாவை அழைத்துக் கொண்டு போய் ஒரு பாறையின் மறைவில் மறைந்து கொண்டு பார்வையைச் செலுத்தினன்.

மகுடபதி இறந்ததும் மற்றவர்களைக் கவனிப்பதற்காக, தோற்றத்தை மறந்தவனுய் குகைக்கு வந்தான் அரக்கன். அங்கு ராஜசேகரையும், நித்யாவையும் காணுமல் திடுக்கிட்டான். உண்மைத் தோற்றத்துடன் வந்த தன் தவறை உணர்ந்து மறுபடியும் மஞ்சரியாக மாறி, அவர்களைத் தேடிக் குகையை விட்டுக் கிளம்பினன்.

அவன் குகைக்குள் அரக்கனை வந்ததையும், பிறகு மஞ்சரியாக மாறியதையும் கவனித்த ராஜசேகர், "நித்யா! நீ கூறியபடியே நடக்கிறது. ஒரு அரக்கன்தான் மாய மஞ்சரியாக நடிக்கிறன். நாம் சாமர்த்தியமாக அவன் கதையை முடிக்க வேண்டும்" என்று கூறிக் கொண்டே, நித்யாவை அழைத்துக் கொண்டு குகைக்குத் திரும்பினன்.

வெளியே சென்ற மஞ்சரி அவர்களைத் தேடிக் காணுமல் ஏமாற்றத்துடன் குகைக்குத் திரும்பினள். அங்கு மறுபடியும் அவர்களைக் கண்டதும் ஆச்சரியம் அடைந்தாள். "இங்கே உங்களை முதலில் காணவில்லையே! எங்கே போயிருந்தீர்கள்?" என்று கேட்டாள் மஞ்சரி.

"உன்னைத் தேடித்தான் வெளியே போய் இருந்தோம். ஆமாம். நீ மட்டும் தனியாக வருகிறுயே! உன்னுடன் கிளம்பி வந்த மகுடபதி எங்கே?" என்றன் ராஜசேகர்.

"நானும் மகுடபதியும்தான் முதலில் இங்கே வந்தோம். உங்களை இங்கு காணுததால், உங்களைத் தேடி அவர் வெளியே சென்றிருக்கிறர். அவர் வந்து விடுவார்" என்று பொய் கூறினள் மஞ்சரி.

நேரம் ஓடிக் கொண்டே இருந்தது. மகுடபதி வரவில்லை. அவன் எப்படி வருவான்? அவன்தான் இறந்து விட்டானே!

"மஞ்சரி! மகுடபதியை நீ என்னவோ செய்து விட்டாய். அதனல்



தான் அவர் வரவில்லை" என்று பொறுமை இழந்து கத்தினள் நித்யா.

அதைக் கேட்டதும் மஞ்சரியாக நடித்த அந்த அரக்கனுக்குக் கோபம் வந்தது. 'அவர்களை அடித்துக் கொன்று விடலாமா?' என்று ஒரு கணம் நினைத்தான். ஆனால் 'ஒரு நாளைக்கு ஒருவர் வீதம் அடித்துக் கொன்று தின்னப் பட வேண்டியவர்களை ஒரே நாளில் அடித்துக் கொன்று விடக் கூடாது. இன்றைக்குத்தான் தின்பதற்கு மகுடபதியின் பிணம் இருக்கிறதே' என்ற நினைவு வந்ததும், கோபத்தை அடக்கிக் கொண்டு, "பெண்ணே! என்னை நீ வீணாகச் சந்தேகப்படுகிறாய். நான் இப்பொழுதே சென்று மகுடபதியை அழைத்துக் கொண்டு வருகிறேன்" என்று கூறி விட்டு வெளியேறினன்.

சிறிது நேரத்தில் அரக்கன் மகுடபதியைப்போல உருவம் எடுத்து வந்து அவர்கள் முன்னல் நின்றான்.

"மகுடபதி! பழம் கொண்டுவருவதாகச் சொல்லிச் சென்ற நீ, வெறும் கையுடன் வந்து இருக்கிறாயே! என்ன காரணம்?" என்று கேட்டான் ராஜசேகர்.

"உனக்கு காரணம் சொல்ல வேண்டுமா? சும்மா கேள்வி கேட்டுத் துளைத்தால் உன்னைக் கொன்று விடுவேன்" என்று வெறியுடன் கத்தினன் மகுடபதியின் உருவத்தில் இருந்த அரக்கன்.

'மகுடபதி இப்படி வெறித்தனமாகப் பேச மாட்டன். இவன் மகுடபதியின் தோற்றத்தில் வந்து இருக்கும் அரக்கன்தான்' என்ற தீர்மானத்துடன், அவனை ஏறிட்டுப் பார்த்தான் ராஜசேகர்.

(தொடரும்)





# பொற்கோயில்

10

முன் கதை : மகுடபதியும், ராஜசேகரும், நித்யாவும் ஒரு சிவப்பு மலைப் பிரதேசத்திற்கு வருகிறார்கள். அங்கு வாழ்ந்து வந்த ஒரு அரக்கன், 'மஞ்சரி' என்ற பெண் உரு எடுத்து அவர்களைக் கொல்வதற்காக குகைக்கு அழைத்துச் செல்கிறான். மகுடபதியைத் தனியே அழைத்துப் போய், ஒரு விசித்ர மிருகத்தை ஏவி விட்டுக் கொல்கிறான். பிறகு மகுடபதியின் உருவத்தை எடுத்து வந்து ராஜசேகரையும், நித்யாவையும் சந்திக்கிறான். அவர்கள் அவனைச் சந்தேகிக்கிறார்கள். இனி....

பி.ஆர்.வரதராஜுலு



'இப்படிக் கோபமாக வெடிப் பவன் நிச்சயம் உண்மையான மகுடபதியாக இருக்க முடியாது. இவன் மகுடபதியின் உருவில் வந்திருக்கும் அரக்கனைத்தான் இருக்க வேண்டும்' என்று முடிவு கட்டிய நித்யா, அதை வெளியே காட்டிக் கொள்ளாமல், மகுடபதியின் உருவில் தோன்றிய அரக்கனைப் பார்த்து, "மகுடபதி! இங்கு வந்தவுடன் நீ என்னிடம் மந்திர, மாயா ஜால மகிமைகளைக் காட்டுவதாகச் சொன்னாய் அல்லவா? அதன்படி நீ இப்பொழுது புகையாக மாறி, இந்தச் சீசாவுக்குள் நுழைய வேண்டும்" என்று கூறி, அங்கு இருந்த ஒரு சீசாவை எடுத்து. போலி மகுடபதியாக நடித்துக் கொண்டு இருந்த அரக்கனின் முன்னால் வைத்தாள்.

அதைப் பார்த்ததும் அரக்கனுக்குக் கிலி ஏற்பட்டு விட்டது. என்றாலும் 'நித்யா சொல்வது போல நடித்தால்தான் தன்னை உண்மையான மகுடபதி என்று நம்புவாள்' என்று நினைத்து, "நித்யா! நீ கூறியபடியே நான் செய்து காட்டுகிறேன். ஆனால் நான் சீசாவுக்குள் புகையாக மாறி நுழைந்த பிறகு, நீ சீசாவின் மூடியை மூடி விடக் கூடாது. பிறகு நான் வெளியில் வரவே முடியாது" என்றான். "சரி" என்றாள் நித்யா.

உடனே அந்த அரக்கன், புகையாக மாறி சீசாவுக்குள் நுழைந்தான். அதற்காகவே காத்திருந்த ராஜசேகர், விரைந்து சீசாவை மூடி விட்டு, "நித்யா! நீ சாமர்த்தியமாகப் பேசி அரக்கனைப் புகையாக மாறச் செய்து சீசாவுக்குள் அடைக்க வழி செய்தாய். இதோடு அவன் ஒழிந்தான். இனி நாம் நம்முடைய மகுடபதியைத் தீவிரமாகத் தேடிக் கண்டு பிடிக்க வேண்டும். வா, போகலாம்'' என்று கூறி விட்டு, அரக்கனை அடைத்து வைத்த சீசாவை எடுத்துக் கொண்டு, நித்யாவை அழைத்துக் கொண்டு கிளம்பினான்.

அவர்கள் சிறிது தூரம் சென்றதும் கட்டை போல் விறைத்துக்

கிடந்த மகுடபதியின் உடலைப் பார்த்துத் திடுக்கிட்டார்கள். "மகுடபதி!...." என்று அலறிக் கொண்டே ஓடிய ராஜசேகர், "மகுடபதி!.... என் ஆருயிர் நண்பா! நட்புக்கு இலக்கணமாக வாழ்ந்த நல் இதயம் படைத்தவனே! துன்பத்தைத் தோளில் தாங்கி, ஆபத்தைப் பொடிப் பொடியாக்கி, மலை போன்ற மன உரத்தோடு எங்களை வழி நடத்தி வந்த இலட்சிய வீரனே! நீ இல்லாத உலகத்தை என்னால் நினைத்துக் கூடப் பார்க்க முடியவில்லையே!.... என் இனிய நண்பனே! உன்னுடைய இந்தச் சோக முடிவுக்கு யார் காரணம்?" என்று கதறினான்.



அதைப் பார்த்த நித்யாவும் குலுங்கிக் குலுங்கி அழுதாள்.

ராஜசேகர் கண்களைத் துடைத்துக் கொண்டு, மகுடபதியின் உடலைக் கூர்ந்து பார்த்து விட்டு நித்யாவைத் திரும்பிப் பார்த்தான். "மகுடபதியின் உடல் நீல நிறமாக இருப்பதைப் பார்த்தாயா? இவனை ஒரு விஷப் பாம்பு கடித்து இருக்கிறது. ஆதனால்தான் இவனுடைய உடல் நீல நிறமாக இருக்கிறது. அதனால் என்ன? நான் இவனைப் பிழைக்க வைக்கிறேன் நித்யா!" என்றான்.

"எப்படி அண்ணா?" என்று கேட்டாள் நித்யா.

ராஜசேகர் தன் கை விரலில் அணிந்து இருந்த நீல நிற மோதிரத்தை அவளிடம் காட்டி, "நித்யா! இந்த மோதிரத்தைக் கடல் மன்னன் மகள் மோகினி எனக்கு அளித்து, 'பாம்பு தீண்டி இறந்தவர்கள் கையில் இந்த மோதிரத்தை அணிவித்தால், அவர்கள் உடனே உயிர் பிழைத்து எழுவார்கள்' என்று கூறினாள். அதைப் பற்றி நான் உனக்கு முன்னாலேயே சொல்லி இருக்கிறேன். ஆனால் நீ அதை மறந்து போய் விட்டாய். இப்பொழுது மோகினியின் மோதிர சக்தியைப் பரிசோதித்துப் பார்த்து விடுவோம்" என்று கூறி, நீல நிற மோதிரத்தைக் கழற்றி, மகுடபதியின் கை விரலில் போட்டான்.



மறு கணம் உறக்கத்தில் இருந்து விழித்துக் கொண்டவன் போல எழுந்து உட்கார்ந்தான் மகுடபதி. எதிரே காணப்பட்ட ராஜசேகரையும், நித்யாவையும் பார்த்து, "நீங்கள் இங்கே எப்படி வந்தீர்கள்? என்னைத் தாக்கிய அந்த விந்தை மிருகம் என்ன ஆயிற்று?" என்று வியப்புடன் கேட்டான் மகுடபதி.

"மகுடபதி! நான் அந்த விந்தை மிருகத்தை விடக் கொடிய அரக்கனை இந்தச் சீசாவுக்குள் அடைத்து விட்டேன். நீ பாம்பு தீண்டி இறந்து போனாய். மோகினி எனக்குக் கொடுத்த நீல நிற மோதிரத்தை உன் கை விரலில் அணிவித்து, உன்னை உயிர் பிழைக்க வைத்தேன். பிறகு அதைப் பற்றி நாம் விவரமாகப் பேசலாம். முதலில் நாம் சனியன் பிடித்த இந்த இடத்தை விட்டுப் போய் விட வேண்டும்" என்றான் ராஜசேகர்.

"ஆம். நாம் பொற்கோயிலை நோக்கி உடனே புறப்பட வேண்டும். அதோ தொலைவில் மரங்கள் அடர்ந்த ஒரு காடு தெரிகிறதே. அது அநேகமாக பிந்தியா காடாகத்தான் இருக்க வேண்டும். அங்கே விஷப் பூச்சிகள் ஏராளமாக இருக்கின்றனவாம். நாம் அதில் மிகக் கவனமாகச் செல்ல வேண்டும். ராஜசேகர்! அரக்கன் இருக்கும் அந்த சீசாவை இப்படிக் கொடு" என்ற மகுடபதி, ராஜசேகரிடம் இருந்து சீசாவை வாங்கினான்.

தரையில் ஆழமாகக் குழி தோண்டி, அதைப் புதைத்தான்.

பிறகு மூவரும் தொலைவில் தெரிந்த காட்டை நோக்கி நடக்க ஆரம்பித்தார்கள். நீண்ட தூரம் போனதும் அவர்கள் ஒரு காட்சியைக் கண்டார்கள்.

அந்தரத்தில் தெரிந்த எலும்பு ஒன்று ஒரு மலைவாசியின் உடம்பில் 'பட்பட்' என்று அடித்துக் கொண்டு இருந்தது. வலி பொறுக்காமல் அந்த மலைவாசி அலறிக் கொண்டே அங்கும் இங்கும் ஓடினான். ஆனாலும் எலும்பு அவனை விடாமல் துரத்தி அடித்தது.

அதைக் கண்டு கண்களை அகல விரித்த ராஜசேகர், "கேவலம், ஒரு எலும்பு ஒரு மனிதனை என்ன அடி அடிக்கிறது!" என்று வியப்புடன் கூறினான்.

அதைக் கேட்டதும் மாய எலும்பு மலை வாசியை அடிப்பதை நிறுத்திவிட்டு, "என்னைக் கேவலம் என்று பேசியதால்தான் இந்த மலைவாசி என்னிடம் அடிபட்டுக் கொண்டு இருக்கிறான். என்னை மரியாதைக் குறைவாகப் பேசியதற்காக நீ மன்னிப்புக் கேட்கிறாயா? அல்லது அந்த மலைவாசியைப் போல நீயும் அடிபட்டுச் சாக விரும்புகிறாயா?" என்று கேட்டுக் கொண்டே ராஜசேகரை அடிப்பதற்காக விரைந்து வந்தது.

ராஜசேகர் மன்னிப்புக் கேட்கத் தயாராக இல்லை. ஆனால் அந்த



மாய எலும்பின் அபாரமான சக்தியை உணர்ந்த மகுடபதி, "மகாகனம் பொருந்திய எலும்பு அவர்களே! நீங்கள் வானத்தை விட உயர்ந்தவர்கள். உங்களுடைய பெருமையை உணராமல் பேசிய என் முட்டாள் நண்பனை அருள் கூர்ந்து மன்னித்து விடுங்கள்" என்று நடிப்புக் குரலில் நயமாகப் பேசினன்.

அவன் பேச்சைக் கேட்டு உற்சாகத்தோடு குதித்த எலும்பு, "எத்தனை நாட்களுக்குப் பிறகு எனக்கு மரியாதை அளிக்கும் ஒரு மனிதனை நான் பார்க்கிறேன்? ஏ இளைஞனே! நான் உன் பேச்சைக் கேட்டு மகிழ்ந்தேன். உன் நண்பனையும், அந்த மலைவாசியையும் விடுதலை செய்கிறேன்" என்றது.

"எலும்பு அவர்களே! உங்களைச் சாதாரணமாக நினைத்துப் பேசிய அந்த மடையர்களுக்கு உங்களுடைய பெருமை மிகுந்த வரலாற்றை எடுத்துக் கூறுங்கள். அவர்கள் உங்கள் பெருமையை அறியட்டும்" என்றுன் மகுடபதி.

"கூறுகிறேன். நான் சாதாரண மனிதனுடைய எலும்பு அல்ல. ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னல் சர்வ சக்திகள் படைத்த ஒரு மந்திரவாதி இருந்தார். அவர் விதி முடிந்து இறந்ததும் அவரின் உடலைப் பூமிக்குள் புதைத்து வைத்தார்கள். அவருடைய எலும்புக் கூட்டில் இருந்த நான், அவருடைய சக்திகளை எல்லாம் பெற்று வெளியே வந்து உலவுகிறேன். எனக்கு மரியாதை அளிப்பவர்களுக்கு நான் உதவுகிறேன். என்னைக் கேவலமாகப் பேசுபவர்களை நான் பழி வாங்குகிறேன்" என்றது எலும்பு.

"வள்ளல் குணம் படைத்த எலும்பு அவர்களே! நீங்கள் ஒரு உதவி செய்ய வேண்டும். நாங்கள் அதோ தெரியும் பிந்தியாக் காட்டிற்குச் சென்று கொண்டு இருக்கிரேம். அங்கே ஏராளமான விஷப் பூச்சிகள் இருப்பதாகக் கேள்விப் பட்டோம். அவற்ருல் எங்களுக்கு ஆபத்து நேராமல் இருக்க, நீங்கள் ஏதாவது விஷ முறிவு கூற வேண்டும்" என்ருன் மகுடபதி.

"அன்பனே! அவை விஷப் பூச்சிகள் அல்ல; உடலுக்குள் ஊடுருவிச் சென்று இரத்தத்தை உறிஞ்சிக் குடிக்கும் உயிர் கொல்லிகள். இப்பொழுது அவை அதிக அளவில் இல்லை. அந்தப் பூச்சிகள் உடம்பில் பட்டதும் அவற்றைக் கத்தியால் வெட்டிக் கொன்று விடுங்கள். பிறகு உங்களுக்கு ஆபத்து நேராது. உங்களுக்கு என் வாழ்த்துகள்" என்று கூறி விட்டு அங்கிருந்து சென்றது மாய எலும்பு.

அப்பொழுது மலைவாசி, "நண்பர்களே! நீங்கள் ஆபத்தான நேரத்தில் வந்து அந்த மாய எலும்பிடம் இருந்து என்னைக் காப்பாற்றினீர்கள். அதற்கு நன்றியாக என்னு



டைய' வாளை உங்களுக்குத் தரு கிறேன். பிந்தியாக் காட்டில் பூச்சிகளை வெட்டிக் கொல்ல இது உங்களுக்குப் பயன்படும்'' என்று கூறி, தன் வாளை மகுடபதியிடம் கொடுத்து விட்டு விடை பெற்றுக் கொண்டான்.

• • •

மந்திரப் பாத ரட்சைகளை அணிந்த மந்திரி மகேந்திரன், பிந்தியாக் காட்டில் இறங்கி நின்று கொண்டு சுற்றிலும் பார்த்தான்.

அப்பொழுது சற்று தள்ளி நின்று விலகி கொண்டு இருந்த ஒரு விசித்திரக் குடுமி மனிதன், ஒரு கூடையைத் திறந்து அதற்குள் இருந்த உயிர் கொல்லிப் பூச்சிகளை ஒரு மானை நோக்கி ஏவி விட்டான். பல வண்ணங்களில் பறந்து சென்ற அவை, மானின் இரத்தத்தை உறிஞ்சிக் கொன்று விட்டு, அவனுடைய கூடைக்குத் திரும்பி வந்தன. அவன் ஓடிச் சென்று மானின் உடலைப் பிய்த்துத் தின்ன ஆரம்பித்தான்.

அதைப் பார்த்துக் கொண்டு இருந்த மகேந்திரன் ஆச்சரியம் அடைந்தான். 'அவன் உதவி அவசியம்' என்று நினைத்து, அவனிடம் சென்றான். 'நான் உன் உதவியை நாடி வந்து இருக்கிறேன். இது என் காணிக்கை'' என்று கூறி, தன் முத்துமாலையை எடுத்து அவனிடம் கொடுத்தான்.

''நான் உனக்கு என்ன உதவி செய்ய வேண்டும்?'' என்று மகிழ்ச்சியுடன் கேட்டான் அந்த மனிதன்.

''என்னைத் தொடர்ந்து மூன்று பகைவர்கள் இங்கே வருவார்கள். அவர்களை நீ கொல்ல வேண்டும்'' என்றான் மகேந்திரன்.

''கொல்ல வேண்டுமா? அதுவும் என் கையாலா? என்னால் முடியாது. உன் முத்து மாலையை நீயே வைத்துக் கொள்'' என்று கத்தினான் அவன்.

(தொடரும்)




பொற்கோயில்
11
முன் கதை : மகுடபதியும், ராஜசேகரும், நித்யாவும் பொற்கோயிலை நோக்கிச் செல்கிறார்கள். வழியில் ஒரு அரக்கன் மகுடபதியைக் கொல்கிறான். ராஜசேகரும், நித்யாவும் அந்த அரக்கனைத் தந்திரமாக ஒரு சீசாவுக்குள் அடைத்துவிடுகிறார்கள். ராஜசேகர் மோகினியிடம் இருந்து பெற்ற மோதிரத்தைக் கொண்டு மகுடபதியைப் பிழைக்க வைக்கிறான். பிறகு மூவரும் பிந்தியாக் காட்டுக்குச் செல்கிறார்கள். அங்கு மந்திரி மகேந்திரன் ஒரு காட்டு வாசியிடம் பேசிக் கொண்டு இருக்கிறான். இனி....
பி.ஆர்.வரதராஜுலு



மந்திரி மகேந்திரன் அந்தக் காட்டு வாசியைப் பார்த்துச் சிரித்து, "நீ உன் கைகளால் என் எதிரிகளைக் கொல்ல வேண்டாம். நீ சற்று முன்னல் விஷ வண்டுகளை ஏவி விட்டு, மானைக் கொன்ருய் அல்லவா? அதைப் போல நீ வண்டுகளை ஏவி விட்டு, என் எதிரிகளைக் கொன்ருல் போதும். அதனல் நமக்கு இரட்டை லாபம் கிடைக்கும்" என்ருன்.

"இரட்டை லாபமா?" என்று கேட்டான் காட்டுவாசி.

"ஆமாம். நீ வண்டுகளை ஏவி விட்டால் என் எதிரிகள் சாவார்கள். அது எனக்கு லாபம். என் எதிரிகளை நீ சாக வைத்தால் உனக்கு முத்து மாலை பரிசாகக் கிடைக்கும். அது உனக்கு லாபம்" என்ருன் மகேந்திரன்.

காட்டுவாசி, 'கிடைக்கும் பரிசை இழந்து விடக் கூடாது' என்று நினைத்து, அவனை நட்புடன் பார்த்தான். "உனக்குக் கதை தெரியாது. சொல்கிறேன், கேள். ஒரு காலத்தில் இந்தக் காட்டில் நிறைய விஷ வண்டுகள் இருந்தன. இப்பொழுது எல்லாமே நாசம் ஆகி விட்டன. நான் எப்படியோ கஷ்டப்பட்டு மூன்று வண்டுகளைப் பிடித்து, அவற்றை மிக மிகப் பாதுகாப்பாக வளர்த்து வருகிறேன். உன் எதிரிகளால் என்னுடைய வண்டுகளுக்கு ஆபத்து நேர்ந்தால் என்ன செய்வது?" என்று கேட்டான்.

"எப்படி ஆபத்து நேரும்? உன்னுடைய வண்டுகள் பயங்கர விஷ சக்தி உள்ளவை. நீ ஏவி விட்டவுடன்தான் அவை அவர்கள் உடலுக்குள் ஊடுருவிச் சென்று, அவர்களைக் கொன்று விடப் போகின்றனவே!"

"ஆமாம். என்னுடைய வண்டுகளுக்கு ஆபத்து நேரவே நேராது. உன் எதிரிகள் எங்கே இருக்கிருர்கள்? சொல். அவர்களுக்குச் சாவு ஓலை எழுதுகிறேன்" என்ருன் காட்டுவாசி.

"அவர்கள் எங்கு இருக்கிருர்கள் என்பது தெரியவில்லை" என்ருன் மகேந்திரன்.

"அவர்களைத் தேடிப் பார்க்கலாம். வா!" என்று கூறிய காட்டுவாசி, வேகமாக நடந்தான். மகேந்திரன் அவனைத் தொடர்ந்து விரைந்தான்.

சிறிது தூரம் சென்றதும் காட்டுவாசி உயரமாக இருந்த ஒரு மரத்தின் மீது ஏறினன். மகேந்திரனும் கூடவே ஏறினன்.

காட்டுவாசி ஒரு மரக் கிளையில் உட்கார்ந்து கொண்டு, "இங்கு இருந்து பார்த்தால் பாதிக் காடு வரை தெரியும். உன் எதிரிகள் எங்கே இருக்கிருர்கள் என்று பார்த்துச் சொல்" என்ருன்.

மகேந்திரன் பார்வையைத் தீவிரமாக ஓட்டினன். சற்று தொலைவில் மகுடபதியும், ராஜசேகரும், நித்யாவும் உட்கார்ந்து இருப்பதைப் பார்த்தான். பிறகு புன்னகையுடன் காட்டுவாசி இருந்த பக்கமாகத் திரும்பினன். "அதோ அந்த மரத்தடியில் என் எதிரிகள் உட்கார்ந்து இருக்கிருர்கள். நீ அவர்களை இப்பொழுதே கொன்று விட வேண்டும்!" என்ருன்.

இருவரும் மரத்தை விட்டுக் கீழே இறங்கினர்கள்.

"காட்டு நண்பா! நீ அவர்கள் கதையை முடித்து விடு. நான் உன்னை நம்புகிறேன். நீ நாட்டில் வாழும் நய வஞ்சக மனிதர்களைப் போல நம்பிக்கை மோசம் செய்ய மாட்டாய். நிச்சயம் நீ அவர்களைக் கொல்வாய். நான் பொற்கோயிலை



நோக்கிப் பயணத்தைத் தொடர்கிறேன்" என்று கூறி விட்டு எதிர்ப் பக்கமாக நடக்க ஆரம்பித்தான் மகேந்திரன்.

காட்டுவாசி வண்டுகள் அடைக்கப் பட்டு இருந்த கூடையுடன் மகுடபதியும், ராஜசேகரும், நித்யாவும் அமர்ந்து இருந்த மரத்தை நோக்கி நடந்தான்.

மரத்தடியில் உட்கார்ந்து இருந்த ராஜசேகர், பார்வையைச் சுற்றிலும் ஓட விட்டுக் கொண்டே, "மகுடபதி! கண்களுக்கு எட்டிய தூரம் வரையில் ஒரு விஷ வண்டைக் கூடக் காணேமே! விஷவண்டுகள் இல்லாத இந்தக் காடு பிந்தி



யாக் காடுதானா? அல்லது நாம் வழி தவறி வந்து விட்டோமா?" என்று வியப்புடன் கேட்டான்.

"ராஜசேகர்! நாம் வழி தவறி வரவில்லை. சரியாக பிந்தியாக் காட்டுக்குத்தான் வந்து இருக்கிறோம். அந்தரத்தில் வந்து நம்மோடு பேசிய அந்த எலும்பு, 'பிந்தியாக் காட்டில் இப்பொழுது விஷ வண்டுகள் அழிந்து விட்டன' என்று கூறியதை நீ மறந்து விட்டாயா? சரி. பொற்கோயிலை நோக்கிப் பயணத்தைத் தொடரலாம். எழுந்திருங்கள்" என்று கூறினான் மகுடபதி.

மூவரும் எழுந்து நடந்தார்கள். அவர்கள் சிறிது தூரம் சென்றதும், அவர்களை வழி மறிப்பது போல எதிரே நின்று கொண்டு இருந்த அந்தக் காட்டுவாசி, "மதி கெட்ட மடையர்களே! இந்தப் பிந்தியாக் காட்டுக்குள் அடி எடுத்து வைக்க உங்களுக்கு எவ்வளவு தைரியம்?" என்று காட்டுத் தனமாகக் கத்தினான்.

"அதைக் கேட்க நீ யார்? இந்தக் காட்டுக்கு ராஜாவா?" என்று எரிச்சலுடன் கேட்டான் ராஜசேகர்.

"என்னை எதிர்த்துக் கேள்வி கேட்க உனக்கு எவ்வளவு பெரிய துணிச்சல்? அவன் உங்களைப் பற்றிச் சொன்னது சரியாகத்தான் இருக்கிறது" என்றான் காட்டுவாசி.

"எவன்?" என்று கேட்டான் மகுடபதி.

"நீங்கள் யாரைத் துரத்திக் கொண்டு வந்தீர்களோ அவன்!" என்ருன் காட்டுவாசி.

'அவன் மகேந்திரனைத் தான் சொல்கிருன்' என்பதைப் புரிந்து கொண்ட ராஜசேகர், "நாங்கள் அவனைத் துரத்தி வர வில்லை. அவன்தான் எங்களைத் துரத்திக் கொண்டு வருகிருன். இப்பொழுது அந்த அயோக்கியன் எங்கே?" என்று கேட்டான் மகுடபதி.

"அவன் என் நண்பன். அவனைப் பற்றிய ரகசியத்தை உங்களுக்குச் சொல்ல மாட்டேன். இனி உங்களை உயிரோடு விடவும் மாட்டேன்" என்று கோபத்துடன் கத்திய காட்டுவாசி, "சாவதற்குத் தயார் ஆகுங்கள்" என்று கூவிக்கொண்டே கூடையைத் திறந்து ஒரு விஷ வண்டை ராஜசேகர் மீது ஏவினன்.

அந்த வண்டு ராஜசேகரை நெருங்கி வந்த போது, மகுடபதி வாளை ஓங்கி அதை வெட்டி வீழ்த்தினன்.

அதைக் கண்டு திடுக்கிட்ட காட்டு வாசி, ஆத்திரத்துடன் மற்ருெரு வண்டை நித்யாவை நோக்கி ஏவி விட்டான்.

அதை மகுடபதியின் வாள் இரண்டாகப் பிளந்தது.

அதனல் வெறி அடைந்த காட்டு வாசி தன்னிடம் மீதமாக இருந்த மூன்ருவது வண்டை, மகுடபதி யின் மீது ஏவி விட்டான். அந்த வண்டு பறந்து வந்து கொண்டு



இருக்கும் போதே, எதிர் மறித்து அதைவாளால் வெட்டிக் கொன்றான்.

இருந்த மூன்று வண்டுகளும் இறந்து போனதும், காட்டுவாசி யின் உடல் ஆட்டம் கண்டது. கிலி யுடன் ஓட ஆரம்பித்தான்.

அவனைப் பின் தொடர்ந்து ஓடி னான் மகுடபதி. கண்மண் தெரியா மல் ஓடிய காட்டுவாசி, கல் இடறிக் கீழே விழுந்தான். அவனைத் துரத் திச் சென்ற மகுடபதி, அவன் கழுத்தைப் பிடித்துத் தூக்கி நிறுத்தி, "எங்களைக் கொல்வதற்கு உன்னை ஏவி விட்டவன் மணிப்பூர் மந்திரி மகேந்திரன் தானே? உண் மையைச் சொல். இல்லா விட்டால் உன் வண்டுகளை வெட்டிக் கொன்ற தைப் போல உன்னையும் வெட்டிக் கொன்று விடுவேன்" என்று உறு மினான்.

"நான் உண்மையைச் சொல் கிறேன். என்னை உயிரோடு விட்டு விடு. மகேந்திரன்தான் உங்களைக் கொல்வதற்காக எனக்கு முத்து மாலையைக் கொடுத்தான்" என்றான் காட்டுவாசி.

"இப்பொழுது மகேந்திரன் எங்கே?" என்று கேட்டான் மகுட பதி.

"பொற்கோயிலுக்குச் செல்வ தாகக் கூறி விட்டுப் போனான்!" என்றான் காட்டுவாசி.

அவனை விடுதலை செய்து விட்டு, தன் நண்பர்களிடம் திரும்பினான் மகுடபதி. "மகேந்திரன் பொற் கோயிலுக்குப் போய் இருக்கிறான். முதலில் அவனை அங்கு போக விடாமல் தடுத்து நிறுத்த வேண் டும். புறப்படுங்கள்" என்றான்.

• • •

மூசா பாலைவனத்தில் கால் வைத்தான் மகேந்திரன்.

அப்பொழுது பத்துப் பேர் ஈட்டி களை நீட்டியபடி வந்து அவனைச் சூழ்ந்து கொண்டார்கள். ஒரு ஒட்ட கத்தில் அமர்ந்து வந்த தலைவன் மூசா, ஈட்டியை மகேந்திரனை நோக்கி நீட்டிக் கொண்டு, "யார் நீ? என் அனுமதி இல்லாமல் இந்தப் பாலைவனத்திற்கு எதற்காக வந் தாய்?" என்று கர்ஜித்தான்.

"பொற்கோயிலுக்குச் செல்ல வந்தேன். என்னை மூன்று பேர் விரட்டிக் கொண்டு வருகிறார்கள். அவர்களை நீங்கள் கொன்றால் உங் களுக்கு வைர மோதிரத்தைப் பரி சாக அளிக்கிறேன்" என்று பல்லைக் காட்டினான் மகேந்திரன்.

"என் அனுமதி இல்லாமல் இங்கே வந்தது மட்டும் அல்லா மல் கொலை செய்வதற்கு என்னை விலை பேசும் இவனை, நம் ராட்சச ஒட்டகத்திற்கு இரையாகப் போடுங்கள்" என்று கட்டளை இட் டான் தலைவன் மூசா.

அப்பொழுது ஒரு கிழவன் அங்கு ஓடி வந்து, "மூசா! உன் நோய் வாய்ப்பட்ட மகனின் நிலை ரொம்ப மோசமாகி விட்டது. உடனே அந்த ராட்சச ஒட்டகம்



எச்சில் படுத்திய பேரீச்சம் பழத்தைக் கொண்டு வந்து கொடுத்தால் தான் உன் மகன் உயிர் பிழைப்பான்" என்ருன்.

அந்த ராட்சச ஒட்டகம் மாமிசத்தைத் தவிர, பழங்களை எல்லாம் தின்னுதே! அந்தப் பயங்கர ஒட்டகத்தின் அருகே சென்று பேரீச்சம்பழத்தைக் கொடுக்க யார் தைரியத்துடன் முன் வருவார்கள்?" என்று கேட்டான் மூசா.

மகேந்திரன், "நான் ராட்சச ஒட்டகத்திடம் தைரியமாகச் சென்று பேரீச்சம் பழத்தை எச்சில் படுத்தி கொண்டு வருகிறேன். என்னை நீ விடுதலை செய்ய வேண்டும்...." என்ருன்.

"சரி. இல்லா விட்டால் அந்த ராட்சச ஒட்டகமே உன்னைக் கவனித்துக் கொள்ளும்" என்ற தலைவன் மூசா, மகேந்திரனை ராட்சச ஒட்டகத்திடம் அழைத்துப் போகும்படி ஆணை பிறப்பித்தான்.

மூசாவின் ஆட்கள் மகேந்திரனை ராட்சச ஒட்டகத்திடம் கொண்டு சென்ருர்கள். உண்மையிலேயே கோழையான மகேந்திரன், அந்த ராட்சச ஒட்டகத்தின் பயங்கர உருவத்தைப் பார்த்து நடுங்கினன். மூசாவின் ஆட்கள் அவனிடம் பேரீச்சம் பழங்களைக் கொடுத்து அனுப்பினுர்கள்.

நடுக்கத்தை மறைத்துக் கொண்டு ராட்சச ஒட்டகத்திடம் சென்ற மகேந்திரன், பேரீச்சம் பழங்களை அதன் எதிரே வைத்தான். அதை மோந்து பார்த்து விட்டு வெறித்தனமாகக் கத்திய ராட்சச ஒட்டகம், மகேந்திரனைக் காலால் எட்டி உதைத்தது. அவன் அலறிக் கொண்டே தரையில் மயங்கி விழுந்தான். (தொடரும்)




பொற்கோயில்
12
முன் கதை: பொற்கோயிலை நோக்கிப் புறப்பட்ட மகுடபதியும், ராஜசேகரும், நித்யாவும் மூசா பாலைவனத்தை நோக்கிச் செல்கிறார்கள். அவர்களைத் தேடிக் கொண்டு முன்னாலேயே புறப்பட்டு விட்ட மகேந்திரன், பாலைவனத் தலைவன் மூசாவிடம் பிடி படுகிறான். அப்பொழுது மரணப் படுக்கையில் விழுந்து கிடக்கும் தலைவனின் மகனைக் காப்பாற்றுவதாகக் கூறி, பேரீச்சம் பழங்களுடன் ராட்சச ஒட்டகத்திடம் செல்கிறான் மகேந்திரன். அந்த ஒட்டகம் அவனைத் தாக்கி மயக்கம் அடையச் செய்கிறது. இனி....
பி.ஆர்.வரதராஜுலு



ராட்சச ஒட்டகம் பழங்களையோ, காய்களையோ தின்னாது என்பது உங்களுக்குத் தெரியும். ஆனால் உங்களுக்கு இன்னொன்று தெரியாது. ராட்சச ஒட்டகம், தானே போராடிக் கொன்ற மனிதனையோ, மிருகத்தையோ தான் தின்னும். அது மயங்கிக் கிடப்பவர்களைக் கொன்று தின்பது இல்லை. அதனால் அது மயங்கிக் கிடந்த மகேந்திரனைக் கொல்லாமல் போட்டு விட்டுப் போய் விட்டது.

சற்று நேரத்தில் மயக்கம் தெளிந்து எழுந்து உட்கார்ந்த மகேந்திரன், சுற்றிலும் பார்த்தான். கண்ணுக்கு எட்டிய தூரம் வரையில் ராட்சச ஒட்டகத்தைக் காண வில்லை. பாலைவனத்து மனிதர்களையும் காண வில்லை. 'தப்பித்துச் செல்வதற்கு இதுதான் நல்ல சமயம்' என்று எண்ணிக் கொண்டே நடையை எட்டிப் போட்டான் மகேந்திரன்.

• • •

"தலைவா! 'ராட்சச ஒட்டகம் எச்சில் படுத்திப் போட்ட பேரீச்சம் பழங்களைக் கொண்டு வருகிறேன்' என்று கூறிச் சென்ற மகேந்திரன், நம்மை ஏமாற்றி விட்டு ஓடி விட்டான்" என்ற செய்தியைத் தலைவன் மூசாவிடம் வந்து கூறினான் ஒரு பாலைவன மனிதன்.

அதைக் கேட்டதும் மூசாவின் கண்கள் சிவந்தன. "ஒரு சாதாரண மனிதன் ஏமாற்றி விட்டுப் போய் விட்டான் என்று கூற உனக்கு வெட்கமாக இல்லையா? முட்டாளே! என் முகத்தில் விழிக்காமல் தொலைந்து போ! இனிமேல் நம் பாலைவனத்தில் கால் எடுத்து வைப்பவர்களை உடனே வெட்டிக் கொன்று விடுங்கள்" என்றான்.

அப்பொழுது சில பாலைவன வாசிகள் மகுடபதியையும், ராஜசேகரையும், நித்யாவையும் பிடித்துக் கொண்டு வந்து மூசாவின் முன்னால் நிறுத்தி, "இவர்கள் நம் பாலைவனத்தில் அடி எடுத்து வைத்த அயோக்கியர்கள். இவர்களுக்குத் தண்டனை என்ன?" என்று கேட்டார்கள்.

"மரண தண்டனைதான்!" என்று கூறினான் மூசா.

"தலைவா! நாங்கள் உன்னுடைய பாலைவனத்தைக் கொள்ளை அடித்துக் கொண்டு போக வரவில்லை. நாங்கள் பொற்கோயிலுக்குப் போய்க் கொண்டு இருக்கிறோம். பாதையோடு போய்க் கொண்டு இருந்த எங்களை, உன்னுடைய ஆட்கள் வழி மறித்துப் பிடித்துக் கொண்டு வந்து உன் முன்னால் நிறுத்தி விட்டார்கள். எங்களைத் தயவுசெய்து விட்டு விடு" என்றான் மகுடபதி.

"நீங்கள் பொற்கோயிலுக்குப் போக முடியாது. எமலோகத்துக்குத்தான் போக வேண்டும்" என்று கத்திய மூசா, "இவர்களை ஈட்டியால் குத்திக் கொன்று விடுங்கள்" என்று ஆணை இட்டான்.



அச்சமயம் ஒருவன் வேகமாக ஓடி வந்து, "தலைவா! உங்கள் மகனின் நிலைமை வர வர மோசமாகிக் கொண்டு வருகிறது. இன்னும் இரண்டு நாழிகைப் பொழுதுக்குள் ராட்சச ஒட்டகம் எச்சில் படுத்திய பேரீச்சம் பழங்களைக் கொண்டு வந்து உங்கள் மகனுக்குக் கொடுக்கா விட்டால், பிழைக்கவே மாட்டானாம்! வைத்தியர் உங்களிடப் சொல்லி விட்டு வரச் சொன்னார்...." என்றான்.

"ஐயோ! நான் என்ன செய்வேன்?" என்று குலுங்கிக் குலுங்கி அழுதான் மூசா.

"தலைவா! கைதிகளாக இருக்கும் இவர்களை அதற்குப் பயன் படுத்தலாம் என்று எனக்குத் தோன்றுகிறது. நமக்கும், இவர்களுக்கும் அதிர்ஷ்டம் இருந்தால் இவர்கள் ராட்சச ஒட்டகம் எச்சில் படுத்திய பேரீச்சம் பழங்களைக் கொண்டு வருவார்கள். அதன் மூலம் உங்கள் மகனும் உயிர் பிழைப்பான். இவர்களும் உயிர் தப்பிப்பார்கள். அதை அவர்கள் செய்யத் தவறி விட்டால் ராட்சச ஒட்டகம் இவர்களைக் கொல்லும். நமக்கும் இவர்களைக் கொல்லும் வேலை மிச்சம் ஆகும்" என்று மூசாவின் ஆலோசனையாளன் கூறினான்



"நல்ல யோசனை! விவரமாகக் கூறி இவர்களை ராட்சச ஒட்டகத்திடம் அனுப்பி வை!" என்றான் மூசா.

அதன்படி ஆலோசனையாளன் அவர்களுக்கு விவரமாகக் கூற, அவர்கள் மூவரும் பேரிச்சம் பழங்களை ஒரு கூடையில் எடுத்துக் கொண்டு ராட்சச ஒட்டகத்தைத் தேடிப் புறப்பட்டார்கள்.

அவர்கள் சிறிது தூரம் சென்றதும் இரண்டு ராட்சச ஒட்டகங்கள் நின்று கொண்டு இருப்பதைப் பார்த்தார்கள். ஆனால் அவை அவர்களைக் கவனிக்க வில்லை. ராஜசேகர் மற்றவர்களை அங்கே நிற்கும்படி சொல்லி விட்டு, கையில் சில பேரிச்சம் பழங்களை எடுத்துக் கொண்டு அந்த ஒட்டகங்களை நெருங்கினான். பழங்களை அவற்றின் முன்னால் வீசினான்.

ராட்சச ஒட்டகங்கள் அவற்றை மோந்து பார்த்தன. 'அவை பழங்கள்' என்பதைப் புரிந்து கொண்டு வெறுப்புடன் தலை நிமிர்ந்து எதிரே நிற்கும் ராஜசேகரைப் பார்த்தன. அவனைக் கொல்வதற்காக வெறியுடன் பாய்ந்தன. ராஜசேகர் விலகிக் கொண்டான். அப்பொழுது பின்னால் இருந்து விரைந்து ஓடி வந்த மகுடபதி, ஒரு ராட்சச ஒட்டகத்தின் மீது பாய்ந்து ஏறி உட்கார்ந்து கொண்டு, அதன் கழுத்தைப் பலமாக அழுத்திப் பிடித்தான். அதைப் பார்த்துக் கோபம்

அடைந்த மற்றொரு ராட்சச ஒட்டகம் மகுடபதியைத் தாக்குவதற்கு ஓடியது. அப்பொழுது ராஜசேகர் மணலை வாரி அதன் கண்களில் வீசினான். அதனால் அது பார்வை தெரியாமல் சக்கரம் போலச் சுற்றிச் சுற்றி வந்து கத்தியது. அதைக் கண்டு பயந்த இன்னொரு ஒட்டகம், அங்கிருந்து ஓட்டம் பிடித்தது. அந்தச் சமயத்தில் அதன் மீது இருந்த மகுடபதி கீழே குதித்து, ராஜசேகரிடம் ஓடினான்.

கண்களில் மண் விழுந்து ரங்கராட்டினம் போலச் சுற்றிக் கொண்டு இருந்த இன்னொரு ராட்சச ஒட்டகத்தின் கண்களில் மேலும் மேலும் மணலை வாரி விட்டு வீசிக் கொண்டு இருந்தான் ராஜசேகர். கத்திக் கதறிப் பைத்தியம் பிடிக்கும் நிலைக்குப் போய் விட்ட அந்த ராட்சச ஒட்டகத்தின் முன்னால் பேரீச்சம் பழக் கூடையைக் கொண்டு போய் வைத்த மகுடபதி, பலமாக ஒரு கத்தல் போட்டு விலகி நின்று கொண்டான். அந்த ஒலியைக் கேட்டு, தன் எதிரி பக்கத்தில் இருப்பதாக நினைத்து விட்ட அந்த ராட்சச ஒட்டகம், அவனைக் கடிப்பதற்காகக் கீழே குனிந்தது. தரையில் இருந்த பேரீச்சம் பழக் கூடையைத் தன் எதிரி என்று எண்ணிய அந்த ஒட்டகம், தன் பெரிய வாயைத் திறந்து கூடையை மொத்தமாகக் கடித்தது.



வாயில் ரத்த வாடை படாமல் பழங்களின் ருசி பட்டவுடன், பழங்களை வெறுப்புடன் துப்பியது ஒட்டகம். அருகில் நின்று கொண்டு இருந்த மகுடபதி, அது துப்பிய பழங்களைக் கீழே விழ விடாமல் தன் கைகளில் பிடித்துக் கொண்டு ராஜசேகரிடம் வந்தான். பிறகு மூவரும் தலைவனிடம் சென்றார்கள்.

"தலைவா! நாங்கள் உன் கட்டளைப்படி ராட்சச ஒட்டகம் எச்சில் செய்த பேரீச்சம் பழங்களைக் கொண்டு வந்து இருக்கிறோம். இதை உன் மகனுக்குக் கொடு" என்று கூறி, கையில் இருந்த பேரீச்சம் பழங்களைக் கொடுத்தான் மகுடபதி.

அவற்றை ஆவலோடு வாங்கிய மூசா, தன் குடிசைக்கு ஆவேசமாக ஓடினான். அவன் அரை நாழிகைக்குப் பிறகு முக மலர்ச்சியுடன் திரும்பி வந்தான். "புதிய நண்பர்களே! என் மகன் பிழைத்து விட்டான். யாராலும் செய்ய முடியாத காரியத்தைச் சாதித்து, ராட்சச ஒட்டகம் எச்சில் படுத்திய பேரீச்சம் பழங்களைக் கொண்டு வந்த உங்களை, என்றும் நான் நன்றியுடன் நினைத்துக் கொள்வேன். இனி நீங்கள் தாராளமாகப் பொற்கோயிலுக்குப் போகலாம். உங்களுக்கு என்ன உதவி வேண்டும்?" என்று கேட்டான் மூசா.

"தலைவா! எங்களுக்கு எந்த உதவியும் தேவை இல்லை. பொற்கோயிலுக்குப் போகும் வழியைச் சொன்னால் போதும்" என்றான் மகுடபதி.

"சொல்கிறேன். இங்கே இருந்து மேற்குத் திசையில் பத்துக் கல் தொலைவு சென்றால், ஒரு அடர்ந்த காடு தென் படும். அந்தக் காட்டை நேராகக் கடந்து சென்றால் பொற்கோயிலை அடையலாம்" என்று கூறி விட்டு, குடிசைக்குள் சென்று ஆறு பேரீச்சம் பழங்களை எடுத்துக் கொண்டு திரும்பி வந்தான். அவற்றை மகுடபதியிடம் கொடுத்து, "இவற்றில் மெல்லிய கோடு உள்ள பழங்களைத் தின்றால் நீண்ட நேரம் தூக்கம் வராது. அந்தக் கோடு இல்லாத பழங்களைத் தின்றால் உடனே தூக்கம் வரும். இவை உங்களுக்கு நிச்சயம் பயன் படும். உங்கள் பயணம் வெற்றி பெற வாழ்த்துகிறேன்" என்று வாழ்த்தி, அவர்களை வழி அனுப்பி வைத்தான்.

மறு நாள் மகுடபதியும், ராஜசேகரும், நித்யாவும் அந்த அடர்ந்த காட்டை அடைந்தனர். சரியான பாதை இல்லை. அவர்கள் புதர்களை வெட்டிப் பாதையை உண்டு பண்ணிக் கொண்டு போய்க் கொண்டு இருந்தார்கள். அப்பொழுது அவர்கள் தங்களுக்கு முன்னால் நான்கு பேர் போய்க் கொண்டு இருப்பதைப் பார்த்தார்கள். ஆச்சரியத்துடன் அவர்களை நோக்கி வேகமாக நடந்தார்கள்.



அந்த நால்வரும் அவர்களைப் பார்த்துக் கலவரம் அடைந்து, அவர்களைத் தாக்குவதற்கு ஆயுதங்களை எடுத்தார்கள். அதைப் பார்த்துப் பதறிய மகுடபதி, "நாங்கள் உங்கள் எதிரிகள் அல்ல; பயணிகள், பொற் கோயிலுக்குப் போய்க் கொண்டு இருக்கிறோம். நீங்கள் எங்கே போய்க் கொண்டு இருக்கிறீர்கள்?" என்று கேட்டான்.

"நாங்களும் பொற்கோயிலுக்குத்தான் போய்க் கொண்டு இருக்கிறோம். இன்னும் இரண்டு நாட்களில் அங்கு ஒரு பெரிய உற்சவம் நடக்கப் போகிறது. இருபது வருடங்களுக்கு ஒரு முறை நடக்கும் அந்த உற்சவத்தைப் பார்ப்பதற்காக நாங்கள் நீண்ட தூரத்தில் இருந்து வருகிறோம்" என்றார்கள் அவர்கள்.

"நீங்கள் யார் என்பதையும், எங்கு இருந்து வருகிறீர்கள் என்பதையும் நாங்கள் தெரிந்து கொள்ளலாமா?" என்று கேட்டான் மகுடபதி.

"தாராளமாக! என் பெயர் சிவ சர்மா. கோசல நாட்டைச் சேர்ந்த எனக்கு, வாள் போரும் தெரியும்!" என்றான் சிவ சர்மா.

"என் பெயர் சாஞ்சி. நான் கோசல நாட்டின் வேடுவர் தலைவன்" என்றான் சாஞ்சி.

"என் பெயர் ரத்ன சிம்மன். எனக்கு வைர வியாபாரம். பொற்கோயில் உற்சவத்தைக் கண்டு களிப்பதற்காக நாங்கள் எல்லோரும் ஒன்று சேர்ந்து வந்தோம்" என்ற ரத்ன சிம்மன், நான்காவது ஆளைப் பேச விடாமல், ராஜ சேகரின் கை விரலில் இருந்த மோதிரத்தைப் பார்த்து விட்டு, "பல கோடிகள் மதிப்புள்ள இந்த மோதிரம் உனக்கு எப்படிக் கிடைத்தது? இந்த மோதிரத்தை எனக்குக் கொடுக்கிறாயா?" என்று ஆர்வத்துடன் கேட்டான். (தொடரும்)





# பொற்கோயில்

## 13

முன் கதை: பொற்கோயிலை நோக்கிப் புறப்பட்ட மகுடபதியும், ராஜசேகரும், நித்யாவும் காட்டுத் தலைவன் மூசாவிடம் விடை பெற்றுக் கொண்டு ஒரு அடர்ந்த காட்டில் போய்க் கொண்டு இருந்த பொழுது, பொற்கோயிலை நோக்கிச் சென்ற புதியவர்களான நால்வரைச் சந்திக்கிறார்கள். அவர்களில் சிவ சர்மாவும், சாஞ்சியும், ரத்ன சிம்மனும் மகுடபதிக்குத் தங்களை அறிமுகம் செய்து கொள்கிறார்கள். ரத்ன சிம்மன், அப்பொழுது ராஜசேகரின் மோதிரத்தைத் தனக்குத் தரும்படி கேட்கிறான். இனி....

பி.ஆர்.வரதராஜுலு



"ரத்ன சிம்மா! என்னை மன்னித்து விடு. இந்த மோதிரம் எனக்குப் பரிசாகக் கிடைத்த மோதிரம். இதை நான் உனக்குத் தர முடியாது" என்றான் ராஜசேகர்.

அப்பொழுது கடைசியாக நின்று கொண்டு இருந்த ஒரு இளைஞன் முன்னால் வந்து நின்று கொண்டு, "நீங்கள் எல்லாம் உங்களை அறிமுகம் செய்து கொண்டு விட்டீர்கள். நான் என்னை அறிமுகம் செய்து கொள்ள வேண்டாமா?" என்று எரிச்சலுடன் கேட்டு விட்டு, மகுடபதியைப் பார்த்தான். "நண்பா! நான் கோசல நாட்டு அமைச்சரின் மகன். என் பெயர் சித்ராங்கதன். நான் நீண்ட நாட்களாகவே பொற்கோயிலுக்குச் செல்ல வேண்டும் என்று கனவு கண்டு கொண்டு இருந்தேன். அந்தக் கனவை நனவாக்கத்தான் நான் இவர்களுடன் புறப்பட்டு வந்தேன். நான் சிறந்த வாள் வீரன்" என்று கூறி விட்டுப் பெருமையுடன் சிரித்தான்.

பிறகு மகுடபதி அவர்களுக்குத் தன்னையும், ராஜசேகரையும், நித்யாவையும் அறிமுகப் படுத்தி வைத்தான். அதற்குப் பிறகு அவர்களைப் பார்த்து, "நண்பர்களே! நடுக் காட்டில் உங்கள் நட்புக் கிடைத்ததை, நான் அதிர்ஷ்டமாகக் கருதுகிறேன். நீங்களும் எங்களுடன் சேர்ந்து பொற்கோயிலுக்கு வருகிறீர்கள். அது எங்களுக்கு மகிழ்ச்சியை அளிக்கிறது. இப்பொழுது முதல் நாம் அனைவரும் நண்பர்கள்.... சிவ சர்மா அவர்களே! பொற்கோயிலுக்குச் செல்லும் வழி உங்களுக்குத்தான் தெரியும். நாம் பொற்கோயிலுக்கு எப்பொழுது போய்ச் சேர்வோம்?" என்று கேட்டான்.

"இப்படியே தொடர்ந்து பிரயாணம் செய்தால் இன்று இரவுக்குள் நாம் பொற்கோயிலை அடைந்து விடுவோம். ஆனால் இன்று நாள் நன்றாக இல்லை. அதாவது இன்று அஷ்டமி. நாளை நவமி. ஆகையால் நாம் இரண்டு நாட்களுக்குப் பிறகுதான் பொற்

கோயிலை அடைய வேண்டும்!" என்றார் சிவ சர்மா.

"அப்படியானால் இரண்டு நாட்கள் வரை இந்தக் காட்டில் நாம் எங்கே தங்கி இருப்பது?" என்று கேட்டான் மகுடபதி.

"இங்கிருந்து இன்னும் சிறிது தூரம் சென்றால் ஒரு பாழடைந்த கோயில் காணப்படும். நாம் அங்கே இரண்டு நாட்கள் தங்கிய பிறகு பொற்கோயிலுக்குப் புறப்பட்டுச் செல்லலாம். அங்கே உண்பதற்குக் கனிகளும், பருகுவதற்கு நீரும் தாராளமாகக் கிடைக்கும்" என்றார் சிவ சர்மா.

"தங்கும் இடத்தில் அந்த இரண்டும்தான் முக்கியம். புறப்படுங்கள்" என்று கூறிக் கொண்டே நடக்க ஆரம்பித்தான் வேடுவர் தலைவன் சாஞ்சி.

மற்றவர்கள் அவனைப் பின்பற்றி நடந்தார்கள்.

அன்று மாலைக்குள் அவர்கள் அந்தப் பாழடைந்த கோயிலை அடைந்தார்கள். பிரயாணக் களைப்பால் அவர்கள் படுத்தும், உட்கார்ந்தும் ஓய்வு எடுத்துக் கொண்டார்கள்.

மகுடபதியும், சிவ சர்மாவும் அவர்களைப் போல ஓய்வு எடுத்துக் கொள்ளாமல் பழங்களைக் கொண்டு வருவதற்காகப் புறப்பட்டுச் சென்றார்கள்.

நித்யாவுக்குச் சற்று தள்ளி அமர்ந்து கொண்டு இருந்த சித்



ராங்கதன், திடீரென்று எழுந்து அவளிடம் வந்தான். "நித்யா! நீ மிகவும் அழகாக இருக்கிறாய். நான் உன்னைத் திருமணம் செய்து கொள்ள விரும்புகிறேன். உனக்குச் சம்மதமா?" என்று கேட்டான்.

ராஜசேகர் அதைக் கேட்டு சினத்துடன் எழுந்தான். "சித்ராங்கதா! நாம் நண்பர்கள் என்பதையும் நாம் கோயிலுக்குச் சென்று கொண்டு இருக்கிறோம் என்பதையும் மறந்து விட்டு, நீ ஏன் இப்படிப் பைத்தியக்காரத்தனமாக உளறுகிறாய்?" என்று படபடத்தான்.

"ராஜசேகர்! நான் உளற வில்லை. உண்மையைத்தான் சொன்னேன்.



நான் நித்யாவை அடைந்தே தீர் வேன். அதற்குக் குறுக்கே யார் நின்றாலும் நான் கொல்லாமல் விட மாட்டேன். நான் உன் தங்கையை பொற்கோயிலில் நிச்சயம் திரு மணம் செய்து கொள்ளப் போகி றேன். அதைத் தடுக்க ஆண்ட வனே வந்தாலும் நடக்காது" என்று ஆணவமாகக் கூறினான்..

ராஜசேகர் வெறியுடன் சித்ராங் கதன் மீது பாய்ந்து கீழே தள்ளி விட்டு, "திருட்டு நாயே! உன்னை என்ன செய்கிறேன், பார்!" என்று பல்லைக் கடித்தான்.

அப்பொழுது ரத்ன சிம்மன் அங்கு வந்து, "ராஜசேகர்! முதலில் உன் கை விரலில் உள்ள மோதிரத் தைக் கழற்றி என்னிடம் கொடுத்து விட்டு, பிறகு சித்ராங்கதனுடன் சண்டை போடு. உங்கள் போராட் டத்தில் விரலை விட்டு மோதிரம் எங்கேயாவது நழுவி விழுந்து விட் டால், பிறகு அது யாருக்கும் பயன் இல்லாமல் போய் விடும். பொற் கோயிலுக்குப் போய்ச் சேர்ந்த பிறகு உன்னைக் கொலை செய்தா வது உன் மோதிரத்தை நான் அடைந்தே தீர்வேன். அது அவசி யமா? யோசித்துப் பார். உடனே மோதிரத்தைக் கழற்றி என்னிடம் கொடுத்து விடு" என்றான்.

"நீங்கள் நண்பர்களா? நயவஞ்ச கர்களா? துரோகம் செய்ய உங்கள் மனம் எப்படித்துணிந்தது? சாஞ்சி! நீயாவது நியாயம் கூறு" என்று

சாஞ்சியைப் பார்த்துக் கேட்டான் ராஜசேகர்.

"சித்ராங்கதனும், ரத்ன சிம்மனும், நானும் ஒரே நாட்டைச் சேர்ந்தவர்கள். ஆகையால் நான் அவர்களைத்தான் ஆதரிக்க வேண்டும். ஆனால் அவர்களுக்காக நான் உன்னோடு போராட மாட்டேன். உன் பாடு! அவர்கள் பாடு! என்னை விட்டு விடு" என்று கூறி விட்டு ஒரு ஓரமாக ஒதுங்கிக் கொண்டான் சாஞ்சி.

அதற்குள் துள்ளி எழுந்த சித்ராங்கதன், ஓடிச் சென்று "வா, என்னுடன்!" என்று கூறி, நித்யாவின் கையைப் பிடித்து ஆவேசத்துடன் இழுத்தான்.

அதைக் கண்டு துடித்த ராஜசேகர், அவன் மீது பாய்ந்தான். அப்பொழுது ரத்னசிம்மன் அவனைத் தடுத்து நிறுத்திப் பலமாகப் பிடித்துக் கொண்டான். ராஜசேகரால் அவனுடைய பிடியில் இருந்து மீள முடியவில்லை. சித்ராங்கதன் கையில் சிக்கிக் கதறும் நித்யாவைக் காப்பாற்றவும் முடியவில்லை.

சாஞ்சி நடப்பதை எல்லாம் பார்த்து ரசித்துக் கொண்டு இருந்தான்.

சரியாக அதே நேரத்தில் சிவ சர்மாவுடன் அங்கு வந்த மகுடபதி, ராஜசேகரையும், நித்யாவையும் பிடித்துக் கொண்டு இருந்த சித்ராங்கதனையும், ரத்ன சிம்மனையும் அடித்துக் கீழே தள்ளினான்.



அவர்கள் இருவரும் மண்ணைக் கவ்வி விட்டு, எழுந்து நின்ருர்கள். மகுடபதியின் பலத்தை ஒரே அடியின் மூலம் உணர்ந்து கொண்ட அவர்களின் உடல் நடுங்கியது.

மகுடபதியின் கோப விழிகள் அவர்களைச் சுட்டு எரித்தன. "நாம் நண்பர்களாகப் புறப்பட்டோம். ஆனுல் நீங்கள் பகைவர்களாக மாறி விட்டீர்கள். உங்களைக் கொல்லாமல் விட்டால் பாவம். ஆனல் நாம் நண்பர்களாகச் செல்ல உறுதி செய்து கொண்டு இருப்பதால், உங்களை இதோடு விடுகிறேன். முதலில் இந்த இடத்தை விட்டுச் செல்லுங்கள்" என்று கூச்சலிட்டான்.

அவர்கள் நடுங்கிக் கொண்டே அந்த இடத்தை விட்டு நகர்ந்தார்கள். சாஞ்சியும் திருடனைப் போல அங்கிருந்து நழுவினன்.

ராஜசேகர் நன்றிப் பார்வையுடன் மகுடபதியிடம் வந்தான். "மகுடபதி! எனக்கு அவர்கள் மீது சந்தேகமாக இருக்கிறது. உண்மையில் அவர்கள் பொற்கோயிலுக்குச் செல்கிருர்களா? அல்லது நம்மை பொற்கோயிலுக்குப் போக விடாமல் வழி தவறி அழைத்துக் கொண்டு வந்து இருக்கிருர்களா? ஒன்றும் புரிய வில்லை. சித்ராங்கதன் நித்யாவைத் திருமணம் செய்து கொள்ள வேண்டும் என்கிருன். ரத்ன சிம்மன் என் மோதிரத்தைக் கேட்கிருன். அவர்களால் நமக்கு ஆபத்து நேரலாம் என்று என் மனம் எச்சரிக்கிறது மகுடபதி!" என்ருன்.

"ஆபத்து நமக்குப் புதிது இல்லையே ராஜசேகர்! இன்று இரவு நாம் இங்கு ஓய்வு எடுத்துக் கொள்வோம். பொழுது விடிந்ததும் அவர்கள் யார் என்பதை அறிய முயல்வோம். அது வரை நீ வீண் கலவரம் அடையாதே!" என்று கூறி விட்டு, கொண்டு வந்து இருந்த பழங்களை நித்யாவிடமும், ராஜசேகரிடமும் உண்பதற்காகக் கொடுத்தான்.

இரவு நேரம். 'ஐயோ' என்ற மரண ஓலத்தைக் கேட்டு நன்ருக உறங்கிக் கொண்டு இருந்த மகுடபதி, திடுக்கிட்டுக் கண் விழித்தான். சுற்றுமுற்றும் பார்த்தான்.

அவன் அருகே படுத்து இருந்த ராஜசேகரைக் காணவில்லை. ராஜசேகரின் ஓரமாகப் படுத்து இருந்த நித்யா, மகுடபதியைப் போலவே திடுக்கிட்டுக் கண் விழித்து எழுந்து உட்கார்ந்து இருந்தாள்.

இப்பொழுது மகுடபதிக்குப் புரிந்து விட்டது. ராஜ சேகருக்கு என்னவோ நேர்ந்து விட்டது. அது என்ன? பரபரப்போடு எழுந்து வெளியே ஓடினன். அவனைத் தொடர்ந்து அலறித் துடித்துக் கொண்டு நித்யாவும் ஓடினுள்.

மரங்களுக்கு நடுவே சிவ சர்மா, சாஞ்சி, சித்ராங்கதன், ரத்ன சிம்மன் ஆகியோரின் தலைகள்



தெரிந்தன். மகுடபதி ஓங்கிய வாளுடன் அந்த இடத்தை நோக்கி ஓடினன். அவனைக் கண்டதும் அங்கு இருந்தவர்கள் அச்சத்துடன் விலகிக் கொண்டார்கள். அவர்கள் நடுவே தரையில் இரத்த வெள்ளத்தில் பிணமாகக் கிடந்தான் ராஜசேகர்.

மகுடபதியின் பின்னல் ஓடி வந்த நித்யா, அந்தக் கோரக் காட்சியைப் பார்த்து விட்டு, "அண்ணு!" என்று முகத்தை மூடிக் கொண்டு கதறினள்.

மகுடபதிக்கு அழுகை வரவில்லை. அதற்குப் பதிலாக, அடங்காத கோபம் கொப்பளித்துக் கொண்டு வந்தது. "துரோகிகளே! உங்களில் யார் என் நண்பனைக் கொன்றது?" என்று அவர்களை நோக்கிக் கர்ஜித்தான்.

"நாங்கள் யாரும் ராஜசேகரைக் கொல்ல வில்லை. அவனுடைய மரண ஓலத்தைக் கேட்டு, நாங்கள் இங்கே ஓடி வந்தோம். பார்த்தோம் அவன் பரிதாபமாகச் செத்துக் கிடக்கும் காட்சியை" என்று அவர்கள் கூறினர்கள்.

"யாரிடம் நாடகம் ஆடுகிறீர்கள்? உங்களில் சித்ராங்கதன் நித்யாவைப் பிடித்து இழுத்தான். அதைக் கண்டித்த ராஜசேகரின் மேல் அவனுக்குப் பகை. ராஜசேகரின் மோதிரத்தைக் கேட்டான் ரத்ன சிம்மன். ராஜசேகர் அதைக் கொடுக்கச் சம்மதிக்கவில்லை. அதனல் அவன் மீது ரத்ன சிம்மனுக்குப் பகை. ஆக உங்களில் ஒருவன்தான் ராஜசேகரைக் கொன்று இருக்கிறீர்கள். யார் அந்தக் கொலைகாரன்?" என்று கத்தினன் மகுடபதி.

"மகுடபதி! மோதிரத்திற்காக நான் ராஜசேகரைக் கொன்று இருந்தால், அவன் கையில் உள்ள மோதிரத்தை இது வரை விட்டு வைத்து இருப்பேனு?" என்று கேட்டான் ரத்னசிம்மன். (தொடரும்)





# பொற்கோயில்

## 14

முன் கதை : பொற்கோயிலுக்குப் போகும் வழியில் மகுடபதியும், ராஜசேகரும், நித்யாவும், சிவ சர்மா, சாஞ்சி, ரத்னசிம்மன், சித்ராங்கதன் ஆகிய நால்வருடன் சேர்ந்து ஒரு பாழடைந்த கோயிலில் தங்கி இருக்கிறார்கள். இரவு நேரம். உறங்கிக் கொண்டு இருந்த மகுடபதி மரண ஓலத்தைக் கேட்டு வெளியே ஓட, ராஜசேகர் கொலைப் பட்டுக் கிடப்பதைப் பார்க்கிறான். அதைக் கண்டு நித்யா அலறுகிறாள். அங்கே காணப்பட்ட சிவ சர்மாவையும், மற்றவர்களையும் சந்தேகத்துடன் விசாரிக்கிறான் மகுடபதி. இனி....

பி.ஆர்.வரதராஜுலு



"மகுடபதி! நாங்கள் நான்கு பேர். நீயோ ஒருவன். நாங்கள் ராஜசேகரைக் கொன்று இருந்தால், அதே சமயத்தில் உன்னையும் கொல்லாமல் விட மாட்டோம். இப்பொழுது கூட நாங்கள் நினைத்தால் உன்னைக் கொல்ல முடியும். ஆனால் நாங்கள் உன்னைக் கொல்லவில்லை. அதற்குப் பதிலாக நீ கேட்கும் சந்தேகக் கேள்விகளுக்கு நாங்கள் சமாதானம் சொல்லிக் கொண்டு இருக்கிறோம். இப்பொழுதாவது எங்களை நீ நம்புகிறாயா? இல்லையா? சொல்" என்று ஆத்திரத்துடன் கேட்டான் சித்ராங்கதன்.

மகுடபதி இப்பொழுதும் அவர்களை நம்பத் தயாராக இல்லை. சித்ராங்கதன் கேட்ட கேள்விக்குப் பதில் சொல்லாமல், நித்யாவை அழைத்துக் கொண்டு கோயில் மண்டபத்துக்குத் திரும்பினான்.

பொழுது புலர்ந்தது. மகுடபதி உறக்கம் கலைந்து எழுந்தான். அவனுக்கு முன்னாலேயே நித்யா கண் விழித்து விட்டாள்.

மகுடபதி சுற்றுமுற்றும் பார்த்தான். அங்கு சிவ சர்மாவோ மற்றவர்களோ இல்லை. அவர்கள் எங்கே போய் விட்டார்கள்? பார்வையை வெளியே ஓட்டினான். கோயில் வாசலில் சிவ சர்மா சூரிய நமஸ்காரம் செய்து கொண்டு இருந்தார்.

மகுடபதி நித்யாவை அழைத்துக் கொண்டு சிவ சர்மாவிடம் சென்றான். "சர்மா! உங்கள் குழுவைச் சேர்ந்த மற்ற மூவரும் எங்கே?" என்று கேட்டான்.

"மகுடபதி! அவர்கள் ராஜசேகரைக் கொன்ற கொலைகாரனைத் தேடிப் போய் இருக்கிறார்கள். கொலைகாரன் அருகில் எங்காவது ஒளிந்து கொண்டு இருக்க வேண்டும். அவனைக் கண்டு பிடித்து உன் முன்னால் கொண்டு வந்து நிறுத்தி, 'ராஜசேகரைக் கொன்றவர்கள் நாங்கள்தான் என்று அநியாயமாக எங்கள் மீது குற்றம் சாட்டினாயே! இப்பொழுது உண்மையான கொலைகாரனைப் பார்' என்று உன்னிடம் கேட்க அவர்கள்

நடிக்கிறார்கள். இப்பொழுதாவது அவர்கள் நல்ல எண்ணத்தை நீ புரிந்து கொண்டாயா?" என்று கேட்டார் சிவ சர்மா.

'அவர்களா நல்ல எண்ணம் உள்ளவர்கள்? அந்த வஞ்சகர்கள் என் முகத்தில் விழிக்க அஞ்சி, எங்கேயாவது போய் மறைந்து இருப்பார்கள்' என்று எண்ணிக் கொண்டான் மகுடபதி.

பகல் மறைந்து மாலை நேரம் வந்தது. வெளியில் சென்று இருந்த அந்த மூவரும் இன்னும் திரும்பவில்லை. நித்யாவை அழைத்துக் கொண்டு அவர்களைத் தேடி வெளியே கிளம்பினான் மகுடபதி. இருட்டத் தொடங்கியது. அவர்களை எங்கும் காணாமல் ஏமாற்றத்துடன் கோயில் மண்டபத்துக்குத் திரும்பினார்கள். அப்பொழுது சிவ சர்மாவும், அந்த மூவரும் பெரிதாகச் சிரித்துப் பேசிக் கொண்டு இருந்தார்கள். மகுடபதியைப் பார்த்தவுடன் அவர்கள் பேச்சை நிறுத்தி விட்டனர்.

மகுடபதி அவர்களை எரிச்சலுடன் பார்த்தான். "நீங்கள் அதிகாலையில் எங்கே புறப்பட்டுச் சென்றீர்கள்?" என்று கேட்டான்.

"நேற்று இரவு ராஜசேகரைக் கொன்ற கொலைகாரனைத் தேடிச் சென்றோம். பகல் முழுவதும் ஒரு இடம் விடாமல் தேடிப் பார்த்தோம் அவனைக் கண்டு பிடிக்க முடியவில்லை!" என்றான் சாஞ்சி.



'இவர்கள் அழகாக நடிக்கிறார்கள். ராஜசேகரைக் கொன்ற பாவிகள் இவர்களாகத்தான் இருக்க வேண்டும். இன்று இரவு இவர்கள் என்னையும், நித்யாவையும் கொன்றாலும் கொல்லலாம். அதனால் இன்று இரவு காட்டுத் தலைவன் கொடுத்த நான்கு மெல்லிய கோடுகள் உள்ள பேரீச்சம்பழத்தைக் கொடுத்து இவர்களை நன்றாகத் தூங்க வைக்க வேண்டும். நாளைப் பொழுது விடிந்ததும் நித்யாவை அழைத்துக் கொண்டு இவர்களை விட்டுப் போய் விட வேண்டும், என்று மனதில் நினைத்துக் கொண்டான் மகுடபதி.



சிறிது நேரம் சென்றது. மகுடபதி சிவ சர்மாவுக்கும் மற்றவர்களுக்கும் உறக்கத்தைத் தரக்கூடிய மெல்லிய கோடுகள் உள்ள பேரீச்சம்பழத்தைக் கொடுத்தான். அவர்கள் ஆவலோடு அவற்றை வாங்கித் தின்ருர்கள். மகுடபதியும், நித்யாவும் நல்ல பேரீச்சம்பழத்தைத் தின்ருர்கள்.

மெல்லிய கோடுகள் நிறைந்த பேரீச்சம்பழத்தைத் தின்ற சிவ சர்மாவும், மற்றவர்களும் சிறிது நேரத்தில் நன்ருகக் குறட்டை விட்டுத் தூங்க ஆரம்பித்து விட்டார்கள். நித்யாவும் கூட உறங்கி விட்டாள். மகுடபதி உறங்க வில்லை.

நள்ளிரவு ஆயிற்று. காலடிச் சத்தம் கேட்டது. உறங்காமல் கண்களை மூடிக் கொண்டு படுத்து இருந்த மகுடபதி, அந்தச் சத்தத்தைக் கேட்டுக் கண் விழித்துப் பார்த்தான்.

ஒரு உருவம் கோயில் மண்டபத்திற்குள் திருட்டுப் பூனையைப் போல வந்து ஆழ்ந்து உறங்கிக் கொண்டு இருந்த நித்யாவைத் தூக்கிக் கொண்டு வெளியேறியது. அதைக் கவனித்துக் கொண்டு இருந்த மகுடபதி, மெதுவாக எழுந்து அந்த உருவத்தைப் பின் தொடர்ந்து நடந்தான்.

முன்னல் போய்க் கொண்டு இருந்த அந்த உருவம், தன் பின்னல் எழுந்த காலடி ஓசையைக் கேட்டு, நித்யாவைக் கீழே படுக்க வைத்து விட்டுத் திரும்பிப் பார்த்தது.

நிலவு ஒளியில் அந்த உருவத்தைப் பார்த்து ஆச்சரியம் அடைந்தான் மகுடபதி. "மகேந்திரா! நீயா?.... நேற்று இரவு என் நண்பன் ராஜசேகரைக் கொன்றவன் நீ தானே?" என்று கேட்டான்.

"ஆம். நான்தான். ஆனல் நான் ராஜசேகரைக் கொல்ல நினைக்க வில்லை. உன்னைக் கொல்லத்தான் நான் நேற்று இரவு வந்தேன். அடையாளம் புரியாமல் ராஜசேகரைத் தூக்கிக் கொண்டு போனேன். அவனைக் கொன்ற பிறகுதான் அவன் நீ இல்லை என்பது புரிந்

தது. இன்று நித்யாவைத் தீர்த்துக் கட்டி விட்டு நாளைக்கு உன்னைக் கவனிக்கலாம் என்று நினைத்தேன். அதற்குள் நீயே என்னைத் தேடிக் கொண்டு வந்து விட்டாய். முதலில் உன்னைக் கவனிக்கிறேன். பிறகு நித்யாவைத் தீர்த்துக் கட்டு கிறேன்'' என்று கூறிக் கொண்டே மகுடபதியை நோக்கிப் பாய்ந்து வந்தான் மகேந்திரன்.

அப்பொழுது அருகில் இருந்த ஒரு குளத்தில் அவன் தடுமாறி விழுந்தான். அந்தக் குளத்தில் புதை சேறு நிறைந்து இருந்தது. மகேந்திரன் அதில் விழுந்ததும், புதை சேறு அவனை உள்ளே இழுத் தது.

"மகுடபதி! என்னைக் காப் பாற்று'' என்று கதறினான் மகேந் திரன்.

"உன்னைக் காப்பாற்றினால் பாவம். நீ நம் அரசருக்குத் துரோகம் செய்து ஆட்சியைக் கைப்பற்ற நினைத்தாய். என் நண் பர்களை எல்லாம் கொன்றாய். என்னைப் பொற்கோயிலுக்குப் போக விடாமல் செய்ய இதுவரை சூழ்ச்சிக்கு மேல் சூழ்ச்சியாகச் செய்தாய். உன் ஆட்டத்தையும் உயிர் ஓட்டத்தையும் ஆண்டவனே இப்படி முடிவு செய்த பிறகு, நான் அதற்குக் குறுக்கே நிற்கலாமா? நீ சாகத்தான் வேண்டும்'' என்று மகுடபதி சொல்லிக் கொண்டு இருந்த பொழுதே....



கொஞ்சம் கொஞ்சமாகச் சேற் றில் மூழ்கிக் கொண்டு இருந்த மகேந்திரன், கடைசியில் முழுமை யாக மூழ்கிப் போனான்.

அதுவரை படபடத்த நெஞ்சுடன் அந்தக் கோரக் காட்சியைப் பார்த் துக் கொண்டு இருந்த நித்யா, மன தைத் தைரியப் படுத்திக் கொண் டாள். மகுடபதியின் அருகில் வந் தாள். "மகுடபதி! கோயில் மண்ட பத்தில் படுத்துக் கொண்டு இருந்த நான் இங்கே எப்படி வந்தேன்?'' என்று கேட்டாள்.

நடந்ததை எல்லாம் விவரமாகச் சொன்னான் மகுடபதி. பிறகு, "நித்யா! மகேந்திரனிடம் இருந்து



நாம் தப்பித்துக் கொண்டு விட்டோம். ஆனால் கோயில் மண்டபத்தில் இருக்கும் சிவ சர்மாவின் ஆட்களிடம் நாம மாட்டிக் கொண்டு இருக்கிறோம். அவர்கள் நல்லவர்கள் இல்லை. அவர்களை விட்டு நாம் தனியாகப் பிரிந்து போய் விட வேண்டும். இனி அவர்கள் முகத்தில் விழிக்கக் கூடாது. வா, பொற்கோயிலை நோக்கிப் புறப்படுவோம்" என்றான்.

"பொற்கோயிலுக்கா? அதற்குச் செல்லும் வழி நமக்குத் தெரியாது. இரவாக வேறு இருக்கிறது. எப்படிச் செல்வது?" என்று கேட்டாள் நித்யா.

"வரை படத்தின் மூலம் எனக்கு வழி தெரியும். இப்படியே கிழக்குத் திசையில் நடந்தால் பொற்கோயிலை அடையலாம். இன்னும் கொஞ்ச நேரத்தில் பொழுது விடியப் போகிறது. நாம் நிற்காமல் நடந்தால் சூரியோதத்திற்குள் பொற்கோயிலை அடைந்து விடலாம்" என்றான் மகுடபதி.

"நான் தயார்" என்றாள் நித்யா.

மகுடபதி முன்னே நடக்க, நித்யா பின் தொடர்ந்து நடந்தாள்.

பொழுது விடிந்தது. கிழக்கு வானம் சிவந்தது. அதற்குள் 'தக தக' என்ற ஒளியுடன் சூரியன் உதித்தான். மகுடபதியும், நித்யாவும் பொற்கோயில் இருக்கும் கிராமத்தை அடைந்தார்கள்.

மரங்கள் சூழ்ந்த அந்தக் கிராமத்திற்குள் சூரியனால் தன் கதிர்க் கரங்களை நீட்டி நுழைய முடியவில்லை. எங்கும் இருட்டாக இருந்தது. கிராமத்தின் நடுப் பகுதிக்கு வந்ததும் திடீரென்று இருட்டு மறைந்தது கண்களைக் கூச வைக்கும் பொன் ஒளி எங்கும் படர்ந்தது.

'அந்த அதிசய ஒளிக்கு என்ன காரணம்?' என்று நினைத்துக் கொண்டே ஏறிட்டுப் பார்த்தான் மகுடபதி.

எதிரே பொற்கோயில் 'பள பள' என்று மின்னியது. கோபுர கலசங்களில் நவரத்தினங்கள் ஒளி வீசின. முழுவதும் தங்கத்தால் ஆன அந்தப் பொற்கோயிலை மகுடபதி



மகிழ்ச்சியுடனும், பரபரப்புடனும் பார்த்தான். "நித்யா! நம்முடைய கனவு பலித்து விட்டது. நாம் பொற்கோயிலுக்கு வந்து விட்டோம். வா, கோயிலுக்குப் போகலாம்" என்று கூறி, நித்யாவைக் கோயிலுக்குள் அழைத்துக் கொண்டு சென்றான்.

கர்ப்பக்கிரகத்திற்குள் இருந்த அழகிய கிருஷ்ணன் சிலைக்கு, அர்ச்சகர் தீபாராதனை செய்து கொண்டு இருந்த பொழுது அவர்கள் உள்ளே போய்ச் சேர்ந்தார்கள். இருவரும் கன்னத்தில் போட்டுக் கொண்டு கிருஷ்ணனை வணங்கினார்கள்.

அர்ச்சகர் பூஜையை முடித்துக் கொண்டு வந்தார். மகுடபதி அவரைச் சந்தித்து, தான் அங்கு வந்த விஷயத்தை விவரமாகக் கூறினான்.

அதைக் கவனமாகக் கேட்ட அர்ச்சகர், "இளைஞனே! உன் அரசனின் உயிரைக் காப்பாற்றுவதற்காக நீ மந்திர புஷ்பத்தைப் பெற்றுப் போகலாம். மந்திர புஷ்பத்தின் மகிமை அபாரமானது" என்று கூறி விட்டு ஒரு மந்திர புஷ்பத்தை எடுத்துக் கொண்டு வந்து மகுடபதியிடம் கொடுத்தார். அதை அவன் வணக்கத்துடன் பெற்றுக் கொண்டான்.

"இளைஞனே! மந்திர புஷ்பம் உன் கையில் இருக்கும் வரை உனக்கு எந்தக் கஷ்டமும் வராது. பகவான் கிருஷ்ணனைப் பிரார்த்தனை செய்து கொண்டு, எங்கே போக வேண்டும் என்று நினைத்தாலும், ஒரே கணத்தில் நீ அங்கே போய் விடலாம்" என்றார் அர்ச்சகர்.

மகுடபதியும், நித்யாவும் அவருக்கு நன்றி சொல்லி விட்டுக் கோயிலை விட்டு வெளியே வந்தார்கள்.

மகுடபதி மந்திர புஷ்பத்தைக் கையில் வைத்துக் கொண்டு, கிருஷ்ணனைத் தியானித்துக் கொண்டு, "நாங்கள் மணிப்பூர் போக வேண்டும்" என்று நினைத்தான்.

மறு கணம் அவர்கள் மணிப்பூர் அரண்மனையில் இருந்தார்கள்.

மகுடபதி நித்யாவை அழைத்துக் கொண்டு மன்னர் படுத்து இருந்த அறைக்குச் சென்றான். படுக்கையில் நலிந்தும் மெலிந்தும் கிடந்த மன்னரின் மூக்கின் அருகே மந்திர புஷ்பத்தைக் காட்டினான் மகுடபதி. மந்திர புஷ்பத்தின் வாசனையை நுகர்ந்த மன்னர், வேகமாக எழுந்து உட்கார்ந்தார். "யாராலும் தீர்க்க முடியாத என் வியாதியை இந்த இளைஞன் தீர்த்து விட்டான்...." என்று அவர் உற்சாகத்துடன் கூவினார்.

அப்பொழுது மந்திர புஷ்பம் மாயமாக மறைந்தது.

"இதெல்லாம் என்ன? துரோகி மகேந்திரன் எங்கே?" என்று கேட்டார் மன்னர்.

"சொல்கிறேன்" என்று கூறிய மகுடபதி, எல்லா விஷயங்களையும் விவரமாகக் கூறினான்.

எல்லாவற்றையும் கேட்ட மன்னர், "மகுடபதி! துரோகி மகேந்திரனுக்குத் தகுந்த தண்டனை கிடைத்தது. நாட்டுப் பற்றும், ராஜ பக்தியும் நிறைந்த உன்னால் எனக்கு நோய் தீர்ந்தது. என்னைக் காப்பாற்றிய நீதான் இந்த நாட்டைக் காப்பாற்றக் கூடிய வலிமை பெற்றவன். உன்னை என் மகனாக ஏற்றுக் கொண்டு உனக்கு மகுடம் சூட்டுகிறேன். சகோதரர்களை இழந்து அனாதையாக நிற்கும் உனக்கு நித்யாவை மணம் முடித்து வைக்கிறேன். அமைச்சரே! இந்த மகிழ்ச்சியான செய்திகளை நாட்டு மக்களுக்கு உடனே அறிவியுங்கள்" என்று கட்டளை இட்டார்.

மகுடபதியை நாணத்துடன் பார்த்தாள் நித்யா.

மன்னரை நன்றியுடன் பார்த்தான் மகுடபதி.

"வாழ்க மகுடபதி!" என்று வாழ்த்து இசைப்பது போல அங்கே மெல்லத் தவழ்ந்து வந்தது பூங்காற்று.

(முடிந்தது)




பொற்கோயில்
பாலமித்ரா☆தொடர்
படக்கதை பகிர்வுகள்